வானதி
பதிப்பகம்

# உண்மையின் தரிசனம்



லா.ச.ராமாமிர்தம்

# உண்மையின் தரிசனம்

லா. ச. ராமாமிருதம்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு: செப்டம்பர் 1990

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை: ரூ. 17-00

நேரு அச்சகம் 48 அம்மையப்பன் தெரு சென்னை-600 014

சப்தரிஷிக்கு

அப்பா

# ஒரு சாஸனம்

இந்தப் புத்தகத்தின் பின்னால் ஒரு சின்ன விவரம் இருக்கிறது. சின்னது; ஆனால் எனக்கு அதன் பாதிப்பு அதிகம்.

ஸாஹித்ய அகாதெமி விருது (1989) எனக்கு என்ற சேதி TVஇல் வந்த அன்றிரவு எனக்குத் தூக்கமில்லை. பரபரப்பு மட்டுமன்று, இன்னும் ஏதோ காத்திருக்கிறது எனும் உள்ளுணர்வு. இது போல எனக்கு நேர்வதுண்டு. அதுபோன்ற நேரங்கள் எனக்கு எப்பவும் பிடித்தமாயிருந்தன என்று சொல்வதற்கில்லை.

விழித்திருந்த அலுப்பிலேயே கண்ணயர்ந்திருக்கிறேன். எந்நேரம், அறியேன். தட்டியெழுப்பினாற்போல் வெடுக்கென விழிப்பு. மூளையுள் ரத்தம் வேகமாய்ப் பாய்வதுபோல், 'கிர்ர்ர்ர்— எழுந்து உட்கார்ந்து இரு கைகளிலும் தலையைப் பிடித்துக்கொண்டேன். மண்டைக்குள் ஒரு எண்ணம் மின்னலடித்தது.

உன் எழுத்துக்கு நீ முடிவு காணப்போவதில்லை.

அதற்கு உனக்கு இனி நேரமில்லை.

இதென்ன 'கொலம்பஸ்'ஸா உங்கள் உதட்டோரத்தில் ஏளனம் துளிப்பது காண்கிறேனோ?

கூடவே இன்னொரு தெளிவு. மூளையுள் ரத்தத்தின் திடீர் அலைபாயல் என நான் எண்ணியது (ஒரு வேளை) அதுமட்டுமல்ல. கூடவே நாளடைவில், சிறுகச் சிறுகச் சேர்ந்து, இன்னமும் சேர்ந்துகொண்டே, உரிய வேளையில் வெளிப்படக் காத்திருக்கும் கதைகள், நாவல்கள், எண்ணங்கள், கருத்துக்கள் (ideas), சொல் சித்திரங்கள், சொற் சோதனைகள் ஏற்கெனவே நான் எழுத உத்தேசித்திருப்பவை, இனியும் எனக்குத் தோன்ற இருப்பவை, கருவூலங்கள், முழு உருவங்கள்—அத்தனையின் ஆடிப்பெருக்கு.

ஆனால் இனி எனக்கு நேரமில்லை.

இது 'கொலம்பஸ்' இல்லைதான். ஆனாலும், தெரிந்த உண்மையே, அதன் முழு உரத்தில் கன்னத்தில் "பளீர்" அறையும் வேளையும் உண்டு. எப்போது அறைந்தாலும் அறை எதிர்பாராததுதான். வலிக்கத்தான் செய்கிறது.

கூடவே சொல்கிறேன். எழுதுவதற்கு விஷயத்துக்கு என்றுமே நான் பஞ்சப்பட்டதில்லை. 'எழுத்தடைப்பு'—Writers Block என்று சொல்வார்கள். இதுவரை எனக்கு நேர்ந்ததில்லை. காரணம், ஒருவேளை, நான் மெதுவாய் எழுதுபவன்தான். ஆனால் ஓயாமல் எழுதிக்கொண்டிருப்பவன் தினம், சங்கல்பமாக வெள்ளைக் காயதத்தைக் கறுப்பாக்குகிறேனோ இல்லையோ, நெஞ்சில் எழுத்து கிளைத்துக்கொண்டேயிருக்கும். இது என்னால் தவிர்க்க முடியாத நிலை...தேக

ரீதியில் சிரமமான நிலை...ஆனால் அதில்தான் உற்சாகம் இருக்கிறது. என் கற்பனை திடீர் திடீர் வெள்ளம் புரள்வதில்லை.

ஆனால் ஊற்று வற்றியதில்லை.

கவலை வந்ததும், முதலில் இருப்பதை ஒன்று சேர்த்து ஒழுங்குபடுத்தியாக வேண்டும் அவசியம் தோன்றிவிட்டது. அந்த மனநிலையில் இதோ என் முதல் கட்டுரைத் தொகுதியை உங்கள் முன் வைக்கிறேன்.

எழுத்தாளனின் சொத்து அவனுடைய எழுத்துத்தான். அதாவது எழுத்துவழி அவனின்று வெளிப்பட்ட அவன் எண்ணங்கள், ஆசைகள், ஆசாபங்கங்கள், லக்ஷியங்கள், லக்ஷியங்களின் சிதைவுகள், அன்புகள், துரோகங்கள்—இழைத்தவை, இழைக்கப்பட்டவை சேர்த்து—அபிமானங்கள், வைராக்யங்கள்—ஹ்ம்...

கதை, கவிதை, கற்பனை என்கிற பூச்சுக்களுக்கடியில் நெளிவது, இழைவது, இயங்குவன அவைகளின் அப்பட்டத்தில் எண்ணங்கள்.

எண்ணங்கள் எண்ணியவை எண்ணியபின் எண்ணியவைக்குப் பின்வாங்கல் இல்லை அப்படிய மாற்றுக்கள் பின்வாங்கல்களை எண்ணினாலும் அவை வேறு எண்ணங்கள், விருத்திகள்.

எண்ணங்கள் அழிவற்றவை.

அழிவற்ற இந்த சொத்து பங்காகி, பங்காளரிடம் மேலும் மேலும் விருத்தியாகி, என் எண்ணங்களின் வியாபகத்தின் மூலம், அமரத்வத்துக்கு ஆசைப்படுகிறேன். உயிரின் லக்ஷியம், இயல்பே அமரத்வந்தான்.

சொத்தென்னவோ சேர்த்தபோது எனக்குத் தான். ஆனால் என்னோடு எடுத்துக்கொண்டு போகமுடியாதே! ஆகவே பங்காகட்டும். அதுவும் சாதனைதான்.

சொத்து என் கையில் ஒரு விசனமும் உறுத்து கிறது. என் அறியாமை, அஜாக்ரதை, முன் யோசனையின்மையால், எழுத்துத் துறையில் இந்த ஐம்பது வருடங்களுக்கு மேம்பாடான ஈடுபாடில் குறைந்தது பதினைந்து ஆக்கங்கள் (அச்சானவை) அங்குமிங்குமாய்ச் சிதறுண்டு காணாமல் போய், இன்றுவரை கிடைக்கவில்லை. தேடிக்கொண்டே யிருக்கிறேன். நம்பிக்கை குறைந்துகொண்டே வருகிறது

என் காணாமல் போன குழந்தைகள்.

தொகுக்கும் காரணத்தில், இந்தப் புத்தகத்தின் விஷயங்களை மீண்டும் படிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டபோது, எனக்கு என் கட்டுரைகளுக்கும் கதைகளுக்கும் பிரமாத வித்யாசம் தெரியவில்லை. மனம் எப்படிப் பழக்கப்பட்டிருக்கிறதோ அப்படித் தான் நினைப்பு. நினைப்பின் படித்தான் அதன் எழுத்து.

'நான்' இல் ஆரம்பித்து 'எழுத்தாளன் பாடும் கீதம்' வரைக் காலவீச்சு ஏறக்குறைய நாற்பது வருடங்கள்.

'சொல்லோடு என் உறவு' இந்தக் கட்டுரை, ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன், தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகம் நடத்திய இலக்கியப் பட்டறையில் நான் படித்தது. அவர்கள் எனக்குக் கொடுத்த தலைப்பு (The word and the creative process) கேட்டவர்கள், அப்பவே, அது கதைப் பாணியில்

அமைந்திருப்பதாகச் சொன்னார்கள். தொகுதியிலேயே நீளமான கட்டுரை. பெர்னாட்ஷா, கட்டுரையின் நீளத்தை நான் ஒப்புக்கொள்வதோ ஒரு தப்பு, பலவீனம் என்று உறுமுவது என் உட்செவியில் கேட்கிறது. நானும் மன்னிப்புக் கேட்கவில்லை. சொல்லோடு என் அனுபவம், எழுத்தாளர்களுக்கு, ஏன் வாசகர்களுக்கும்தான் பயன்படக்கூடும் என்கிற எண்ணம்தான்.

இப்போது 'இன்னொன்றும் புலப்பட்டது. புத்தகத்தின் பிற்பகுதியில் 'The spirit of man' என்கிற ப்ரயோகம், சற்றுக் கூடுதலாவே அடிபடுகிறது போல எனக்குத் தோன்றுகிறது. இதை நேர்த் தமிழ்ப்படுத்தும் என் முயற்சியில் 'ஆத்மாவின் உத்வேகம், தேடல் துடிப்பு ''மொழி பெயர்ப்பு ஈடு கொடுக்கிறதா? ஊஹும். திருப்தியில்லை. ஆத்மா என்பது Spirit ஆவது 'மனித ஆவேசம்?' இன்னும் சற்று நெருக்கமாகப் பொருந்தலாம்? ஆனால் நம் பண்பாட்டு முறையில் பழக்கமுறையில், பாரம்பர்ய முறையில் ஆத்மாவுக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது என்கிற சித்தத்தில் அதன்மேலேயே எல்லா சுமைகளையும் ஏற்றிவிடுகிறோம். அந்த முறையில், உத்வேகத்துடன், தேடல் துடிப்புடன், ஆத்மாவின் கர்வத்தையும் சேர்த்துக் கொள்கிறேன். சரி, ஆத்மாவுக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது என்பதால், என்னுடைய கர்வமாகவே இருந்துவிட்டுப் போகட்டுமே!

ஆகவே, The spirit of man, இந்தத் தொகுப்பின், ஏன் பூரா என் எழுத்தின் உள்சரடாக, உயிர் நாடியாக, ஜபமணியாகத் திகழ்வது தெரிகிறேன்.

மனம் எப்படிப் பழக்கப்பட்டிருக்கிறதோ அப்படித் தான் நினைப்பு. நினைப்பின் படித்தான் அதன் எழுத்து.

இந்தப் புத்தகத்தின் உள்ளடக்கத்தைத் தொகுத்துக் கொடுத்த உதவி சப்தரிஷியை (லா. ரா)ச் சாரும்.

இந்தத் தொகுதியைக் கொண்டு வந்ததற்கும், கொண்டு வந்திருக்கும் முறைக்கும் 'வானதி'க்கு என் நன்றி.

லா. ச. ராமாமிருதம்

Plot 242
No 1, கிருஷ்ணன் தெரு
ஞானமூர்த்தி நகர்
அம்பத்தூர்
சென்னை 600053

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நான் | 1 |
| 2. | அதுதான் கிராமம் | 11 |
| 3. | உண்மையின் தரிசனம் | 19 |
| 4. | எங்கள் வீடு | 28 |
| 5. | அம்மா | 41 |
| 6. | சில அனுபவங்கள், கேள்விகள், தரிசனங்கள் | 55 |
| 7. | சொல்லோடு என் உறவு | 66 |
| 8. | அர்ச்சனை | 93 |
| 9. | சி.சு. செல்லப்பா | 104 |
| 10. | ந. பிச்சமூர்த்தி | 118 |
| 11. | ந. சிதம்பரஸுப்ரஹ்மண்யன் | 124 |
| 12. | பிராயச்சித்தம் | 133 |
| 13. | இதழ்கள் | 136 |
| 14. | எனக்காக | 154 |
| 15. | ஜனனியிலிருந்து சிந்தா நதிவரை | 170 |
| 16. | எழுத்தாளன் பாடும் கீதம் | 177 |

# 1. நான்

இது கதையல்ல. இது என்னைப்பற்றி.

நான் அறிந்தவரை, என்னால் முடிந்தவரை, என் வேஷங்களைக் களைந்து என் தோல்களை உரித்த என்னைப் பற்றி.

என்னிலும் எனக்கு வற்றாத, சுவாரஸ்யமான பொருள் இல்லை.

அவரவர்க்கும் அப்படியே. ஆகையால் எப்பவும் நான் தான்.

நான் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட முறையில் எழுத்தாளன் இல்லை. நான் எழுத்தாளனே இல்லை. பேரிகை கொட்டுபவன். சுயபேரிகை போகும் வழியெல்லாம் கொட்டிக்கொண்டே போகிறேன். எனக்கேதான் கொட்டிக் கொள்கிறேன்

சில சமயங்களில், நான் எழுப்பும் சப்தம், பிறருக்கும் கேட்கிறது. அவர்களிலும் பொறுக்கானவர்களுக்கு, அபூர்வ மாய், அவர்களுக்கே கொட்டுவதாய் அவர்கள் அடையாளம் கண்டுகொள்கையில், என் இறுமாப்பு எனக்குப் பொங்கி வழிகிறது.

நாள் கிழமைகளில் என் தாயை நான் நமஸ்கரிக்கையில் அவளைக் கேட்டுக்கொள்வதுண்டு "அம்மா என் இறுமாப்பு வளரவேணும் என்று ஆசீர்வதி!"

இப்படிக் கேட்கையில், எப்பவுமே நல்லெண்ணத்தில் கேட்கிறேன் என்று சொல்வதற்கில்லை.

நான் வெளிச்சமானவன் இல்லை.

'ராமாமிர்தத்துக்கு மனசில் ஒன்றும் வைத்துக் கொள்ளத் தெரியாது' என்று என்னோடு பழகியவர்கள் சொல்லமாட்டார்கள். அந்த முறையில் நான் நல்லவன் இல்லை. நான் அறிந்தே, என் நெஞ்சில் எவ்வளவோ, பூட்டியும் புதைத்தும் வைத்திருக்கிறேன். நான் அறியாமல் இன்னும் எத்தனையோ.

இரு பொருள், ஏன், பல பொருள்பட ஒரு வார்த்தை—வெறும் சிலேடை அல்ல—நாலுபேருக்கு நடுவில், வெளிக்கு நமஸ்காரமாய் அமைந்து, ஆனால் குறிப்பிட்டவனுக்கு மாத்திரம், அவன் நெஞ்சில் தைத்து நடுங்கும் அஸ்திர வேலைப்பாடுகள்—எனக்கு எப்பவும் அலுத்ததில்லை.

எனக்கு ஒரு கனவு, ஒருநாள், என்றேனும் ஒரு நாள். சொல்லாட்சியால், பொருளுக்கும் சொல்லுக்கும் இடைக் கோட்டை அழித்து சொல்லே பொருளாய், பொருளே சொல்லாய், ஆனால் ஒன்றுக்கொன்று குழம்பாது, ஒன்றுக் கொன்று பக்கபலமான நிலையை எய்தல் வேண்டும்.

அப்புறம் சொல்லேதான் செயல், செயலேதான் பொருள்.

நெருப்பு என்றால் வாய் வேகவேண்டும்.

இது முடியுமா? ஆயுசுக்குள் முடியுமா? அப்புடி முடிந்து தான் ஆகவேண்டுமா? முடிந்தாலும் அதனால் காணப் போவது என்ன? கேள்விகள் தாமே எழுகின்றன.

எதனால்தான் என்ன பிரயோசனம்? இது பயன் இது பயனில்லை என்று தீர்மானிக்க நான் யார்?

உலகில் உயிரற்றது எதுவுமில்லை.

கால, எண், வரைகளற்று ஜீவதாதுக்கள் சதாசர்வ காலம் நம்மைச் சுற்றி, நீந்திக்கொண்டேயிருக்கின்றன.

ஏதோ ஒரு வாக்கியத்திலோ, சொற்றொடரிலோ, குரலின் அசைவிலோ, பதங்களிலோ, அல்லது இரு பதங்களிடையில் தொக்கி, என்னுள்ளே நின்று, என் நினைவின் ஓட்டத்தைச் சட்டெனத் தடுக்கும் ஒரு அணுநேர மௌனத்திலோ, ஒரு கடைக்கண்ணோக்கிலோ, ஒரு பெருமூச்சிலோ, விழிகளில் நடுங்கும் கண்ணீரின் பளபளப்பிலோ, ஒரு புன்னகையில் மோவாயின் குழிவிலோ, நீரின் சுழியிலோ, குச்சியிலிருந்து குத்துவிளக்கின் திரிக்கு 'சுர்'ரென்று தாவும் சுடரின் சீறலிலோ, புருவத்தின்மேல் வாடைக் காற்றின் முத்தத்திலோ, ஒரு பூவின் இதழ்களின் விரியலிலோ, அஜ்ஜீவதாதுக்கள் என்னை ஊடுருவுகையில், என்னை அடைத்த கோடுகளை அழித்து, என்னை, ஊடுருவிய அந்த வேகத்தின் நேரத்துக்கு, தம்முடன் நித்யத்துவத்திற்கு அழைத்துச் செல்கின்றன. அப்பொழுது நான் என்னைப் புதுமுறையில் காண்கிறேன்.

நான் அழிவற்றவன்.

எனக்கு அழிவிலாதபடி, என்னையே லட்சக்கணக்காய்ப் பெருக்கிக்கொள்கிறேன். அதுவே அந்நிலையின் இயல்பு.

என்னைச் சுற்றி அகண்டமான அர்த்தங்கள், பல வர்ணங்களில் மீன்போல், வாலையும், செதில்களையும் ஆட்டிக்கொண்டு சாவகாசமாயும், நட்சத்திரங்கள்போல் பொறி விட்டுக்கொண்டு, கண்ணுக்கும் நினைவுக்கும் எட்டாத வேகத்திலும் நீந்துகின்றன.

மௌனம் என்பது சும்மாயிருப்பதல்ல அது ஒரு ஸ்தாயி

ஒரு குறிப்பிட்ட ஸ்தாயியில், கற்கள்கூட உடைந்து விடும் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆயின், கதவுகள் திறப்பதற்கென்ன?

ஆனால் இப்பரபரப்பில் எவ்வளவு நாழிகை இருக்க முடியும்? வேகம் ஓய ஆரம்பிக்கின்றது. திரும்பலில் நான் கீழே இறங்குகிறேன். அல்லது மேனோக்கி எழுகிறேன்.

என் மேலோ, கீழோ, மேலும் கீழுமோ திறந்த கதவுகள் தாமே, மெதுவாயும் வேகமாயும் மூடிக்கொள்கின்றன. வெள்ளம் பின்வாங்குகிறது. அதில் மிளிரும் மதிப்பற்ற பொக்கிஷங்களை பேராசையோடு இரு கைகளாலும் அகல வெள்ளத்தோடு வாரிக்கொண்டு கீழிறங்குகிறேன் அல்லது மேலெழுகிறேன். ஆனால் நான் இங்கு மீண்டதும் என்னிடம் ஏதும் இல்லை.

எல்லாம் ஊமை கண்டு, சொல்லத் தவிக்கும் கனவு.

இதுவே, எழுத்தாளன், படிப்பாளன், செயலாளன், சிந்தனையாளன், எல்லோருக்கும் பொதுவான அவஸ்தை.

இதனின்று விடுதலை ஒரு பெரும் சாதனை, ஆறுதல், படிதாண்டல் இல்லையா?

விடுதலை உண்டோ இல்லையோ,
கண்டது கண்டதுதான்.
அறிந்தது அறிந்ததுதான்.
சொல்ல முடியாவிட்டாலும்,
இதை என்னிடமிருந்து பிடுங்கிக்கொள்ள முடியாது.
நக்கீரன் நக்கீரன்தான்.

வரம்புகள் கடந்த விஷயங்களை எழுத்தில் பிடிக்க முயல்கையில், அவை நழுவுகின்றன, ஊடலாடுகின்றன. பாஷையே பரிபாஷையாக மாறுகின்றது.

சொல்லும் பொருளும் நெஞ்சில் கண்ணாமூச்சி ஆடுகின்றன. சொல் பொருளைத் தேடுகிறது. பொருள் எட்டியும் எட்டாது சொல்லை நழுவுகிறது. இரண்டினுக்கும் இடையில் நான் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். சொல்லும் நானே. பொருளும் நானே.

நானே என்னைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.
இதற்கு எழுத்து எனக்கு வழித் துணை.
ஒருவனுக்கு அவன் பக்தி.
ஒருவனுக்கு அவன் ஞானம்.
ஒருவனுக்கு அவன் குரு.
அதுமாதிரி எழுத்து எனக்கு வழித்துணை.
ஒரு சமயம் அது என் விளக்கு
ஒரு சமயம் சம்மட்டி
ஒரு சமயம் கம்பு
ஒரு சமயம் கத்தி
ஒரு சமயம் கண்ணாடி.

தூரதிருஷ்டி, பூதக்கண்ணாடி.
முகம் பார்க்கும் கண்ணாடி
கண்ணுக்குக் கண்ணாடி
கைப் புண்ணுக்கும் கண்ணாடி

முள் எடுக்கும் முள்
முள் எடுக்கையில், அல்லது
எடுத்தபின்
முள்ளோடு தானும் ஒடியும் முள்.

இந்த ஓடிப்பிடித்தலில், சொல்லும் பொருளும் நேரிடையாகச் சந்திக்காவிட்டாலும், சில சமயங்கள் தலைகால் தெரியாமல் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்கின்றன. அல்லது உராய்கின்றன, அல்லது ஒன்றன் காற்று ஒன்றன் மேல் படுகிறது. பறவையின் சிறகு முகத்தில் அடித்தாற் போன்ற அந்த அதிர்ச்சியில்கூட, என் காலடியில் பூமி

நடுங்குகிறது. அதிலேயே நான் அனுமார்மாதிரி வளர்கிறேன். அந்த சமயத்தில், ஏழு கடலையும உளுந்து உருளும் அளவிற்கு ஆசமன தீர்த்தமாய் உள்ளங்கையில் ஏந்திய குறுமுனியின் செயலாட்சி புரிகிறது.

புராணம், பழங்கதைகள், இவைகள் நிஜமா, பொய்யா நம்பத்தகுந்தவையா இல்லையா இதெல்லாம் வேறு சர்ச்சை. நான் சர்ச்சைக்கும் சண்டைக்கும் ஆளல்ல.

நான் பண்டிதன் அல்ல. நான் கண்டதை எல்லோரும் அவரவர் பிறப்புரிமையாய்க் கண்டதை, கண்டும் சொல்ல இயலாததை, ஏதோ எனக்குத் தெரிந்தவரை, முடிந்தவரை சொல்ல முயல்கிறேன்.

ஒன்று நிச்சயமாய்க் காண்கிறேன்.

புராணம், பழங்கதைகள் இவையெல்லாம் ஒரு பரிபாஷை.

தெய்வம்கூட பரிபாஷைதான்.

அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கிறாப் போல், திண்ணையில் நாலுபேருடன் நான் பேசிக்கொண்டிருக்கையில், என் மகனோ மனைவியோ வாசலுக்கு வந்து, தன் மூக்கைச் சொரிந்துகொண்டால், "சமையல் ஆறுகிறது. இவர்களை அனுப்பித்துவிட்டு சாப்பிட வாருங்கள்," என்கிற அர்த்தம் மாதிரி.

காதைத் திருகிக்கொண்டால், "கடன்காரன் போய் விட்டான், கதவு மூலையிலிருந்து வெளியே வரலாம்" என்கிற அர்த்தம் மாதிரி.

பொருள், ஓசை, சொல், நயம், பொருள்.

பொருளில் ஆரம்பித்து பொருளில் முடியும் பொருள். நான்.

தேடுகிறேன்.

இத்தேடல் சாமானியமானதல்ல. தைரியம் வேண்டி யிருக்கிறது.

பொருளையே பொருள் படுத்தாமையும் வேண்டியிருக் கிறது.

தேடலேதான் பொருள்.

என் பொருள், என் ஓசை, என் சொல், என் நயம்.

என் தேடல்.

ஒரு பெரிய சுயகாரியந்தான்.

சுயகாரியப் புலித்தனம்கூட.

யார் சுயகாரியப்புலி இல்லை?

"அடே நீ என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? முட்டாளே, இதோ பார், சக்கரம் அறுகிறது, கபாலம் ஏந்துகிறது. எல்லாம் நான்தாண்டா."

"எல்லாம் என்னுடையது. நான் கொடுத்தேன், நான் எடுத்துக்கொள்கிறேன், நீகூட நான்தான். நீ உன்னைத் தேடினால், என்னைத்தான் அடைவாய்."

இதைவிட சுயம் எது?

மறுபடியும் இதெல்லாம் பரிபாஷைதான்.

"தட்டாமாலை தாமரைப்பூ. சுற்றிச் சுற்றிச் சுண் ணாம்பு. கிட்ட வந்தால் கிள்ளுவேன், எட்டப்போனால் துப்புவேன்."

பரி பாஷை, பரிபாஷை, பரி பாஷை.

சர்வாகாரம் சதாகாரம்.

ஸ்வயாகாரத்தின் ஸர்வாதிகாரம்.

நித்யத்வம் என்மேல் படும்போது, அதைச் சொல்லில் பிடித்து, அந்த நிமிஷத்தை நித்யமாக்கிவிடலே என் தேடல், என் கனவு.

நான் நித்யத்துவத்திற்கு ஆசைப்படுகிறேன்.

உலகத்தின் கோளத்தையே என் சுண்டு விரல் நுனியில், எனக்கு சொந்தமாய் ஏந்த ஆசைப்படுகிறேன்.

இதைச் சொல்லிக்கொள்வதில் எனக்கு வெட்கமில்லை, பயமில்லை. மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற அக்கறையில்லை.

நான் தேடும் அழிவிலாத் தன்மையை அடைவது எப்படி?

படித்தோ, கேட்டோ நான் சொன்ன சொல்லில், அவன் கண்ட பொருளுக்காக ஒருவன் வயிறு குளிர்ந்து, விழியி லிருந்து வழியும் கண்ணீர் குளிர்ந்து, மனமார என்னை வாழ்த்துகையில், நான் எனக்குத் தெரியாமலே, அவன் மலர்ச்சியில், அவன் ரத்தத்தின் உள்சத்துடன் கலந்து, அவன் சந்ததிமூலம் விருத்தியாகிறேன்.

என் சொல்லின் வித்துக்கள் அங்கங்கே சிதறி பொருளாய் விருத்தியாகையில் நான் நித்யத்துவத்தை அடைகிறேன். ஸ்வயாகாரத்தின் சதாகார ஸர்வாதிகாரத்தை அடை கிறேன்.

கோடுகள் அழிந்தபின் எல்லாம் நான்தான்.

நானேதான் என்னுடைய விளைவு

என்னுடைய துணை

என்னுடைய சத்துரு

என்னுடைய மறைவு

என்னுடைய குழப்பம்

என்னுடைய தெளிவு

என்னுடைய விடிவு

ஆனால் நிச்சயமாய் எனக்கு அழிவு இல்லை.

நானே என்னுடைய அழிவற்ற கனா.

நான் காணும் கனவில் இது நடக்கும் இது நடக்காதது என்பதில்லை சமுத்திரங்களில் ஜலம் உள்ளவரை, சூரியன் கிழக்கில் உதிக்கும்வரை எனும் பிரமாணங்கள் செல்லாது. என் உலகில் சூரியன் மேற்கில் உதிக்கும், கடல் வற்றும், ஊசிக் காதில் ஒட்டகம் புகுந்து வெளிப்படும்.

அதைப்பற்றி ஆச்சரியப்படுதல்கூட தவறு. ஏனெனில் அது நியாயபூர்வமாய், சொல்லாட்சியினின்று விளைந்த, விளையும், விளையப்போகும் செயலாட்சி.

இன்றையக் கனவு நாளைய நனவு.

ஏனெனில் இன்றைய நனவு நேற்றைய கனவு.

கனவுப்படியே நனவும் நேரும் என நான் சொல்ல வரவில்லை.

கிணறுவெட்ட பூதம் புறப்படும்.
பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடியும்.
அதனாலென்ன? அதற்குப் பின்?
குரங்குதான் சமுத்திரம் தாண்டிற்று.
குரங்குதான் கண்டது.
கண்டதோடு இல்லை. 'கண்டேன்' என்றது.
அதுதான் நம் மாந்தாதா.
பூதந்தான் புதையலைக் காக்கிறது.

எப்படியும் நனவின் ஆதாரம், அருவம், கனவு. பத்து வருஷங்களுக்கு முன்னால் நான் ஒரு கனாக் கண்டேன். இன்றும் நினைவைவிட்டு மறையவில்லை.

வானத்தில் நிலவுக்கு முன் மேகங்கள் சரசரவென விரைந்துகொண்டிருந்தன. ஆனால் சந்திரன் தெரியவில்லை. தேங்காயைத் துருவி மலையாய்க் குவித்திருந்தது. என் கண்ணுக்கெட்டிய வரையில் மேகங்களில் கற்கண்டு கட்டிகள்போல் நக்ஷத்திரங்கள் வாரியிறைந்திருந்தன.

அப்போது யாரோ பாடும் குரல் கேட்கிறது. ஆண் குரல். ஹிந்துஸ்தானி சங்கீதம். ''கஜல்.'' இடையிடையே நீண்ட தொகையறாக்கள். குரலோடு இழைந்து இழைந்து, பத்து ஸாரங்கிகள் அழுகின்றன. திடீரென்று தபேலாவின் மிடுக்கான எடுப்புடன், ஆரம்ப அடியில் பாட்டு முடியும் போதெல்லாம், இன்பம் அடிவயிற்றைச் சுருட்டிக்கொண்டு "பகீர்" பகீர் என்று எழும்புகிறது. அந்தமாதிரி குரலை நான் கேட்டதேயில்லை. என் எலும்பெலாம் உருகிவிடும் போலிருக்கிறது. நான் அதைத் தேடிக்கொண்டே போகிறேன்.

நான் போகிற வழியெல்லாம், யார் யாரோ மேடுகளிலும் பள்ளங்களிலும், மரத்தடிகளிலும், பரந்த வெளிகளிலும், கூட்டம் கூட்டமாயும், கொத்துக் கொத்தாயும், தனித் தனியாயும், அசைவற்று உட்கார்ந்திருக்கிறார்கள் நான் போகப் போக, பாட்டின் நெருக்கமும், இமையும் இந்த உடல் தாங்கக் கூடியதாயில்லை.

பாடும் ஆளும் தென்படுவதாயில்லை. எதிரே கட்டிடமு மில்லை. ஒரே பரந்த வெளிதான். ஆனால் குரலின் கண கணப்பும் தீர்க்கமும் இனிமையும் ஒரே இரைச்சலாய் வீங்கி என்மேல் மோதுகையில் எனக்கு ஏற்பட்ட தவிப்பு தாங்க முடியவில்லை. திகைப்பூண்டு மிதித்த மாதிரி கடைசியில் என்னையே நான் சுற்றி வருகிறேன். அப்பொழுது என்னி லிருந்தே அக்கீதம் வெளிப்படுவதாய்க் காண்கிறேன்.

கண்டதும் விழித்துக்கொண்டேன்.

இதுதான் நான் கண்ட கனா.

இன்னும் என் கனவுகளில் பாடும் குரல் தூரத்திலிருந்து வருகிறது. எனக்கு எதையோ ஞாபகப்படுத்துவது போல், நிச்சயப்படுத்துவது போல்.

இந்த என்னைப் பற்றித்தான் இது.

அதாவது,

உன்னைப் பற்றித்தான்.

# 2. அதுதான் கிராமம்

நெல், நெல், நெல், எங்கு பார்த்தாலும் நெல்.

வாசற்படி ஏறியதும், பெரிய திண்ணையில் நெல், உடனே ரேழியில் நெல், அடுத்த தாழ்வாரம், பட்டவாசல்—ஒரே சமயத்தில் ஐம்பதுபேர் சாப்பிடலாம்—பூரா நெல். கூடத்தில் வாசல் வைத்த சமையலறையை குறுக்கே தாண்டினதும் வென்னீர் கொட்டகையில்-அடுப்புச் சுவரோரம்வரை நெல். கணுக்கால் ஆழத்துக்கு ஓரே நெற்கடல். மிதிக்காமல் வழியில்லை. வருவோரும் போவோரும் மிதியவி லேயே கணிசமாக நெல், பதரும் மணியுமாகப் பிரிந்திருக்கும்.

வென்னீர்க் கொட்டகைக்கு ஒட்டினாற் போன்ற கிணற்றடியும் அது தாண்டி மாட்டுக் கொட்டகையும் சதா சலுப்பும் மாடுகளும் இல்லாமலிருந்தால் நெல் கடல் அங்கும் வியாபித்திருக்கும்.

""என்ன பண்ணுவது மாமா? முன் தூறலைப்பார்த்தே அறுவடை செஞ்சுட்டேன். அப்படியும் மழையிலே கொஞ்சம் வீணாப்போச்சு.""

""எங்கே நான் படுக்க, நடமாட?"" திகைப்புற்றேன், திகிலுற்றேன்.

"இதோ விசுப்பலகையில் படுங்கள், உட்காருங்கள், படியுங்கள், எழுதுங்கள், புழங்குங்கள். நான் திண்ணை பெஞ்சில் ராத்ரி படுத்துக்கறேன். விஜயா சமையலறையில் முடங்குவாள். பசங்களை வேப்பிலையாத்துக்கு விரட்டிடுவேன். இன்னி ஒரு நாளைக்குத்தான். நாளைக்கு மூட்டை போட்டு மெஷினுக்குப் போயிடும்."

"காலால் மிதிக்கவே கூசறதே சந்தானம்!"

"மாமா, இதைக் கேளுங்கள்: நீங்கள் எழுத்தாளர், சிந்தனை பண்ணுங்கள். இது அறுவடைக்கு முன்னால், கதிராக ஆடுகையில், வயலில் என்னென்ன அரூயை நடக்கறதுன்னு ஒரு நிமிஷம் எண்ணிப் பார்த்தால், சாதமே வேண்டியிருக்காது. சாப்பிடாமல் நம்மால் இருக்க முடியுமோ? இதையே தாம்பாளத்தில் பரப்பி, குத்துவிளக்கை அதன்மேல் வெச்சு ஏத்திட்டா, அம்பாள் ப்ரஸன்னமாயிட்டா. அக்ஷதையாகத் தலைமேல் போடுங்கோ. தீர்க்காயுஷ்மான் பவ:' அன்னமாக இலையில் வட்டித்துப் பாருங்கோ. "அன்னம்சப்ரம்மா:" எல்லாம் இடமும் ஏவலும் பொருந்தித்தான் மஹிமை. முதலில் நினைக்க நேரம் இருந்தால்தானே வித்தியாசங்களுக்கு வழி! மாடு கறக்க நேரமாச்சு போறேன். நீங்கள் விசுப்பலகையில் உட்காருங்கோ. விஜயா, மாமாவுக்கு ஜோரா காப்பி போட்டுக் கொடு." போய்விட்டான்.

மாட்டுக்கொட்டகையில் பசுக்கள் இரண்டு, எருமைகள் இரண்டு, கன்றுகள் நாலு. கொட்டகை தாண்டிப் போனதும் வைக்கோற் போருக்குப் பரந்தவெளி. அப்பால் தோட்டம் தென்னை, இலை, செடி, கொடி, புதர், காடு. அப்புறம் வாசல் தெருக்கு parallel ஆக புழைக்கடை சந்து, இந்த விஸ்தீரணத்துக்குப் பட்டணத்தில் ஒரு 3—star ஹோட்டலேனும் கட்டிவிடுவான்கள்.

ஆனால் கிராமத்திலேயே, எல்லாம் வீடுகளும் இதே வாகு, மோஸ்தர்தான். கோயில் பிராகாரம் மாதிரி.

""இந்தாங்கோ மாமா, காப்பி சாப்பிடுங்க,"" நீங்கள் சொன்னபடியே கொஞ்சந்தான் அஸ்கா போட்டிருக்கேன்."

கொஞ்சமா? வீட்டுப்படி தாண்டிவிட்டாலே, அதுவும் கிராமத்தில் என் 'நிறைய' எங்கே அதற்குமேல் தாங்காதோ, அங்கேதான் இவர்கள் 'கொஞ்சம் ஆரம்பிக்கிறது. எல்லா வற்றிலும் இவர்கள் அளவுகள் பெரிது. காப்பியென்றால் ஒருகால்படி போட்டா அதற்கு டபரா என்கிற பெயரில் ஒரு அடுக்கு. சொன்னாலும் கேட்கமாட்டார்கள். திணறத் திணறக் குடிச்சேயாகணும். பெரிய மனம் படைத்தவர்கள். இவர்கள் வீடுகள்போல், இவர்கள் வயற்காடுகள் மாதிரி, அவைமேல் இவர்களின் ஆகாசங்கள் போன்று சின்னதாவே எண்ணத் தெரியாது.

நெல்லைக் காலால் துழாவிக்கொண்டே சமைலறையுள் நுழைகிறேன். விஜயா எரியவிட்டுக் கொண்டிருக்கும் விறகடுப்பின் ஜ்வாலையே இரவோ பகலோ சதா அங்கே தேங்கியிருக்கும் இருட்டை முடிந்தவரை கலைக்கும் வெளிச்சம்.

""வாங்கோ மாமா வாங்கோ"" சந்தானமும் விஜயாவும் 'கோரஸ்' பாடுகிறார்கள். வீட்டுள் நுழைந்ததும் 'வாங்கோ மாமா' கூடத்துக்கு வந்தால் 'வாங்கோ மாமா' வென்னீர் கொட்டகைக்குள் ஸ்னானத்துக்கு அடியெடுத்து வைத்தால் 'வாங்கோ மாமா' சமயலறையுள் நுழைந்தால் 'வாங்கோ மாமா' வாசலுக்கு வாசல் 'வாங்கோ மாமா.'

""சும்மாத்தான். கிராமத்தில் உங்கள் தினப்படி ருட்டீன் என்னென்று பார்க்க.""

""தாராளமாப் பாருங்கோ—டேய் மணிகண்டா, மாமா வுக்கு மணை கொண்டுவா.""

சந்தானம், கறந்த பாலை அளந்து. சுற்றி ஏனங்களில் ஊற்ற ஊற்ற, எடுத்துக்கொண்டு. குழந்தைகள் சுறுசுறுப்பாக வெளியே கடந்து செல்கிறார்கள். வாடிக்கைகளுக்கு விநியோகம் பண்ண.

''மாமா, என்ன சமையல் பண்ணலாம் சொல்லுங்கோ. பறங்கிக் கொட்டை வாங்கி வெச்சிருக்கேன். பறங்கித்தான் போட்டு வத்தல் குழம்பு, பறங்கிக்காய்க் கூட்டு பண்ணப் போறேன். உங்களுக்கு வேணும்னா அப்பளாம் சுடறேன்.''

என்பேர் லச்சுமி. என் பெண்பேர் மஹாலச்சுமி.

பறங்கிக்காய் எனக்குச் சுவாரஸ்யப் படவில்லை. ஆனால் அதைச் சொல்ல மனம் இல்லை.

''எதேஷ்டம்'' தலையை மும்முரமாக ஆட்டுகிறேன்.

''மாமா நான் ட்யூட்டிக்குக் கிளம்பியாச்சு.'' ஸந்தானம் 'திரும்பி வந்ததும் வயலுக்குப் போகணும். எனக்காக் காத்திருக்காதேங்கோ. ராத்ரி சேர்ந்து உட்காந்துக்கலாம்.

போய்விட்டான். சந்தானத்துக்குக் காப்பிப் பழக்கமில்லை. அவன் கறந்த பால்கூட அவனுக்குத் தேவையில்லை.

'திறுதிறு' என்று சற்று நேரம் இங்கேயே விழித்துக் கொண்டிருந்துவிட்டுப் (அச்சு—நெல் நெடி) பொழுது போகாமல், வேப்பிலை வீட்டுக்குச் செல்கிறேன்.

இங்கே யாருக்குமே மோப்ப சக்தியுமோ?

''வாங்கோ மாமா வாங்கோ மாமா''...உன் இருட்டுக்கு என் பார்வை இன்னும் பதமான பாடில்லை. வாசற்படி தடுக்கி, கால் கட்டைவிரல் நகம் வலியில் துடிக்கிறது. கண்டு கொள்ளாமல் உள்ளே வருகிறேன்.

''இதோ பெஞ்சிலே உட்காருங்கோ. டிகாஷன் போட்டாச்சு. அடுப்பில பாலை வெச்சிருக்கேன். ஒரு நிமிஷம்.''

ஊஹூம். தப்பவே முடியாது. வெடுக்கென்று ஏதேனும் சொல்லி, மனதைப் புண்படுத்தவா, பதினைந்து வருடங்கள் கழித்து வந்திருக்கேன்?

"மாமா சாப்பிட இங்கேயே வந்துடுங்கோ."

"இல்லை அங்கே ஒத்துண்டுட்டேன். இங்கே என்ன சமையல்?"

"பறங்கிக்காய்க் கூட்டு பறங்கிக்காய் வற்றல் குழம்பு, பரவாயில்லை. அங்கே கொடுத்து அனுப்பறேன்."

"அங்கேயும்—" இல்லை, சொல்ல மனமில்லை.

வேப்பிலையின் பெண்களில் இருவர் பள்ளி ஆசிரியை வேலை பார்க்கிறார்கள். ஆனால் ஒரு வாரமாகப் பள்ளி யில்லை. ஆசிரியர்கள் போராட்டம் மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது. கைதானவர்களைக் கொள்ளமுடியாமல், திருச்சி ஜெயில் வழிகிறது. ஆசிரியர்களுக்கும் களிதான் போடுகிறார்களாம். சரியாகக்கூட வேகவில்லை. வயிற்று வலி, போக்கில் அவஸ்தைப்படுகிறார்களாம். பார்த்து வந்தவர் சொல்கிறார்கள்.

வேப்பிலையின் பெண்களும் சந்தானத்தின் குழந்தை களும் மாவட்டச் சேதி கேட்க ட்ரான்ஸிஸ்டரைச் சுற்றி நிற்கிறார்கள். போராட்டத்தின் நிலைமை, சமாதானப் பேச்சு வருகிறதா அறிய. பையன்களுக்குக்கூட வீட்டில் இப்படி இருப்பது நிலை கொள்ளவில்லை.

மணிகண்டனும், சேகரும், குளிப்பாட்ட மாடுகளை வாய்க்காலுக்கு ஓட்டிச் செல்கின்றனர். அவரவருக்கு ஒரொரு வேலை. எல்லோருக்கும் வேலை. அப்படிச் செய்யாவிட்டால் கிராமத்தில் ஒன்றும் நடக்காது. மெதுவாக, நேரத்தைப் பற்றி அக்கறையில்லை, ஆனால் ஓயாத வேலை. நேரம் நகர்கிறது. இருளை நோக்கி நகர்கிறதுமாரி.

ஆனால் வாஹனத்தின்மேல் உறை விழுந்தாற்போல் திடீரென இருட்டு எப்படி, இப்படி புடைசூழ்ந்துகொண்டது? மாயமாயிருக்கிறது. சற்று நேரத்துக்கு முன்தான் மாலை வெய்யில் சீவனற்று, கூடத்து சுவர்மேல் ஏறிக்கொண்டிருந்தாற்போல் இருந்தது.

விஜயா லாந்தர்களை ஏற்றுகிறாள். என்ன ஏற்றி என்ன? கிராமத்தில் என் பையல் பருவத்தின் இதே நிலைமையை வலுக்கட்டாயமாக நினைவுபடுத்திக் கொள்கிறேன். அதனால்? இன்று இருள் பழக்கமாகிவிடுமா? இருளினால் மட்டுமே பழைமையைப் பெற்றுவிட முடியுமா?

''மாமா சாப்பிட வாங்கோ.''

சூரிய அஸ்தமனச் சுருக்குடன் இங்கே சாப்பிட உட்கார்ந்துவிடுகிறார்கள். மறுநாள் வெள்ளியோடு எழுந்திருக்க வேண்டுமென்பதாலோ? மழைக்காலம் அஸ்தமனமும் சுருக்க நேர்ந்துவிடுகிறதென்பதாலோ? எரி பொருள் காக்கவேண்டுமென்பதாலோ அல்லது இதற்குப் பிறகு வேறு வேலையில்லை என்பதாலோ?

எப்படியிருந்தால் என்ன? திண்ணையில்—(நெல்லை மூட்டை போட்டாகிவிட்டது) ஏழரை மணிக்கே ஸந்தானம் எனக்குப் படுக்கை விரித்தாயிற்று. நானும் உடம்பை நீட்டியாச்சு. விளக்குகளில் திரியை உள்ளுக்கு இழுத்தாச்சு. பனிக்குப் பாதுகாப்பாக, திண்ணையில் படுதாக்களை இறக்கியாச்சு.

தலைமாட்டில் விசுப்பலகையில் தடதடவென சத்தம் கேட்டு, திடுக்கிட்டு எழுந்து உட்காருகிறேன். ஸந்தானம் சிரிக்கிறான். ''ஒண்ணுமில்லை மாமா, நாய்.''

''வளர்க்கிறாயா?''

''சரியாப் போச்சு. அது ஒண்ணுதான் பாக்கி. தெரு நாய். நிறை கர்ப்பம். இன்னும் பதினஞ்சு நாளில் போட்டுடும். இருப்புக்கொள்ளல்லே. புரள்றது.''

அருவருப்பில் என் உடலின் குலுங்கலை இருட்டில அவன் பார்க்க முடியாது. உடனேயே என்மேல் ஏதோ ஊர்வதுபோலும் சுள்சுள் என்று பிடுங்குவது போலும்.... அசலா, ப்ரமையா?

தூக்கம் வரவில்லை. இவ்வளவு சுருக்கப் பழக்கமே யில்லையே!

இன்று மாவட்டச் சேதியில்: ''வங்காளக்குடாக் கடலில் இன்னொரு காற்றழுத்த மண்டலம் ஸ்ரீலங்கா அருகே பரவலாக உருவாகியிருக்கிறது.''

என் கவலை எனக்கு.

தீபாவளிக்கு ராஜா காலனியில் இருக்கிறேன். சென்னை யில் பேய் மழை. அப்பவும் வானொலிதான் தஞ்சம். செல்வராஜின் வாசிப்பில் அம்பத்தூர் அடிபடாத வரை நல்ல படியாக நினைத்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனாலும் என் வீடு பற்றி எனக்குத் தெரியும். இங்கிருந்துகொண்டு நான் என்ன செய்ய முடியும்? அங்கிருந்தாலும் என்னசெய்ய முடியும்? பட்டணமே வெள்ளத்தில் பரிதவிக்கையில் என் தனிக்கவலை என் சுயநலத்தைத்தான் காட்டிக்கொடுக் கிறது. பொறுமனமே பொறு என்றால் மாட்டாய். ஆதலால் தவிமனமே தவி. மௌனமாகத் தவித்துக்கொண்டேயிரு. இந்த சமயத்தில் நான் துணை நிற்கவில்லையே என்று அவர் களுக்குப் பட்டால் ஆச்சரியமில்லை. நியாயம்கூட. ஆனால் இப்படியொரு மழை வரும் என்று யார் கண்டது? நான் புறப்படும்போது வெய்யிலல்லவா அடித்துக்கொண் டிருந்தது?

மழையும் மக்கட்பேறும் மகாதேவனுக்குக்கூடத் தெரியாது.

சந்தானம் விழுந்தடித்துக்கொண்டு எழுந்திருக்கிறான்.

"என்னப்பா?"

"கொட்டாயில் தும்பை அறுத்துக்கொண்டு மாடுகள் ஒண்ணுக்கொண்ணு சண்டை போடறது?"

உள்ளே ஓடுகிறான்.

எனக்குத் தெரியவில்லை. இவனுக்கு மட்டும் எப்படி?...

அதுதான் கிராமம்.

# 3. உண்மையின் தரிசனம்

நெல்லை அரைத்தாயிற்று. கூடத்தில் கொட்டி அளந்து கொண்டிருக்கிறான். அரிசிக்குள் கையைவிட்டு எடுக்கிறேன். உடம்புச் சூடே போலும் கணகணப்பு, பூமியின் கர்ப்பத்தினின்று வந்ததல்லவா?

அன்னபூர்ணே நம:

சிவனே அவளிடம் கையேந்தி நிற்கிறான். அவளும் இடுகிறாள். பாவனைகளின் அழகை ரசிக்க இதுவே உகந்த முதற்பாடம்.

பாவனை என்பது என்ன?

சாதக விசேஷத்தால் எண்ணத்தின் உருவத்தை உருவகமாக்கி, அதனுள் மிளிரும் நோக்கத்தின் அழகைக் கண்டு இன்புறல்தானே!

""மாமா, கலத்துக்குப் பதினாறு படி தேறியிருக்கு. இடிசல்கூட அதிகமில்லை.""

இந்தப் பாஷையே மறந்துபோகுமளவுக்கு அத்தனை வருடங்களாகிவிட்டன. ஆனால் புரிந்தமாதிரி தலை ஆட்டுகிறேன். சந்தானத்தின் சந்தோஷத்தைக் கெடுக்க மனமில்லை.

இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை, வீட்டுக்கு ஆந்திரா மூட்டையை முதுகில் சுமந்து வந்து இறக்கித் தையலைப் பிரித்து அவிழ்த்துக் கொட்டி அரிசிப் பீப்பாயுள் அளந்து கொட்டிவிட்டுச் செல்வான். கடையில் வாங்கினால் அளவு எடையில் எழுபத்து ஐந்து கிலோ. இவனிடம் படியில் நாற்பத்தி ஐந்து. இரண்டு அளவுக்குமிடையே எத்தனையோ திரிசமம். அளப்பதில் திரிசமம். ஆனால் பீப்பாய் நிறையக் காண என்ன மகிழ்ச்சி! ஏதோ ஒரு தைரியம்.

துடைப்பம் போடாமல், ஒரு மணிகூட விடாது திரட்டணும், எவ்வளவு தூரம் சிதறல்!

கஞ்சியோடு போவாளோ, கழுநீரோடு போவாளோ எனும் பாவனைக்கு பயம்.

வள்ளுவர் வாசுகி கதை—குண்டூசியும், கொட்டாங்குச்சியில் தண்ணீரும்—அதுவும் பாவனைதான்!

செய்கைக்குச் செய்கை பாவனையே ஒரு தரிசனம்.

வாங்கிச் சாப்பிடும் அரிசியையே நான் கொண்டாடத் தயாராயிருக்கையில், சந்தானத்தின் பெருமிதம் எத்துணை மகத்தானது! தன் வயலில் விதை நெல்லை வாரியிறைத்த வேளையிலிருந்து.

இரவில்லை பகலில்லை வேளையில்லை என

தாயின் பரிவில் பரமரித்து

தளரா உழைப்பில் அயராக் கண்ணில் வளர்த்து, வீட்டுக்கு வந்து சேர்த்திருக்கிறான், நமக்கும் அளக்கிறான்.

சந்தானம், நீதான் உண்மையாக வாழ்பவன். நீ அன்ன தாதா.

அதை நீயும் அறியாய்.

உன் விளைச்சல் யார் கலத்தில் சாதகமாக வட்டிக்கப் படுகிறதோ.

அவனும் அறியான்.

* * *

மத்யதரைக் கடலில் எங்கோ ஒரு அலை ஒரு நலுங் கலாக உருவெடுக்கிறது.

துளித்துளியாகத் தன் பிரயாணத்தின் வழி திறன் கொண்டு

பெரும் நுரைக்கக்கலுடன்

வங்காளக்குடாக் கடல் கரையில் மோதி விரிகின்றது.

அன்னபூர்ண வியாபகம்

* * *

மத்தியானம்.

வேப்பிலை வீட்டு ரேழியில் படுத்திருக்கிறேன்,

சொகுசான இருட்டில், அரைத் தூக்கத்தில் கண் செருகலில், கனவுலகத்துக்கும் நனவுலகத்துக்கும் நடு விளிம்பில் நினைவு அங்குமிங்குமாக நடுங்குகிறது, நழுவு கிறது. தேறிக் கொள்கிறது, மறுபடி இதே ஊஞ்சல் அசைவு— லாலி லாலி!!..............

பஸ்ஸின் வேகத்தில், ஒரு பக்கம் வாழைக் கொல்லை, மறுபக்கம் தென்னஞ்சோலை—பாய்ந்து செல்கின்றன.

ஒரு பக்கம் பாளம் பாளமாகப் பசும்பொன் தகடு களாலாய பாவாடை மடிகள் போலும் வாழையிலைகள் அசைகின்றன. மறுபக்கம் தென்னைகள் சாமரம் வீசு கின்றன.

வாங்கோ வாங்கோ சோழம் பார்க்க வாங்க!"

இடையிடை பாலங்களினடியில் நாட்டா ஓடும் வாய்க் கால்களில் தனித்தனித் துறைகளில் ஆடவரும் பெண்டிரும் நீராடுகின்றனர். புடவையை வேட்டி போல் மார்பில் இழுத்துச் சொருகி... பரவாயில்லை, தைரியமாக நடுத் தண்ணீரில் நீந்துகின்றனர். துளையலின் வெறியில் உறிஞ்சி உமிழும் தண்ணீர் மத்தாப்பு வீச்சில் மீண்டும் ஜலத்திலேயே விழுகிறது.

அங்கங்களின் வ்ண்விண் செழிப்பு ஆடைகளின் வர்ணங் கள், வாய்க்காலைச் சூழ்ந்த பசுமையோடு இழையும் ஜாலங்களுடன் வானத்தின் மந்தாரத்தைக் குழை.

சோலைகளின் நடுவே அதோ அகன்றதோர் கோபுரம் —ஸ்ரீரங்கம். பின்னால் திரும்பிப் பார், மலைக்கோட்டை.

காவேரிப் பாட்டி, பாரியாகப் படுத்திருக்கிறாள். புது வெள்ளம், அவள் நரைக் கூந்தலாக, அலை அலையாய் சடைசடையாய், நுரை நுரையாய்ச் சோம்பி மதமதக்கிறது.

அம்மாடி! பிரம்மாண்ட ஓவியம் இதைத் தீட்டிய தூரிகை வீச்சில் நான் அலட்சியமான, சின்னஞ் சிறியதோர் சுழிப்பு. ஆனால் இதில் இடம் கண்டுவிட்டபின், நான் இல்லாமல் இந்த ஓவியம் பூரணமில்லை... பூரணத்துக்குப் பூரணம் தந்தபடி, பூரணத்தோடு இழைந்து, என் இடத்தில் இடம் தெரியாமல் இயங்கும் இந்தப் பேறு கிடைக்க என்ன புண்ணியம் செய்தேனோ!

வான் நீலம், நதியின் தூரத்து விளிம்பில், காவேரிப் பாட்டியின் கூந்தல் விரி எழுப்பிய பிசுபிசுப்படலமெனப் படபடக்கிறது.

எந்தக் கவிதையும் யாருடைய சொந்தக் கவிதை அல்ல.

எல்லாம் அவள் அணிந்த மாலையினின்று உதிரும் இதழ்கள்.

விழும் இதழ்களுக்குக் காத்திருந்து, அவைகளைக் கண்டெடுத்து உண்டவன் பாக்கியவான்.

உள்ளமெலாம், உள்ளே, உடல் பூரா மணம் கமகமக்கிறதே!

பூமியின் கவிதையில் ஒரு வரியாக விளங்கக்கூட நான் ஆசைப்படவில்லை.

அடேயப்பா! என்ன பேராசை! என்ன அசட்டுத் தைரியம்!

ஒரு வார்த்தையாக? ஒரு சொல்? ஊ—ஊம்.

இதோ நடு வந்துபோம் ஆனைக்காவின் அகிலாண்டேசுவரி சன்னதியில்,

அத்துணை துணிச்சலுக்கு எங்கு போவேன்?

ஒரு அக்ஷரத்தின்மேல் புள்ளி ஒலியாக, அநாமியாக இடம் தந்தாளெனில்.

அதுவே பிறவி கண்ட பயன் ஆகிவிடாதா!

* * *

அரைக் கண் மயக்கத்தினூடே அம்மாவின் குரல்—இங்கு எப்படிக் கேட்கிறது?

"ராமரத்னம், சாப்பிட வாயேன்!—" அட, ராமரத்னமும் இருக்காளே! திடுக்கெனை விழிப்பு.

வேப்பிலை, அவள் பெண்ணைச் சாப்பிட அழைக்கிறாள். இந்த நிமிடம் வரை, இந்த வெளிச்சத்துக்கு எப்படிக் கண்மூடியாக இருந்திருக்கிறேன்? வேப்பிலையின் பெண், அந்த தேகவாகு, அந்த வண்டு விழி, அந்தக் கன்னக் கதுப்பு—அப்படியே ராமரத்னம் அச்சு.

உள்ளே போகிறேன்.

""வாங்கோ மாமா வாங்கோ. எழுப்பலாமா வேண்டா மான்னு நானே தவிச்சுண்டிருந்தேன். காப்பிக்குப் பாலை அடுப்பிலே வெச்சிருக்கேன்.""

என் குழப்பத்தை அவளிடம் தெரிவிக்கிறேன். மனத்தின் குழளறலை யாரிடமேனும் சொல்லிக்கொள்ளனும்போல் இருக்கிறது!

""ஏன் இருக்காது? வம்சவழி எங்கே போகும்? உங்கள் அம்மாவும் என் பாட்டியும் ஒரே வயிற்று உடன்பிறப்புகள். ஆகச்சே, என் குரலில் உங்கள் அம்மாவின் ஒற்றுமையும், ராஜியும், உங்கள் தங்கையும் ஒரே ஜாடையாயிருப்பதிலும் என்ன ஆச்சர்யம்? மாமா, நீங்கள் வாசலில் போற மாமாவை மாமான்னு அழைக்கற மாமாயில்லே. நிஜமாவே உறவு மாமா. எனக்கு ஒண்ணுவிட்ட மாமா. அவாவா எங்கெங்கோ பிரிஞ்சுபோய் உறவு பிரிஞ்சு போகாட்டாலும் மறைஞ்சுபோயிடறது.""

* * *

அவள் அணிந்த மாலையினின்று உதிரும் இதழ்கள் விழும் இடத்தில் நேரும் நெஞ்சுள் எதிரொலியே கவிதை. ஆகவே, எந்தக் கவிதையும் யாருடைய சொந்தக் கவிதை அல்ல.

இதென்ன பல்லவி?

இன்று கார்த்திகை.

ஒரே ஜமக்காள விரிப்புப்போல், தெருவில் கோலங்கள். வீட்டுக்கு வீடு கோலத்தாமரை நடுவில் குத்துவிளக்கை நிறுத்தி, ஐந்து முகங்களிலும் திரியேற்றி, தாமரை இதழ் களின் நடு நரம்புகளில் வரிசையாக வைத்த அகல் விளக்கு களை, வீட்டு மகிஷியும், இளவரசிகளும் ஏற்றுகிறார்கள். பட்டுப் புடவையைக் கொசுவம் வைத்துக் கட்டிக்கொண்டு —தெருவே திருமணக் கோலம்; ஒரே தேஜோமயம்.

கலியாணமோ கார்த்தியோ!...

கார்த்தி விளக்கேற்றும் ஒவ்வொரு பெண்ணும் தன் சோதரனின் நல்வாழ்வுக்கு ஏற்றுவதாக ஒரு பாவனை.

எனக்கு?—என்னை நினைக்க...

ஐவர் பிறந்தோம்; இன்று இருவர் எஞ்சி நிற்கிறோம். என் தம்பியும் நானும்.

என்னை எனக்காகவே நினைக்க ஒருத்தியும் இல்லையா? லேசாக மூச்சுத் திணறுகிறேன்.

உடனேயே மனம் தேற்றிக்கொள்கிறது.

எழுத்து எனும் பெரும் உறவு இருக்கிறதே! நேரில் சந்திக்க முடியாவிட்டாலும், வாசகர் வழியில் எனக்குக் கிடைத்திருக்கும் தங்கைமார்களே, உங்களுக்கு என் பரிபூரண ஆசிகள். என் தாய்மார்கள் அனந்தம்பேருக்கும் என் சாஷ்டாங்க நமஸ்காரம்.

* * *

என்றைக்குமே கோழித் தூக்கம்தான். ஆனால் இன்று படு மோசம். புரண்டு புரண்டு இருப்பே கொள்ளவில்லை. என் கையே எனக்குத் தெரியாத இந்தக் கும்மிருட்டில் விட்டம் எங்கே தெரியப்போகிறது?

ஆனால் அம்பத்தூரில் அவள் சுட்டிக்காட்டுவதுபோல், பகலிலேயே விட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்ததன் அடிப்படையில்தான் இந்த ப்ரயாணம் விளைந்தது. ஆயிரம் குருட்டு யோசனைகள், புழுக்கங்களின் கடையலிலிருந்து ஒரு வாக்கியம் விட்டத்தின்மேல் சுருள் பிரிந்தது.

"வாழ்க்கையின் பிரயாணமே உயிரின் தரிசனம்."

வார்த்தைகள் தனித்தனி மயிலாடின.

எனக்கே, எப்பவுமே கொஞ்சம் திரியல் பித்து உண்டு. இப்படி இரண்டு வருடங்கள், நான்கு வருடங்களுக்கு ஒரு முறை...

இப்படித்தானே, ஆத்ம விமோசனத்தைத் தேடிப் பிக்குகள் கிளம்பியிருப்பார்கள்! இப்படியா, எஞ்மாதிரி, பெட்டி, படுக்கை டில்லிக் கூடையுடன்—?

அவர்களுடன் உன் பேரை இணைத்துக்கொள்வதால், துறவு என்று உனக்குள் நினைப்பா? அந்த எண்ணத்துடன் ஸரஸம் நடத்துகிறாயா? இது என்ன, glamour game?

"வாழ்க்கையின் பிரயாணமே உயிரின் தரிசனம்."

—"சந்தானம்!"

யார், இந்த வேளையில்?

படுதாவைத் தூக்கிப் பார்க்கிறேன். வாசற்படியில் ஒரு உருவம். "சந்தானம் இருக்கானா?"

சந்தானமே வந்துவிட்டான். இருவரும் சற்று எட்டப் போய்க் "கிசுகிசு" பேசி, சந்தானம் அவரோடு போய் விட்டான்.

உயிரின் தரிசனம் என்றால் என்ன? மனித முகம்தான். மனித முகம் மட்டும் அல்ல. சிருஷ்டியின் பல்வேறு முகங்கள். எண்ணற்ற முகங்களைப் பார்த்துப் பார்த்து, நாளடைவில் உன் பார்வையின் பக்குவத்துக்கேற்ப ஒருநாள்—

எல்லா முகங்களும் முகத்துடன் முகம் இழைந்து ஒரு முகம், ஒரே முகமாக எப்போது தெரிகிறதோ அதுதான் அவன் தரிசனம்.

* * *

மாறி மாறி தூக்கத்துக்கும், விழிப்புக்கும் சஞ்சலத் துக்குமிடையே கனவில் மாதிரியிருக்கிறது. சந்தானம் வந்த மாதிரி, அவனை மணி கேட்ட மாதிரி, "3.35 மாமா"—

மறுபடியும் விழிப்பு நேர்ந்தபோது நன்றாய் விடிந்திருந்தது. பல் விளக்கக் கிணற்றடிக்குப் போனபோது சந்தானம் மாட்டுக்குப் பிண்ணாக்குக் கரைத்துக்கொண்டிருந்தான்.

"என்னப்பா நடுராத்திரியில் அத்தனை அவசரமாப் போனே?"

"அந்த மாமா வீட்டுப் பசுவுக்குப் பிரசவம். ரொம்ப சிரமப்பட்டுப் போச்சு. பனிக்குடம் உடைஞ்சு, சிசுவும் வெளிப்பட்டுடுத்து. வலி தாங்காமல் தாய் எழுந்து நின்னுடுத்து நின்னபடியே, கன்றுக்குட்டியைக் கையில் ஏந்தியபடியே வாங்கும்படி ஆயிடுத்து. மாடு கிழம் வேறே"

உயிரின் தரிசனத்துக்காக கிளம்பிவிட்டாயே! பார். உண்மையின் தரிசனத்தையே பார்.

## 4. எங்கள் வீடு

ஆ! எங்கள் வீடு பற்றிய விஷயங்கள் வற்றாத சுனை! எங்கள் வீடு என் கையில். எங்கள் லால்குடி வீட்டைத்தான் குறிக்கிறேன். எங்கள் லால்குடி வீடுகூட இப்போ எங்களுடையதல்ல. சிவராஜ குருக்களுக்கு முப்பது வருடங்களுக்கு முன்னாலேயே சொந்தமாயச்சு.

சிவராஜ குருக்களும் காலமாகிவிட்டார். அவருடைய பிள்ளைகள் ஒற்றுமையாக ஒரு குடித்தனமாக அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நல்ல பிள்ளைகள் இன்றுபோல் என்றும் இருக்கவேணும்.

"இது பெருந்திரு வீடு. இன்றைக்கு எங்கள் கைக்கு மாறியிருக்கிறது. என்றைக்கும் இது உங்கள் வீடுதான்!" சிவராஜ குருக்களைத் தவிர, வேறு யாருக்கும் இப்படி மனமாரச் சொல்லத் தோன்றுமோ?

குருக்கள் கைக்கு மாறின பிறகு, அவர் வாசலுக்கு முகம் தூக்கி விட்டுவிட்டார். ஆனால் மற்றபடி வீடு பெரும்பாலும் இன்னும் பழைய 'அம்முவாமாகத்' தான் இருக்கிறது.

எங்கள் வீட்டுப் பெயர் அமிர்தமய்யர் வீடு. என் கொள்ளுப்பாட்டனார் பெயர். பேச்சுவழக்கில், 'அம்முவாமாகத்' தான் திரிந்தது.

கீழத் தெரு கோடியில் வடக்கே பார்த்த மூணாம் வீடு.

என் தகப்பனார். அவருடைய உடன்பிறப்புகள் உள்பட, என் நினைப்புக்கு, முன் மூன்று தலைமுறை வரை இந்த வீட்டிலேயேதான் பிறந்து வாழ்ந்து பிரிந்து, நல்லது பொல்லாதுக்குக் கூடி. அவாவா வேளை வந்தபோது இந்த வீட்டிலேயேதான் சடலம் களைந்திருக்கிறார்கள்.

என் பாட்டனார் லால்குடி பள்ளிக்கூடத்தில் தமிழ்ப் பண்டிதர். ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன் அவர் சம்பளம் ரூ 15லிருந்து ஒரே தூக்கில் ரூ 5க்கு உயர்ந்தது. வேலையை விட்டு விலகிய அன்று, கோச்சு வண்டியில் ஊர்வலம் கொண்டுபோய் வாசலில் விட்டதும், அவர் இறங்குகையில் என் பாட்டி கொல்லைப்புறத்தில் பற்று தேய்த்துக் கொண்டிருந்தாளோ, கீரை பிடுங்கிக்கொண் டிருந்தாளோ, கொல்லைப்புறத்தில் காயப்போட்டிருந்த தென்னை மட்டை, பன்னாடை, கள்ளி கொட்டாங்கச்சி களை ஒன்றுசேர்த்துக் கொண்டிருந்தாளோ தெரியாது. எப்படியும் தெருவே திரண்டு பிரமிக்கையில், வரவேற்க வாசலில் காத்துக்கொண்டு இல்லே. கோச்சிலிருந்து வலது காலை முன்வைத்து இறங்கியவர் அந்த மஸ்லின் டர்பன், கழுத்து வரை க்ளோஸ் கோட்டு, பஞ்சகச்சம், அங்கவஸ்திர கோலத்துடன் நேரே கொல்லைப்புறம் சென்று பாட்டியைத் தரதரவென்று கூடத்துக்கு இழுத்து வந்து...இந்த மட்டும் போதும்.

அந்தக் காலத்து கோபங்கள், மூர்க்கங்கள் பூரா பூரா ஆண்களுக்கு மட்டும் பரம்பரை சொத்து.

தாத்தா வரகவி, அவருடைய பதினாறாவது வயதில், பிள்ளையார் அவர் வாயில் கற்கண்டைப் போட்டதாக அவர் கனவு கண்ட மறுதினத்திலிருந்து அம்பாள்மேல், பிற தெய்வங்கள்மேல் பொழிந்த தோத்திரங்கள், கவிதையில்

பக்த சரிதங்கள், பாமாலைகள்—ஒரு சமயம் கெஞ்சல், ஒரு சமயம் கொஞ்சல், ஒரு சமயம் ஏசல்—ஆண்டவன் அம்மு வாத்து பண்ணையாள். நம்மையே அவனுக்கு ஆயுசுக்கு வாரத்துக்கு விட்டாச்சு. வேளா வேளைக் கொடுக்க வேண்டியதை அவன் கொடுத்துத்தானே ஆகணும். அவனைக் காலில் கட்டி அடி—என்கிற முறையில்.

அம்முவாம் என்றுமே சின்னக் குடும்பமாக எனக்கு நினைவு தெரிந்து இருந்ததில்லே.

தாத்தாவுடன் பிறந்தவர்கள் ஐந்து சகோதரர்கள். இரண்டு தங்கைகள், அவரவர் குடும்பமும் கச்சிதமானதல்ல.

வெற்று நாளிலேயே பகலுக்கு மூணு படியேனும் வடித்தாகணும். (இரவுக்குத் தகராறு) அசட்டு மாஉம் கொண்டாடி என்ன பயன்? ரூபாய்க்கு எட்டு படி விற்ற அந்த நாளிலேயே அத்தனை வயிறு வளர்க்க என் பாட்டனார் சம்பளம் எப்படிப் பற்றும்?

எங்கள் லால்குடி வீடு எங்கள் வீடாக இருந்த கட்டடம் இதோ மனக்கண் முன் எழுகிறது. எனக்கு அப்போ வயது ஆறு.

வாசலில் ஓலைக்கூரை கவிந்த இரண்டு திண்ணைகளுக் இடையே படிகளுக்குப் பதில் சரிவாய் வழித்துவிட்ட வாசல் தாண்டினவுடனே நடையில் ஒழுங்கையுள். தலைமுறை தலைமுறையாக அம்மாவாத்து பிரசவ அறை. இதிலிருந்து எத்தனை இளவரசுகள், ராஜகுமாரிகள் புறப்பட்டிருக் கிறார்கள். அதன் இருட்டுக்குக் கர்ப்பக்கிரகம் தோற்றது. மருத்துவச்சி குழவியின் உடம்பைத் தடவித்தான் ஆணா பெண்ணா கண்டு சொல்ல வேண்டும்.

ஆனால் அம்முவாத்து ஃபேமஸ் பிரசவ கேஸ் குடும்பத்துள் நேர்ந்ததல்ல. கறிவேப்பிலைகாரி கேஸ். என் கொள்ளுப்பாட்டனார் காலம்.

அப்போ எல்லாம் பிடியரிசிக்குக் கறிவேப்பிலை. காசுக்கு அல்ல. கறிவேப்பிலைக் கூடைக்காரி முன் பின் பார்த்தவள் அல்ல. வெளியூரிலிருந்து வந்த புதுமுகம். கொள்ளுப்பாட்டி கறிவேப்பிலையை வாங்கிக்கொண்டு அடுக்களைக்குள் அடைந்திருக்கமாட்டாள். வாசலில், 'அப்பா, அம்மா' என்று தீவிர முனகல் சத்தம் செவியில் வந்து மோதவும், ஓடி வந்து பார்த்தால் கறிவேப்பிலைக் கூடைக்காரி திண்ணைத் தூணில் சாய்ந்தபடி, இடுப்பைப் பிடித்துக்கொண்டு தவிக்கிறாள். இடுப்புக்குமேல் உடம்பு செக்காய்த் திரிகிறது. நெற்றியில் வேர்வை கொட்டுகிறது. கண் செருகுகிறது.

பாட்டிக்கு விஷயம் புரிந்துவிட்டது. "அடி பாவீ" அவளைத் தோளில் தாங்கியபடி பாதி தாங்கி, பாதி நடத்தி, ஒழுங்கையுள்ளே போய்ச் சேர்த்துவிட்டாள். அதன் இருள் இருவரையும் கவிந்து அணைத்துக்கொண்ட சில நிமிடங்கள், ஒரு புதுக்குரல் இருளை வெட்டியது. இதற்குள் தகவல் தீப் பரவி வாசல் எதிரே தெரு. 'கொல்' அம்முவாத்தில் கறி வேப்பிலைக்காரி பிரசவம். இதுதான் தெருவெல்லாம் பேச்சு. அன்று மாலை அவள் புருஷன் தேடிக்கொண்டு வந்துவிட்டான். இருந்தும் அவளை ஒரு வாரம் வைத்துக்கொண்டு பத்தியம் போட்டு கையில் ஒரு கால்படி அரிசியும், ஒரு பழம் புடவையும் கொடுத்து கொள்ளுப்பாட்டி அனுப்பி வைத்தாளாம்.

பிள்ளைப்பேறு—இவ்வளவு பெரிய குடும்பத்தில் ஒழுங்கை உள்ளுக்கு அதிகம் ஒழிவு இருக்காது—பிள்ளைப் பறு மாறி மாறி இல்லாத சமயத்தில்—ஒழுங்கை உள்ளில்

தான் பழையது மூலை. கட்டெறும்பு, பிள்ளையார் எறும்பு, கரப்பான் பூச்சி சிறகு—சகிதமாய் மறுநாள் காலை கலத்தில் விழுந்து, குழந்தைகளில் யாரேனும் தைரியமாக முனகினால் பாட்டி ஒரேயடியாய் அடித்துப் பேசிவிடுவாள். குழம்பு ரஸத்திலிருந்து கலந்துவிட்ட இரட்டை மிளகு (கட்டெறும்பானால்), இரட்டைக் கடுகு (சிற்றெறும்பானால், மிளகாய்த் தோல் (மூன்றாவதை நினைத்தாலே உடம்பு சிலிர்க்கிறது) அதற்கும் மீறி ஒரு வாண்டு நிரூபிக்க முயன்றால்—

"ஆமாம், அப்படித்தான் போ. எறும்பு தின்னால் எண்ணாயிரம் வயசு. கண்ணுக்குக் குளுத்தி. படிக்கிற பையனுக்கு இப்பவே ஒணக்கையைப் பாரு. பெருந்திரு இன்னிக்கு இதானும் படியளந்திருக்காளே பாரு. முன் பிடிக்குப் பின்பிடி துணையா வாரிக்கப்பட்டு ஓடுங்கடா. பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு"—

"வயதின் நியாயங்கள்!" என்று என் பிள்ளை ல. ரா. சந்திரசேகரன் வியாக்கியானம் செய்வான். நடை தாண்டியதும் கூடம், நாலு பக்கமும் அடைத்த பட்டை வாசல்.

பரம்பரையாக இதுதான் குடும்பத்தின் அரங்க மேடை. அம்முவாத்து சிற்சபை. இங்கு நேர்ந்திருக்கும் நல்லது. பொல்லாது, நடத்தியிருக்கும் விசாரணைகள், தீர்த்திருக்கும் நியாயங்கள், போட்டிருக்கும் சண்டைகள், கண்டிருக்கும் சமாதானங்கள், கற்பனையும் திகைக்கும் நனவுச் சம்பவங்கள்—இவைகளின் ஆவிகள் இன்னும் இங்கேயேதான் சுற்றிக் கொண்டிருக்கின்றனவென்றால் மிகையில்லே. இந்தக் குடும்பத்தின் சரிதத்தில் இது நடந்திருக்குமா, இத்தனையும் நடந்திருக்குமா எனத் திகைப்பு ஏற்படின், திகைப்பவர் திகைக்கட்டும், வேறு சமாதானம் என்னிடமில்லை.

கூடத்தின் ஒரு மூலையில் அங்குமிங்குமாய் ஐந்தாறு குழிகள். மெனக்கெட்டு தோண்டினவை அல்ல. சௌகரி யத்தை உத்தேசித்து ஒண்ணு ரெண்டு பின்னால் அப்படியும் நேர்திருக்குமோ என்னவோ? நாளடைவில் கல்லும் கரையும் உடைந்து, தேய்ந்து விழுந்துவிட்ட சிறுசிறு பள்ளங்கள், குழந்தைகளுக்கு அவைகளில்தான் பழையதைப் பிசைந்தோ, கரைத்தோ பாட்டி ஊற்றுவாளாம்.

இதோ, கிழக்கே பார்த்து அம்மன் பலகை. அதில் படமோ விக்ரஹமோ, எதுவும் கிடையாது. இரண்டு சந்தனக் கட்டைகளின்மேல் ஒரு வெற்றுப் பலகை. எண் ணெய்ச் சிக்கேறி, அவ்வப்போது இழைகோலம் அதன்மேல் இட்டு அழிந்து...

அதன் அடியில் ஒரு குத்துவிளக்கை நிறுவுகிற மாதிரி நெருக்கமாய் அளவாய் ஒரு பிறை. அங்கு நாங்கள் குழந்தை கள் விளையாடிக் கொண்டிருக்கையில், பெரியவர்கள் பக்கத் தில் நின்றுகொண்டு ஏதோ பேசிக்கொண்டிருக்கையில், விளையாட்டாய்ப் பிறையில் நான் கைவிட்டதும் கைக்கு வழவழ 'சர்ர்'ரென்று ஒரு பாம்பு—நன்றாய் இரண்டு விரல் அளவுக்கு பருமன் இருக்கும். அங்கிருந்து கிளம்பி நேரே வாசல்வழி சமையலறையுள் ஓடிவிட்டது. துரத்தி வந்து தேடிப்பார்த்தால் சோடையே இல்லை. ஜலதாரை வழி கொல்லைப்புறம் போயிருக்கும். ஆறு வயதில் மனதில் பதிந்த அதன் நெளிவழகு இன்னும் தேய மறுக்கிறது.

தாத்தா கால்மேல் கால் போட்டுக்கொண்டு புத்தகத் தில் அன்று நெஞ்சில் ஜனித்த பாட்டொன்றை முத்தான எழுத்தில் எழுதிக்கொண்டே—அதை விட்டுவிடுங்கள்— அம்பாளுடைய ஸ்வரூபங்களை நிர்ணயிக்க நாம் யார்?

அப்போ புரியவில்லை.

இப்பொ மெய்சிலிர்க்கிறது.

ஒரு திவசம், திங்களுக்கு, சகோதர சகோதரிகள் அவரவர் குடும்பத்துடன் ஒன்று கூடுகையில் வீடு திமிலோ கம்தான். தாத்தா, உடன்பிறந்தவர்கள் எல்லோருமே வாட்டசாட்டமாய் (தங்கைமார் உள்படத்தான்) தழல் சிவப்பா...சுந்தரம் சுந்தரமாகவே இருந்ததால் சுந்தரம் பிச்சை. கடைசிவர் (போலீஸ்) குத்து மீசையும் தொந்தியும் தொப்பையுமாய், தோளுக்கு ஒருகதை கொடுத்துவிட்டால், மாயாபஜார் ராக்ஷஸன்தான். அவர் பிரதாபங்களே தனிக் கதை சொல்லும். சொல்ல எனக்கும் நேரமும் வாய்ப்பும் அமையணும்.

தாத்தா தமிழ்ப் பண்டிதர். ஆனால் வம்ச ரத்தத் திலேயே தமிழ் ஓடிற்று. கூடத்தில் ஒரு காலை மடித்து மறுகாலை அதன்மேல் யோகாசனம்போல் மடித்துப் போட்டு உட்காருவது இவர்களின் பொது அம்சம் போலும்.

"நான் சொல்றேன். விபீஷணன் ஒரு பிராத்ருத் ரோஹி!"

"தந்தேன் விபீஷணா லங்காபுரி" யார் வீட்டு சொத் தைத் தூக்கி யாருக்குக் கொடுக்க இவன் யார்?"

"வீபீஷணன், சுக்ரீவன்—அவன் இன்னொரு பிராத்ரு த்ரோஹி (இந்த ப்ரயோகத்தில் ஒரு தனி மோகம் சலாம் போட்டு சேவகம் செய்ய ஒரு ஹனுமான்—ஏவலுக்கும் வசைச்சொல் கேட்டுக்கவும் வீட்டிலிருந்தே அழைத்து வந்து விட்ட ஒரு லக்ஷ்மணன் வேலை இடாமலே செய்ய, சுத்தி இத்தனைபேர் நடுவில் இடிச்சபுளி மாதிரி இருந்துட்டு இவன் ஒரு காவிய நாயகனாம்!"

"ஆமாம் இந்திரஜித் பைசலான பின் ராவணனைக் கொல்றது என்ன கஷ்டம்? செத்த பாம்பு அடிக்கிற மாதிரி—"

"டேய் ஜகதீசா. இந்தப் புனர்வசு நக்ஷத்ரங்களே மக்குத்தானே!"

"ஜனகன் கலப்பைக்குப் பெட்டியோடு குழந்தை தட்டுப் பட்டது சரி. அப்புறமாவது ஜனகன் புலன் விசாரிச்சானா? சீதை என்ன ஜாதின்னு தெளிவாச்சோ? அவள் பிராம் மணத்தியா, எஸ். சி. யா?—

"சிதம்பரம், அதெல்லாம் எதுக்கு? வளர்ப்பில் படியற படிதான் ஜாதி குணம், தரம் எல்லாம்—

"அப்போ பிறவிக்குணம்னு ஒண்ணு கிடையாதா?"

"குலத்தளவே யாகுமாம் குணம்—"

"வளர்ப்பு குணம் வெல்லுமா? பிறவி வாசனைதான் தூக்குமா?"

இது இன்னொரு விவாதம். பொதுவாக ஆரம்பித்து அவரவர் தனி வாழ்க்கைமேல் தாக்குதலாகவும் மாறிவிடும். "உன் லக்ஷணம் தெரியாதா, வெளியில் சொன்னால் வெட்கக் கேடு, நாளைக்கு சாப்பாடு முடிஞ்சதும் பிரிஞ்சு போயிடப் போறோம், வந்த இடத்தில் வம்பு ஏன்னு இருக்கேன்."

இந்தச் சர்ச்சைகள் வெறும் பொழுதுபோக்கு வம்புகள் அல்ல. வெவ்வேறு நூல்களிலிருந்து (நன்னூல் காண்டிகை உள்பட) மேற்கோள்களுடன் அவனவன் தன் தனித்தனி நியாயங்களைப் பேசுகையில், தர்க்க ரீதியில் தன்தன் தன்னிழப்பில் இந்தக் கூடமே சித்ர கூடம், பஞ்சவடி, ராவணன் சபையாக மாறிவிடும். சுவாரஸ்யத்தில் வாசலி லிருந்தே ஒரு கூட்டம் கூடியிருக்கும். எங்களுக்கு ஒன்றும் புரியாது. ஆனால் வாயைப் பிளந்தபடி கேட்டுக்கொண் டிருப்போம். ஈக்கள் தாராளமாக உள்ளே புகுந்து புறப் பட்டுக் கொண்டிருக்கும்.

"அமமுவாத்து வரட்டு ஐம்பம் மட்டும் ஒரு எள்ளுகூடக் குறையல்லே!"

"யார் சொன்னது? ஸ்ரீமதியா? அவள் வாய்க்குச் சக்கரை போடு."

ஒரு நாலு வரிகளுக்கு முன் தோன்றினாளே ஸ்ரீமதி தாத்தாவின் கடைசித் தங்கை, என் தாய்வழிப் பாட்டி. என் அப்பாவும் அம்மாவும் அம்மாஞ்சி அத்தங்கா. கழுத்திலும் கன்னத்திலும் ஓடும் பச்சை நரம்பு தெரியும். வெள்ளைச் சிவப்பு. சுருக்கவே குழந்தைகளுடன் அண்ணன் வீட்டுக்கு வந்துவிட்டாள். அவளுக்கு நைடதம். நன்னூல் பாடம். அவள் பாண்டித்யத்துக்குத் தாத்தாவே பயப்படுவார்.

"ஸ்ரீமதி! இந்தப் பாட்டில், இந்த வரி இப்படி விழுந்திருக்கே; இது சரிதானா?"

ஸ்ரீமதி நாற்பது தாண்டவில்லை ஒரே நாள் வயிற்றுப் போக்கு, அவளுக்கு முன்கூட்டியே தெரிந்துவிட்டது.

"ராமசாமி! என் தாயின் கையைப் பிடித்து அண்ணன் கையில் கொடுத்தாள். 'அம்மாப் பெண்ணை நீ சப்தரிஷிக்குத் தான் பண்ணிக்கணும். ஏற்கனவே தகப்பனில்லாக் குழந்தைகள். ஆனால் இனி நான் என்ன பண்ண பண்ணமுடியும்?"

குழந்தைகளை அழைத்து தனித்தனியாக ஒருமுறை அணைத்துக்கொண்டு தன்னிடமிருந்து தள்ளினாள்.

"இனி என்னிடம் வராதேயுங்கள். என்னைப் படைச்சவனை நான் சந்திக்கப் போகணும்!"

உடனே கம்பராமாயணத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தவள்தான். பொலபொலவென பொழுது புலரும் வேளையில் அவள் அடங்கியதும், தாத்தா மாரே வெடித்து விடும்போல் அப்படி விக்கிவிக்கி அழுதாராம்.

இவர்கள் அழுகை வராத ஆண்கள், அழுகை வராத பெண்கள். இவர்கள் அழுதால், இவர்கள் அழுகை பயப் படுவதற்குரியது.

* * *

"அடே!"

நாசியிலிருந்து வரும் அந்த விளிப்பு கூடமே அதிர்கிறது. பெந்துப்பாட்டி என் கொள்ளுப்பாட்டி.

"அடே! இதோ இப்போ சொல்றேன், உனக்கு ஆண் குழந்தை பிறக்காது!"

"பிறந்தாலோ?"

"பிறந்தால் தக்காது!"

இதற்கென்ன சொல்கிறீர்கள்? இதுமாதிரி ஒரு தாய் உண்டா? இப்படியும் ஒரு மகன் இருப்பானா?

இட்டாயே சாபம் பாவி! பாவி! என்று மகன் பொருமி என்ன பயன்?

ஐயோ கோபத்தில் நாக்கு மீறிப்போச்சே! என்று பெத்தவள் பின்னால் நொந்துகொண்டு என்ன பயன்?

சொன்னது சொன்னதுதான். சொன்னது சொன்னபடி! பலிதம் என்பது என்ன? வாக்குக்கும் செயலுக்கும் இடைக் கோடு அழிந்துபோவதுதான். அழிஞ்சு போச்சு!"

"லட்சுமி உயிர் போயிண்டே இருக்கு பார்! இதோ போச்சு!"

தலை தொங்கிவிட்டது. மூணே நாள் ஜுரம். இது தாத்தா.

தாத்தா சுத்த பயங்கொள்ளியாம். 'லட்சுமி உள்ளங் காலில் என்னவோ சுருக்குன்னது. செருப்பையும் தாண்டி தைச்சுதா, கடிச்சுதா, தெரியலியே! நாலு மிளகு கொண்டு வா! காரம் தெரியலியே! தித்திக்கிற மாதிரியிருக்கே!'

அப்படிப்பட்ட மனுஷன் வேளை வந்ததும், தாம்பாளத்தில் தட்சணைபோல் உயிரை இவ்வளவு அனாயாசமா 'இந்தா எடுத்துக்கோ'' என்கிற மாதிரி......

நிஜப்பரீட்சை எப்போ வருகிறது. எப்படி வருகிறது. வருகிறபோது எப்படி அவனவன் தாக்குப்பிடிக்கிறான்—இன்னும் மூடுமந்திரமாய்த்தான். இதில் தோற்பு, ஜெயிப்பு எதிர்பார்க்கிற மாதிரி இல்லை.

அம்மன் பலகைக்கு நமஸ்கரிக்கிறோம்.

கொள்ளுப்பாட்டியிடம் எங்கள் குலதெய்வம் சான்னித்யமானதற்கு அம்மன் பலகைதான் சான்று.

பாட்டிக்கு எழுதப் படிக்க வராது. புத்தி சூட்சமம் கிடையாது. வஜ்ர சரீரம். ஒரு ஜுரம், தலைவலி என்று ஒரு நாளேனும் அறியாள். முன்கோபக்காரி. ஆனால் பிறர் துன்பம் காணப்பொறாள். சரியான முரடு.

தினமும் அர்த்தஜாம தரிசனம் பார்த்துவிட்டுத்தான் சாப்பாடு. அவள் நாளில் அர்த்தஜாமம் இரவு பத்து, பதினொன்று ஆகும்.

—பிரம்மோத்ஸவத்துக்குக் கொடியேறி இருக்கிறது. பாட்டி, த்வஜஸ்தம்பத்தண்டை நமஸ்காரம் (ஆண்கள் போல் சாஷ்டாங்கம், அவள் வழக்கம் அப்படித்தான்) பண்ணியெழுந்தவள், திடீரென்று கணீரென்று அவள் குரல், யாகசாலையிலிருந்து கேட்கும் வேத பாராயணத்தில் ஒரு அட்சரம், மாத்திரை பிசகாமல் கலந்தது.

என்ன இது, கீழ்த்தெரு கோடிவீட்டு பெந்துவா?

ஒரு மண்டலம் பொருந்திரு அம்மன், பாட்டியிடம் விளையாடினாள். பாட்டி ஆவேசம் கண்டு ஆடவில்லை.

எங்கள் அம்மன் அப்படியல்ல. சாந்த ஸ்வரூபி. அவளே ப்ரவிருத்த ஸ்ரீமதி. தர்க்கம், மீமாம்ஸம், வேதம், ஸ்மிருதி, வியாகர்ணம், தத்துவவிசாரம், பண்டிதர்கள் நிஜ ஆர்வத்துடன் வேண்டும் நுணுக்கங்களுக்குப் பதில்கள், அவளைப் பரீட்சிக்கும் முறையில் எழுப்பும் குதர்க்கங்களுக்கு சரியான வாயடைப்பு—அது பாட்டுக்கு பெந்துப்பாட்டி வாயிலிருந்து ஸரளமாய் வந்த வண்ணமிருந்தன.

லால்குடி, பக்கத்து ஊர்கள், அங்கிருந்து சேதி தொற்றிக் கொண்டதும், இன்னும் தூர இடங்களிலிருந்து ஜனத்திரள் எங்கள் வீட்டுக்குப் புரண்டது. பாட்டி கை விபூதிக்குத் தீராத வியாதிகள் தீர்ந்தன.

பாட்டி கையில் சக்கரம் தோன்றிற்று.

அந்த மண்டலம் முழுதும் பாட்டிக்கு ஆகாரம் செல்லவில்லை. ஆனால் தெம்பு சொல்லுபடி போகாது. சாதாரணமாக அவளுக்கு வேளைக்கு மூணு ஆழாக்கு வெண்கலப் பானை முழுக்க வேணும்.

நிஜத்தோடு நாளடைவில் சேர்ந்திருக்கக்கூடிய கைச்சரக்கு, புரளி, சிக்கு, பசையைப் பிரிக்கவோ. ருசுப்படுத்தவோ நான் இயலாதவன். எல்லாம் சொல்லக் கேள்விதான். யாரும் எழுதி வைத்துவிட்டுப் போகவில்லை. எழுத்து மட்டும் கலப்படத்திலிருந்து விடுதலையா? ஆனால் ஒன்று தெளிவு. இந்த வீட்டில் பெந்துப்பாட்டி காரணமாக அல்லது சாக்கில் ஏதோ அற்புதம் நிகழ்ந்திருக்கிறது.

அன்று வெள்ளிக்கிழமை. மாலை கூடத்தில் சுவரோரமாய்ப் பலகையில் கோலமிட்டு, குத்துவிளக்கை வழக்கம் போல் ஏற்றி வைத்துவிட்டு, யார் யார் என்ன வேலையில் இருந்தாரோ தெரியாது யாரும் கூடத்தில் இல்லை. பெந்துப்பாட்டி சமையலறையில் இருந்திருப்பாள்.

பிறகு யார் முதலில் கண்டார்களோ தெரியாது.

பளபளக்கத் தேய்த்த பித்தளைச் சொம்பில் (எங்கள் வீட்டு ஏனம் இல்லை) ஆவி பறக்கப் பால், ஒரு தார் வாழைப்பழம், அம்மன் பலகையில் இருந்தன. யார் கூடத்துள் வந்து வைத்திருக்க முடியும்? அதற்கு வழியு மில்லை. அந்தப் பாலும் பழத்தின் ருசி சொல்லுபடி போகாதாம்,

பெருந்திருப் பிரசாதம் வேறு எப்படி இருக்கும்?

லால்குடியில் வீட்டுக்கொரு சப்தரிஷி, ஒரு பெருந்திரு— ஸ்ரீமதி.

என் கொள்ளுப்பாட்டி பெந்து (பெருந்திரு)

என் தாய்வழிப் பாட்டி ஸ்ரீமதி.

அம்மா ஸ்ரீமதி.

அப்பா சப்தரிஷி.

எங்கள் வீட்டில் பிறந்துவிட்டு, இந்த சாஸனத்துடன் தான் எழுதாமல் எப்படி இருக்க முடியும்?

## 5. அம்மா

அம்மாவின் மடி பிதுங்கிற்று. ஆனாலும் அம்மாவுக்குத் திருப்தியில்லை. அவரைப் பந்தலின் இன்னொரு பக்கம் ஏணியைப் போட்டாள்.

என்ன அம்மாப் பெண்ணே, இன்னும் பறிக்கணுமா? பறிச்சதே யதேஷ்டமா..

அம்மா, ஏணிமேல் ஏறிக்கொண்டே, "நமக்கு மட்டும் இருந்தால் ஆயிடுத்தா? சங்கராந்தியுமதுவுமா, மத்தவாளுக்கும் கொடுக்க வேண்டாமா?"

"மத்தவாளா? அது யாருடா மத்தவாள்? அண்ணாவுக்கு—அதுதான் அப்பா, அப்பாவை அண்ணாவென்று அழைப்போம்— அண்ணாவுக்குத் திகைப்பு. ஆனால் அண்ணா இடக்காகவும் பேசுவார்.

"ஏன், எதிர்த்தாம், பக்கத்தில் உடையார் வீடு, இடையன் வீடு, வேலைக்காரி குடும்பம், பால் பொங்கித் தான்னு விசாரிக்க வரவா, இவாள்ளாம் உங்களுக்கு மனுஷாளாப் படல்லியா?

"சரிதான், ஊரையே வளைச்சுப் போட்டாச்சா? நாளைக்கு எல்லார் வீட்டிலேயும்தானே பால் பொங்கறது. நீ வேறே சீர்கொடுத்து அனுப்பணுமா?"

"உங்கள் வாக்குப்படியேதான் இருக்கட்டுமே! வருஷத்துக்கொரு நாள். எல்லாரும் சந்தோஷமாயிருக்கணும்னே ஒரு நாள். ஊரே கல்யாண வீடு. நம்மிடம் இருக்கறதைப் பங்கிட்டுப்போமே!"

அதுதான் அம்மா.

O

இது எங்கள் சொந்த ஊர் இல்லை. சென்னையில் அண்ணா, உடம்பு சீர்குலைந்து போய், ஆரோக்யத்தைத் தேடி, குடும்பத்தோடு வயிறு பிழைக்க வந்த ஊர். அப்பா பள்ளிக்கூட (ஆறாம் வகுப்பு வரைதான்) ஹெட்மாஸ்டர். கூடவே போஸ்ட் மாஸ்டர். அவர் பெயரே தபாலாபீஸ் வாத்தியார்.

எதிர்வீட்டு முதலியார்தான் இந்த வீட்டுக்குச் சொந்தக்காரர். மூட்டையும் முடிச்சுமா, குழந்தையும் குட்டியுமா, இரவு முதன்முதலாக அண்ணாவும் அம்மாவும் வண்டியிலிருந்து இறங்கியபோது, முதலியாரும் அவர் மனைவியும் எங்களை வரவேற்க வாசலில் காத்திருந்தனர்.

முதலியாரும் அவர் மனைவியும், கோவில் உற்சவத்தில் முன்னால் போமே, ஆள் உள்ளே புகுந்துகொண்டு போமே பூதப் பொம்மைகள்! அதுமாதிரி.

"என்ன முதலியார், நான் திருப்பித் திருப்பிக் கேட்டு எழுதியும், வாடகையைப் பற்றியே ஒண்ணும் தெரிவிக்கவில்லை?"

முதலியார் மார்மேல் கட்டிய கைகளுடன், "இங்கெல்லாம் அப்படியொண்ணும் கண்டிப்பு கிடையாதுங்க. மாலை வேளையில் வீட்டுக்கு விளக்கேத்தி வைக்க மஹாலச்சுமி வந்தால் போதுங்க. அம்மாவைப் பார்த்தாலும் அப்பிடித்தான் இருக்காங்க."

முதலியார் பிரமாதமாகப் பேசுவார். ஆனால் அவர் மனமும் அவர் உடலைவிடப் பெரிது.

O

மிக மிகச் சிறிய வீடு. இரண்டே சின்ன அறைகள் சமையலறையையும் சேர்த்து. ஆனால் அந்தப் பிரம்மாண்டமான கொல்லையைப் பார்த்ததும் அம்மாவால் சும்மா இருக்க முடியவில்லை. முதலியார் வீட்டிலிருந்து கடப்பாரையும் மண்வெட்டியும் வாங்கிக்கொண்டாள்.

வந்த ஒரு வாரத்துள் கொல்லைப்புறத்துக்கு முகமே மாறிவிட்டது. அத்தனையும் அம்மா.

அவளே கொம்புகளை நட்டுப் பந்தல் போட்டாயிற்று. நாளடைவில் அவரைக்கொடியும் படர ஆரம்பித்துவிட்டது. பந்தலின் நிழலில் நாங்கள் விளையாடுவோம். அங்கிருந்து தொங்கும் புடலையைப் பார்த்து எங்களுக்கு வியப்பாயிருக்கும்.

''தொடாதேங்கோ துஷ்டைகளா?'' அம்மா சமையலறையிலிருந்து இரைவாள். ஆனால் நாங்கள் தொடுவோம். ஒரு தடவை ஒரு புடலை தானாவே பந்தலிலிருந்து கழன்று கீழே தொப்பென்று விழுந்து, அதோ வாழை நட்டிருக்கும் இடத்துக்குச் சரசரவென்று போய் ஜலதாரையுள் மறைந்தது. அம்மா ஓடிவந்து எங்களை மூர்க்கமாக அணைத்துக்கொண்டு அன்று மாலை எல்லோருக்கும் சுத்திப் போட்டாள்.

கொல்லையின் ஒரு மூலையில் மாட்டுக் கொட்டகை. ''அம்மா!'' கலியாணி கத்துகிறது. அதற்கு மடிகனம் தாங்காமல் துளிக்கிறது இன்னும் சற்று நேரம் பார்த்துவிட்டு, குப்பன் வராவிட்டால், அம்மாவே கறந்துவிடுவாள்.

அம்மாவுக்குக் கண் கண்டது கை செய்யும்.

அவள் புத்திசாலி என்றதால் மட்டுமே அல்ல.

அவளால் சும்மாயிருக்க முடியாது.

அவள் சுபாவமே அப்படி.

அம்மா.

○

தினம் சாயங்காலம் அம்மா காய்கறித் தோட்டத்தைச் சுற்றி வருவாள், வலது கை சுட்டுவிரலும் நடுவிரலும் மேலுதட்டைப் பொத்தியபடி. அது அவளுடைய மானரிஸம்.

வெண்டைச் செடி எதிரே நிற்பாள். அங்கு ஏதோ பேச்சு நடக்கும் என்றே என் கருத்து. பாஷை நமக்குப் புரியாதது. மாலைக் காற்றின் ஜாலமோ அதன் சொந்தமான அசைவோ, செடி எட்டி அம்மாவைத் தொட முயல்வது போல எனக்குத் தோன்றும். அம்மா நகர்வாள். செடி படபடவெனத் தலையை ஆட்டும்.

அம்மா காதண்டை இடித்துக் 'கிசுகிசு'த்துத் தவிக்கும் அவரைக்கொடியை அம்மா மெல்லத் தூக்கி பந்தலில் தொற்ற விடுவாள்.

ஓ, அம்மாவுக்கும் அவள் செடிகளுக்குமிடையே நிச்சயமாகப் பேச்சு இருந்தது; சந்தேகமேயில்லை. ஆனால் பாஷைதான் நமக்குப் புரியாதது.

○

முதல் காய்ப்பைப் பறித்ததும் அம்மா, என்னிடம் சொல்லி அனுப்பி முதலியார் தம்பதிகள் வந்தனர்.

வந்ததும், ""முதலியார், இந்தாங்கோ இது உங்களுடையது உங்கள் வீட்டு மண்.""

சிவபாக்கியம் முன்றானையை ஏந்தி அதில் வாங்கிக் கொண்டாள்.

முதலியார் இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு, "மண்ணை வெச்சிட்டு என்ன செய்யறதுங்க? அதைப் பொன்னாக்கும் கை யாருடையது? அம்மா வந்த அன்னிக்கே சொன்னேனே, வீட்டுக்கு மஹாலக்ஷ்மி வந்தாச்சுன்னு,"

முதலியார் பிரமாதமாய்ப் பேசுவார்.

ஆனால் அவர் கண்கள் இப்போது துளும்பின. கூடவே புன்னகையில் கன்னங்கள் நெகிழ்ந்தன. முதலியாரும் அவர் மனைவியும் பக்கத்தில் பக்கத்தில் ஜோடி யானைக்குட்டிகள்.

○

நாங்கள் இருபது வருடங்கள் இந்தக் கிராமத்தில் வாழ்ந்தோம். எங்கள் குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம் இங்குதான் கழிந்தன. பிறகு மேலே படிக்கச் சென்னைக்கு. நாங்கள் பையன்கள் சிற்றப்பா வீட்டுக்குச் சென்றாலும், மைக்கல்மஸ், கிறிஸ்துமஸ், கோடையென அவ்வப்போது விடுமுறைக்கு என்று திரும்பிவிடுவோம். அப்போது இங்கிருக்கும் நேரமெல்லாம், விடுமுறை கழிந்ததும் சென்னைக்குத் திரும்பணுமே என்ற கசப்பு. சென்னையில் இருக்கும்போது, மறுவிடுமுறைக்குக் காத்திருக்கும் நாட்கள்.

அப்படியொரு காலம்.

எங்கள் வாழ்க்கையிலேயே சந்தோஷமான சத்தான நாட்கள் இந்த வீட்டில்தான். எளிமையான வாழ்க்கையில் களங்கமற்ற சந்தோஷங்கள்.

○

தினப்படி எனக்கொரு வியப்பு: அம்மா எப்போ குளித்தாள்? ஏனெனில், நாங்கள் என்ன சுருக்க எழுந்திருந்தாலும் அதற்கு முன்னேயே அம்மா குளித்திருந்தாள். விடிகாலையில் எழுந்துவிடுவாள்.

"வசுதேவ பாலனே அசுரகுல காலனே எழுந்திரும்
யசோதா நந்தனே நந்தகுமாரனே பிருந்தாவன
நவநீத சோரனே எழுந்திரும்" [லோலனே

வெட வெட குளிருக்குத் தலைமேல் இழுத்துப் போர்த்திய கம்பளியுள், கிருஷ்ணன் பேரைச் சொல்லி எங்களை எழுப்பும் பாட்டு எட்டும். அம்மாவின் நடமாட்ட சத்தங்கள் கேட்கும்.

அம்மா குரல் வேய்ங்குழல் போன்றது. சற்று உச்ச ஸ்தாயியில், சற்றுத் திகட்டும் இனிப்புடன்...

கம்பளியுள் முதல் விழிப்பில் கேட்கும் இந்த முதல் ஓசை தான், அன்றைய, அன்றன்றைய நடப்புக்குக் கணித்த ஸ்ருதி என்று இப்போது நினைத்துக்கொள்ள எனக்கு மிகவும் பிடிக்கிறது.

○

ஆம், நினைத்துப் பார்ப்பதென்பதே ஸ்ருதி மீட்டல் தானே, சிந்தனையின் இசைவில், சிந்திக்கும் விஷயங்கள். அவைகளின் கூட்டின் அவசரமும் ஆத்திரமும் பின்னோக்கில் தணிந்து, தன் தன் இடத்தில் விழுந்து அமைதி பெற்று விடுகின்றன.

இதில் அம்மா, அவளைப் பற்றி நான் எண்ணும் போதெல்லாம்—அவளை எண்ணாத நாட்களே இல்லை—அவளுடைய ஸ்வரஸ்தானத்தில், அவளுடைய எண்ணத்தில், பேச்சில், செயலில், சந்தோஷங்களில், துயரங்களில் தீர்மான மாக, சுத்தமாக, உள்ளத்தின் வானில் ப்ரகாசிக்கிறாள்.

○

நான் தவங்கிடந்து பெற்றபிள்ளை. திலோமம் பண்ணி, விரதங்கள் முழித்து ராமேசுவரம் போய்...

இத்தனை அருமையாக நான் பிறந்தபோதிலும், அம்மாவிடம் தனிக் கொஞ்சல்கள் சலுகைகள் நான் அனுபவித்ததாக அந்தச் சின்ன வயது முதற்கொண்டே ஞாபகம் இல்லை.

—பள்ளிவிட்டு வந்ததும், ஸ்லேட்டையும் புத்தகங்களையும் வீசியெறிந்துவிட்டு அம்மா மடியில் விழுந்ததாவோ,

—"அடி கண்ணே! படிச்சுக் களைச்சுப் போயிட்டியா?" என்று அவள் என்னை வாரிக்கொண்டதாவோ,

—சாதத்தைப் பிசைந்து எங்களுக்கு கையில் போட்டதாவோ,

—'என்ன குழந்தையை இப்படிப் போட்டு அடிக்கறேளே!' என்று எனக்குப் பரிந்துகொண்டு வந்ததாவோ,

—"நீ சமர்த்து, கெட்டிக்காரன்" என்று என்னை நேரில் பாராட்டினதாவோ,

—பிறரிடம் பெருமைப்பட்டுக் கொண்டதாவோ, ஊஹூம்

அதற்கெல்லாம் பாட்டிதான் சரி. வீட்டுக்குப் பாட்டி கட்டாயம் வேணும்.

ஆனால் அம்மா, பாட்டியான பிறகும், பாட்டியாக இல்லை. எனக்கு ஆச்சரியமாயிருக்கும், ஏமாற்றமாயிருக்கும், ஆத்திரம் வரும்.

ஆனால்—

ஆ, இது எனக்கு மிக்கப் பிடித்தமான சொல்.

சொன்ன புத்திகள், போதித்த கோட்பாடுகள், அச்சுறுத்திய கட்டுப்பாடுகள், பழக்கவழக்கங்கள் எல்லாவற்றையும் ஒரே கணத்தில் தூக்கியெறிந்து, கலகத்துக்குக் கொடி நாட்டும் சொல்.

ஆனால் அம்மா எதையும் வெளிக் காண்பித்துக் கொள்ளமாட்டாள்.

அது அவள் சுபாவம்.

தீபாவளி சமயத்தில் தலையில் ஒரு கை எண்ணெய் வைப்பாள்.

விளையாட்டிலோ, மேலே ஏறிக் கீழே விழுந்து அடிபட்டுக் கொண்டுவந்தால், காயம் பட்ட இடத்தில் தேங்காய் எண்ணெய் தடவுவாள்.

இதுபோன்ற அத்யாவசியங்களுக்கன்றி, அம்மாவுக்குப் பிள்ளைகளையோ பேரக் குழந்தைகளையோ தொட்டு உறவாடும் பழக்கம் இல்லை.

ஒருசமயம் பேச்சுவாக்கில்: "இந்த நாள் எதற்கெடுத்தாலும் ருஜு கேட்கிறது. தன்னம்பிக்கையில்லாத நாள். யாருக்கு எதை ருஜுப்படுத்தியாகணும்? என்னை உனக்கா? உன்னையே உனக்கா? நேர்மையில்லாத நாள்!"

ஏன் அப்படிச் சொன்னாள்? அப்போது புரியவில்லை. ஆனால் அவள் குமுறல் மட்டும் தெரிந்தது, முகத்தில் குழுமி விட்ட குங்குமத்தில்; குரலில் தெறித்த அனலில்.

ஏன், ஏன்?

இப்போ புரிகிறது

கொஞ்சம், கொஞ்சம்.

இப்படித்தான், சூத்திரம் போல் எதையேனும் சொல்லி விட்டுச் சும்மாவாகிவிடுவாள். கேட்டாலும் சொல்லமாட்டாள். "என்னவோ அப்போ தோணித்து, சொன்னேன், போயேன்!"

O

நண்பர்களுடனோ, ஆபீஸ் அலுவலிலோ வேறு எக் காரணமோ, என் வழக்கநேரம் மீறி நான் வீடு திரும்ப நேர்ந்தால் அம்மா வாசலில் உட்கார்ந்திருப்பாள். நானும் உள்ளே போகாமல் பக்கத்தில் உட்கார்ந்துகொள்வேன். உள்ளே ஒரே ரகளையாயிருக்கும்.

பேசமாட்டோம். பேசத் தோன்றவில்லை.

தனிமையே ஒரு அழகிய பூ. விரிந்த பூவின் இதழ் கள் மீண்டும், படுதாயிறங்கும் இருளில், எங்கள்மேல் குவிந்து. அதனுள் நாங்கள் அந்த மோனத்தின் இதவுக்கும் 'மெத்'துக்கும் இனி எங்கே போவேன்?

எதை, யாருக்கு ருஜுப்படுத்தியாகணுமா என்ன அம்மா பாஷையில்?

நாங்கள் இருந்த இந்த நிறைவுநிலை பாஷைக்குக் கிட்டாது. அப்பாற்பட்டது. ஆனால் இப்படியும் ஒரு நிலை உண்டு என்று தெரிகிறது. அலைதாண்டிய அமைதி. ஆனால் கடல்.

அம்மா பெருமூச்செறிகிறாள்.

O

"அம்மா, கடவுள் இருக்கிறார் என்பதில் உனக்கு நம் பிக்கையிருக்கிறதா?

அம்மா பிரம்பு நாற்காலியில் சாய்ந்தபடி, மேலுதட்டின் மேல் வலது சுட்டுவிரலையும் நடுவிரலையும் வைத்தபடி எங்கோ யோசனையிலிருந்து மீண்டாள். "ஊங்?"

"கடவுள்மேல் உனக்கு நம்பிக்கையிருக்கா?"

கையை விரித்துக் குறுஞ்சிரிப்புச் சிரித்தாள்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு, "திருடனுக்கும் கன்னக் கோல் சார்த்த ஒரு மூலை வேணுமில்லையா?"

நான்தான் ஏற்கனவே சொல்லிவிட்டேன், அம்மா புதிர் மாஸ்டர்.

ஆனால் அவளைக் குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை. எந்தப் பேருண்மைக்கும் 'பளிச்'சான வெளிச்சம் இடை யாது.

ஒளியுள் நிழலாய்
நிழலுள் ஒளியாய்
ஒளியும் நிழலுமாய்
ஒளியில் நிழலில்
ஒளிந்து கொண்டு
களவு காட்டும்
மாய நிர்வாணம்
இல்லை
நிர்வாண மாயம்.

சத்யமாயை என்று ராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்கிறார்.

தான் அறிந்தோ அறியாமலோ இந்தக் களவு காட்டும் பாஷையால் அம்மாவும் இதற்கு உடந்தை.

O

பத்து நாட்களுக்குமுன் ஓரிரவு, தூக்கமிலாது, புரண்டு கொண்டிருக்கையில், எண்ணங்களின் கடையலில் 'தொப்புள்கொடி' என்று ஒரு சொற்றொடர் தோன்றிற்று.

(மனம் எப்போத்தான் சும்மாயிருக்கிறது, சும்மா விட்டது?)

ஆம், கொடியை அறுத்துவிட்டாலும், அதுவாய் அறுந்தாலும் அல்ல இற்று விழுந்தாலும் கொடி உறவின் பிணைப்பு விட்டுப் போவதில்லை.

போவதேயில்லை.

அகிலத்தையே அப்படி ஒரு தொப்புள் கொடி சுற்றிக் கொண்டிருக்கிறது. அதன் மறுபெயர் அம்மா.

O

அம்மா, நான் அறிந்த அவள் இளமையிலேயே சற்றுக் கொழ கொழவென்று இருப்பாள். சந்தனச் சிவப்பு.

வெள்ளைப் பசு.

நாளடைவில், கூந்தலின் கறுகறு, சாம்பல் நிறமாக மாறி, அது அலை நுரையாகி, மஞ்சள் பூத்து, சமுதாயம் நெற்றியில் அழித்துவிட்டாலும், பிறவியின் மங்கலம் தழைத்து, வாழ்க்கையின் அடிமேல் அடிக்கு வைத்த பெயர் அனுபவம் மேல் பூத்த புற்றினுள், தன் விரக்தியின் தனிமையில் வீற்றிருந்தாள்.

விரக்தியா? வீம்பா?

அம்மா பெயர் ஸ்ரீமதி.

வாழ்க்கையில் அம்மா ரொம்ப அனுபவித்துவிட்டாள். சின்ன வயதிலேயே பெற்றோர்களை இழந்து, திருமணமான பின், (பெங்களூரில் குடித்தனம் பண்ணுகையில் ஒரே வார இடைவெளியில் தம்பிகள் இருவரையும் ப்ளேக்கில் இழந்து அம்மாவும் அண்ணாவும் கோடைவிடுமுறைக்குச் சென்னைக்கு வந்திருந்த சமயத்தில்), அண்ணா திடீரென்று இறந்துபோனார்.

அந்த வாரத்துக்குள்ளேயே, வீட்டு மாப்பிள்ளை, ஜுரத்தில்.

அம்மா கிராமத்துக்குத் திரும்பவேயில்லை. பிள்ளைகளுடன் தங்கிவிட்டாள்.

சில வருடங்கள். இன்னொரு பெண்ணை ஜுரத்தில் இழந்தாள்.

அடுத்த வருடம், என் தம்பி, மாரடைப்பில். குடும்பத்தின் தூண்.

"ஆண்டவனே, உனக்குக் கண் இல்லையா?" கதறுகிறோம். துடிக்கிறோம். தூற்றுகிறோம். அடுத்தே "விதி யாரை விட்டது?" என்று கண்ணீரைத் துடைத்துக்கொள்கிறோம். தத்துவம் பேசுகிறோம். சிரிக்கிறோம்.

விவஸ்தை கெட்ட ஜன்மா. ரோசம் கெட்ட பிழைப்பு.

ஆனால் திருடனுக்கும் கன்னக்கோல் சார்த்த மூலை வேண்டும்.

○

என் கசப்பில் நான் சொல்கிறேன்.

ஆனால் அம்மாவிடமிருந்து இதுவரை ஒரு வார்த்தை வந்ததில்லை.

அம்மா வெளிக் காண்பித்துக் கொள்ளமாட்டாள்.

அது அவள் சுபாவம்.

ஆனால் இப்போதெல்லாம் அவ்வப்போது நெஞ்சைத் தடவிக்கொள்வாள்.

'விடமுண்டகண்டன்' தேவாரத்தில் வருகிறதோ?

உள்ளே இறங்கவில்லை.

"என்னம்மா பண்றது?"

"நெஞ்சை அடைக்கிறது சரியாப் போயிடும். குடிக்கத் தண்ணீர் கொடேன். ஊம், அம்மாடி! சரியாப் போயிடுத்து. GAS அடைச்சிருக்கு."

○

ஆனால் சரியாய்ப் போய்விடவில்லை. இந்த நெஞ்சடைப்பு மாதம் ஒருமுறையிலிருந்து இருமுறையாகி, அப்புறம் வாரம் இருமுறை, அப்புறம் தினம், எப்போ வேணுமானாலும் வேளையே கிடையாது.

உயிர் விடுதலைக்குத் தயாராயிருக்கிறது. உடல்தான் லேசில் அதை விடுவதில்லை. உயிரோடு பூமியில் விழுந்ததிலிருந்து இத்தனை காலம் உயிருடன் பழக்கம், உடல் தன் அழிவை லேசில் ஒப்புக்கொள்வதில்லை. பிடியை லேசில் விட மறுக்கிறது.

○

''எங்கே ஆபீஸுக்குக் கிளம்பறியா?''

''ஆமாம்''

''ஒரு நிமிஷம் என்னை உன்மேல் தாங்கிக்கோயேன். அதனால் என் அவஸ்தை குறையப் போவதில்லை, மன சுக்குத்தான் ஏதோ ஆறுதல். அம்மாடி!''

''ஒரு வேடிக்கை பார்த்தையா? அன்று நீ குழந்தையா இருந்தபோது மடியில் வளர்த்திண்டேன். இன்று என் வேளையில் உன் தோள்மேல் சாஞ்சுக்கிறேன். கணக்கு சரியாப்போச்சு இல்லே?''

லேசாகச் சிரிக்கிறான்.

○

அன்று—என்றோ.

கிராமத்துக்குப் போயிருந்தேன். பழைய நினைவுகளின் ஈர்ப்பு. அங்கே, நாங்கள் விட்டுப்போன கிராமம் இல்லை. மின்சாரம், வானொலி, ஒலிபெருக்கி, இரைச்சல் எல்லாம் புகுந்தாச்சு. நாட்டில் கிராமங்களே இப்போது இல்லை. அது ஆறுதலுமில்லை.

எதிர் வீட்டில் முதலியார். அவர் குடும்பம்? இடமே சிதிலமாயிருந்தது.

ஸில்லி. நீ வரும்வரை காத்திருப்பார்களா? என்ன எதிர் பார்க்கிறாய்? காத்திருக்கணுமா?

எங்கள் வீடு, ஆவலுடன், ஆசையுடன் வாசற்படி மிதித்ததும் குரைத்துக்கொண்டு ஒரு நாய் வெளியே வந்தது.

''உஷ்—down, down, ஜிம்மி. யார் சார் நீங்க? யார் உங்களுக்கு வேணும்?''

''யாரும் வேண்டாம்'' என் குரலில் அழுகையே நடுங்கிற்றோ என்னவோ? ''இங்கே சின்ன வயசில் நாங்கள் குடியிருந்தோம். சும்மாப் பார்க்க''—

''அப்படியா வாங்க, வாங்க!''

ஆனால் அங்கே பாக்க என்ன இருக்கிறது? அவரைப் பந்தலையும், செடிகளையும், மாட்டுக் கொட்டாயும்—

மடையா!

இல்லை,' நான் இந்த சமயத்துக்கு மன்னிப்புக்கு உரியவன். சில சமயங்களில் எண்ணத்தின் வார்ப்படம் எண்ணும் அவாவில் விழும் வேகத்தில், கனத்தில், காலம் கூட அதனடியில் சிக்கிக்கொண்டு அழுந்திவிடுகிறது. நேரம் என்னவோ சொற்பம்தான். ஆனால் இந்தப் ப்ரமை நிகழ்ந்தது நிகழ்ந்ததுதான். அதுவரை நாம் பாக்யவான்கள் ஆவோம்.

இடம் சாய அடியாக மாறியிருந்தது. ஒருபக்கம் சாயம் ஏற்றிய நூல்கள் கற்றை கற்றையா கொடியில் உலர்ந்து கொண்டிருந்தன. அங்கங்கே தரையில் சாயம் குட்டை குட்டையாத் தேங்கி நிரந்தரமாய்த் தங்கிவிட்ட துர் நாற்றம்.

ஆனால் அதோ என்ன?

சுவரோரத்தில் ஒரு அவரைக்கொடி, நட்டுவைத்த ஒரு கொம்பில் சுற்றிக்கொண்டு ஏறி அந்தரத்தில், துளிர் சுருண்டு தத்தளித்துக் கொண்டிருந்தது. தூக்கிவிட்டால், ஓட்டுக் கூரைமேல் தொற்றிக்கொள்ளும்.

''அட நீ எப்போ வந்தே?''

இப்போ எனக்கு நன்றாகப் புரிந்தது, அம்மாவுக்கும் அவள் செடிகளுக்குமிடையே பாஷை.

கண்ணீர் மறைத்தது.

தலையைக் குனிந்துகொண்டு, சாமர்த்தியமாக வெளி யேறி விட்டேன்.

உலகத்துக்கெல்லாம் ஒரே தொப்புள் கொடி.

அம்மா.

# 6. சில அனுபவங்கள். சில கேள்விகள், சில தரிசனங்கள்

## அனுபவம்

என் எல்லாப் படைப்பிலேயும் personal experience உட்பொருளாக ஊடுருவிக்கிடக்கும். நான் அதைச் சேகரித்து elaborate ஆக்கி, literary expression கொடுக்கிறேன். இதை மட்டுமே நான் conscious ஆகச் செய்கிறேன்னு சொல்லலாம்.

Mystricism, Mystic nature எல்லாம் என் கதையிலே இருக்குங்கிறதை நான் ஒத்துக்கிறேன். ஒத்துக்கறேன்கறதுக்காக defend பண்ணறேன்னு அர்த்தம் இல்லே.

## நம்பிக்கை

'idol' மட்டுமே faithஐ evoking—ஒன்றைத் தொட்டு ஒன்று...உண்டாக்கிட முடியாது. முதல்ல invoke பண்ணறோம். அதுதான் அதுல முக்கியம். பின்னால் faith உண்டானால், image உருவாறது. நம்ம level of senses rise (ஆகும் போது) ஆக ஆக, imageஐ feel பண்ணமுடியறது. எல்லாமே மனசோட, evolutionary conditionஐப் பொறுத்தது.

எனக்குச் சில நம்பிக்கைகள் உண்டு. ஏன் அந்த நம்பிக்கைங்கற கேள்வியே அர்த்தமில்லாதது. I want to believe, so I believe. Ultimate realisation வந்த பிறகுதான் நம் நம்பிக்கைளின் அர்த்தங்கள் நமக்குத் தெரியவரும். 'Beauty' என்பதே அந்த 'ultimate reality'யை teach பண்ணறதுதானே!

**என் பாத்திரங்களின் ஆதாரசுருதி**

என்னோட பெரும்பான்மையான பாத்திரங்களின் ஆதார சுருதியே வைராக்கியம். இந்த current of pride இருக்கே, அது என் மூதாதைகள் வம்சாவளியாக் கொண்டு வர்றது.

இந்த 'pride'னாலேயே, அவாளுக்கு Courage without hopeங்கற நிலைமை சாத்தியமா இருந்தது. அதுதான் greatest quality of Man என்று என்னோட கணிப்பு.

என்னோட எழுத்தில், நான் பேசுவதாக நானும் நினைப்பதில்லை. மூதாதைகள் என் மூலமாய்—என் எழுத்து மூலமாய்—என் எழுத்து மூலமாய் அவர்களே—என் மூதாதைகளே—பேசுகிறார்கள். நான் அல்ல.

'Acceptence of Reality'-ன்னு ஒரு நிலையை அடையறதுகூட Surrender of hopeங்றதும் சாத்தியமாறபோது தான்.

என்னையே நான் சில விஷயங்கள்ல, நிமிஷங்கள்ல, கைவிட்டிருக்கேன். அதுதான் Courage without hopeன்னு நான் நினைக்கிறேன்.

**வாழ்க்கையின் அர்த்தம்தான் என்ன?**

'What is the meaning of my self?' இந்தக் கேள்வியை பல கேள்விகள்ல ஒரு கேள்வின்னு என்னால நினைக்க முடியல. இதுவே கேள்வியா இருக்கு எனக்கு.

என் தாகம், தவிப்பு, புதிர், தெளிவு, எல்லாமே இந்தக் கேள்வியிலேர்ந்துதான் உற்பத்தியாறது.

'Life'க்கு மீனிங், 'living' என்பது இல்லை நெனச்சுப் பார்த்தா,—lifeக்குன்னு தனியா மீனிங் ஒண்ணும் கிடையாது. எல்லாமே நம்ம attribute பண்ணறதுதான்.

நன்னா அனுபவிச்சுப் பாத்த, எந்த ஒரு நிமிஷத்தையும் சாரமில்லாத நிமிஷம்னு ஒதுக்கமுடியாதுன்னு நமக்குத் தெரியும். All small moments are parts of supreme moments.

எண்ணிக்கையில என்ன இருக்கு? 'Entire Universe is a tear drop of eternity.' இது eternityங்கிறது. natureனு மட்டும் அர்த்தம் இல்ல...இயற்கையையும் தாண்டி எது மிஞ்சுகிறது, அதுதான் eternity.

## நல்ல படைப்பு

கலைப்படைப்பு ஒரு நல்ல creationல் மூன்று முக்கியமான அம்சங்கள் படிஞ்சுருக்கும் Cunning in structute, sincerity in, intent, integrity of contents இதெல்லாமே.

என் படைப்புகள் சம்பந்தப்பட்டமட்டில், சொல்றேன் —வார்த்தைகள் எதுவுமே நம்மோடதுன்னு தனியா இல்ல. Words ஐ வச்சு Mischiet பண்ண முடியாது. கூடாது. அமைகிற விதத்தில் வார்த்தைகள் அமையற structure இருக்கே, it adds to the beauty, because beauty is the deepest cunning! of creation.

## TRUTH

Truth is not the exclusive property of any one. ஆனாலும் சில இதயங்களின் மூலம் அது கொஞ்சம் அழகாகத் தன்னை—தன் இருப்பை வெளிப்படுத்திக்கொள்கிறது. தைரியம், நேர்மை, துணிச்சல், வீரம் இதெல்லாமே, சத்தியத்தின் பல்வேறு நாமாவளிகள்.

இன்னொன்று Truth may be common. But it is also particular சில நேரங்கள்ல, சத்தியத்தோடு இழைந்த அனுபவங்களை வார்த்தைகள்ல communicate பண்ணற போதில். அதுனோட பவித்ரம் கெட்டுப் போயிடறாப்பல நேக்குத் தோண்றது.

## Memory

நம் மனம், சில சம்பவங்களை, முகங்களை, காட்சிகளை அப்படியே freeze பண்ணி வச்சுடும், அந்தக் கட்டம், பல வருஷங்களைத் தாண்டி வந்தப்புறம்கூட அப்படியே நின்னுண்டுருக்கும். பதமாக உறைஞ்சுருக்கும் அதைத்தான் 'Memory'ன்னு சொல்றோம்.

'Memory' அற்புதமான சக்தி வாய்ந்தது. அது poetic qualityயோட. ஒரு லேசான பொய்மையும் கலந்துருக்கு. நாம் நினைவு கூரும்போது, அது சத்யபிம்பங்களோடு, நிழல் களையும் சுமந்து தன்னோடு இழுத்து வந்து கொட்டும்...

## குறியீடுகள்

சில உணர்ச்சிகளுக்குச் சமதையான வார்த்தைகளை நான் காத்திருந்து, கஷ்டப்பட்டுத் தேர்ந்தெடுத்திருக் கிறேன். அப்பட்டமான அர்த்த வெளியீடுகளைவிட, எனக்கு குறியீடுகளில் ஒரு அசாத்தியமான சடுபாடு, சிறு அசைவினாலேகூட பெருவிளைவுகளை உண்டுபண்ண முடியும். புருவத் தூக்கலிலே நான் communicate பண்ணி விடணும்னு ஆசைப்படறேன்.

இதையும் தவிர, ஒரு மௌனமான communicationல் என் நடவடிக்கைகள் இருக்கணும்னு ஒரு ஆசை. Personality யோட, 'full projection' அதுலதான் இருக்கு. ஒவ்வொரு வெளியீடும் நேர்கிற சமயத்துல என்னுள் ஒரு excitement

உண்டாறது. சொல்லிச் சொல்லி தெரியப்படுத்தறதைவிட, சொல்லாமல் உணர்த்துவதுதான் நளினம்னு நெனக்கிறவன் நான்.

**ஜன்னல்**

பெருவாரியான ஜனங்களுக்கு இப்படிப்பட்ட மொழி நடை, முழுக்க communicate பண்ண முடியாததால்தான், நான் புரியாத எழுத்தாளனாப் போயிட்டேன்.

என் நடைமொழியின் நோக்கமே மௌனம்தான். 'Religious" கண்ணோட்டத்துல சொல்லலை. இதை இந்த மௌனமே, என் artistic achievement ஆக இருக்கணும்.

'என்" Religionக்கும் 'என்' artக்கும் ரொம்ப வித்தியாசம் இல்லே. Religionல் rituals இருக்கு. Ritualsல் ஒருவிதமான சௌந்தர்ய உபாசனையைப் பார்க்கமுடியும். 'Art'ம் அதன் மூலமாக கலா சௌந்தர்யத்தைக் காணமுடியும். இப்படி ஒண்ணை ஒண்ணு overlap ஆக வாய்ப்பு இருக்கிறதல்லவா? அந்த united நிலையை எட்டுவதே என் நடைமொழியின் லட்சியமாவும் இருக்கிறது.

நாஸ்தீகக் கலைஞனுக்கும்கூட சௌந்தர்ய உபாசனா உணர்வு எப்போதும் இருக்கும். 'சாமீ' பூதம்னு சொல்ல வரலை நான். சௌந்தர்ய உபாசனை எப்படி Religion ஐயும் art ஐயும் link பண்றதுன்னு சொல்ல வந்தேன்.

**MUSICAL EXPERIANCE**

எனக்கு ரொம்பச் சின்ன வயசிலிருந்தே சங்கீதத்தில் ஈடுபாடு உண்டு—பட்டணத்திலே நான் வேலை பாத்துண்டுருந்தப்போ, அலையோரமா, பாடிண்டே நடந்து போவேன். பாடறதுன்னா ராகம் மட்டுமே இல்லை. ஆலாபனையும்

தான். ராக ஆலாபனை எதுக்கும் கட்டுப்படாதது. உடம்பில தெம்பு இருந்தால் 3 நாள் கூடப் பாடலாம். ஈடுபாட்டுக்குத் தகுந்த மாதிரி நம்பளை இழுத்துண்டு போற சக்தி ஆலாபனைக்கு உண்டு.

அப்படி ஆலாபனை பண்ற சமயத்துல அதில் உண்டாகிற வண்ணக் குழைவுகள் எனக்குள்ளும் உண்டாகிண்டே இருக்கும். உன் பார்வையால் அதைப் பாக்க முடியுமான்னு கேட்டால் என்னால் பாக்க முடியறதுன்னு சொல்ல நான் தயார்.

இந்த Musical effectஐ, ஏன் என் எழுத்தில் கொண்டு வர முடியாதான்னு நான் அப்பவே யோசிப்பேன்.

வார்த்தைகளை உச்சரிக்கும் ஓசைக்கும் Musical effect உண்டு. வார்த்தைகள் ஒன்றோட ஒண்ணு குழையறபோது ஒரு நெகிழ்ச்சி உண்டாகும். அதே மாதிரி, Sound ஐ break பண்ணினா, எல்லாமே ஸ்வரங்கள். அந்த ஸ்வரங்களின் இழைவுக்கு ஏத்தா மாதிரி ராகங்கள் பிடிபடும். 'ஸ்வரங்கள்'ங்கறது என்ன? ஓசையின் ஒழுங்குபடுத்திய arrangements....ஏற்பாடுகள் வார்த்தைகளையும் பிசிறு எடுத்து regulate பண்ணினால் ஏன் Musical effect உண்டாக்க முடியாது. 'Music sound' எல்லாம் மூல ஆதாரத்தை (ஆதி மூலத்தை) நோக்கமாகக் கொண்டது. They are all aiming at the original source.

Musicஇல் ஆழ்ந்தால் எனக்கு சில pictures கிடைக்கத் தொடங்கினது. ஒருமுறை மதுரை சோமு, சிந்து பைரவியில் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். பிர்க்காக்களாக அடுக்கிக்கொண்டே இருந்தார். ஏதோ ஒரு இடத்தில் அவரோட குரல் உடைஞ்சது. அபசுரமா உடையலை உடைஞ்சதிலேயே ஒரு அனுசுரம் இருந்தது. அந்த கணத்தில் என் நெஞ்சுல சின்ன வெள்ளைக்கல் வந்து மோதினாப்பல இருந்தது. 2½ மணி நேரம் அந்த வலி எனக்கு இருந்தது.

சாமா ராகம் சாந்தமுலேகாவைக் கேட்டுண்டிருந்தேன். கேக்கக் கேக்க, என்னைச் சுத்தி ஒரே ப்ளூவா (ப்ளூவாட்டர் இல்லே) இருக்கற மாதிரியும், நான் ஒரு white fishஆ ஆயிட்ட மாதிரியும் ஒரு சுகமான உணர்வு...உண்டானது. MUSICAL PICTURES, நெறைய கிடைச்சுருக்கு நேக்கு.

இதனாலேயே, ராகங்களுக்கு சொரூபம் இருக்குன்னு நான் உறுதியா நம்புவேன். நம்பறேன்.

**வார்த்தைகளும் படைப்பும்**

வார்த்தைகளுக்கு நான் அடிமை இல்லை. ஏன்னா. ஒரு artist. வார்த்தைகளுக்கு அடிமை ஆகக்கூடாது.

Artistக்கு ஒரு இரக்கமற்ற தன்மை வேணும். வார்த்தைகள் ரொம்ப அழகா வந்துவிழும். ஆனா அந்த வார்த்தை அந்த இடத்துக்குப் பொருத்தமா இருக்காதுன்னு தீர்மானம் பண்ணிட்டா. இரக்கமில்லாமல் வெட்டிடணும். 'ஐயோ, பாவம்' இவ்வளவு அழகா இருக்கே அந்த வார்த்தை'ன்னு கருணை காட்ட முடியாது.

அப்படி வெட்டறதுனால, அந்த வார்த்தை வீணாப் போறது இல்ல! மன அலமாரியிலே இருக்கிற அடுக்குத் தட்டுகள்ல, அது போய்ப் பதுங்கிண்டுடும். இதனாலயே, நான் டயரிலே எதையும் குறிச்சுவச்சுக் காப்பாத்தறது இல்லை.

என் கதைக்கான வார்த்தைகள் எல்லாமே என்னோடதுன்னு சொந்தம் கொண்டாடறதுக்கு இல்லை. சில நேரம் சுவரின் கிறுக்கல் தெருவிலே அகஸ்மாத்தாய்க் காதுல விழும் சம்பாஷணை இவையெல்லாம்கூட, என் கதையில் வார்த்தைகளா வந்து அமஞ்சிருக்கு!

"ஜனனியில்' கணுக்கன்னு ஒரு கதை, நாசூக்காகப் பேசிப் பேசி காரியத்தைச் சாதிக்கிற ஒரு பெண்ணின் பாத்திரம் வருது அதுல. அவளது அந்த சுபாவத்தைச் சித்தரிக்க,

எனக்குச் சரியான உவமை கிடைக்காமல் கதையை நிறுத்திட்டுக் சண்ணசந்துட்டேன். அப்போ, ஒரு வெறுஞ் சுவர். அதுல ஒரு கரிக்கட்டிதானே 'மாம்பூவைக் காம்பாய்ந்தாற் போல்...னு எழுதறது. இந்த உவமை ரொம்பப் பொருத்தமா இருக்கும்னு' தோணினதாலே அப்படியே போட்டேன்.

'மாம்பூ' எவ்வளவு நளினமானது, அதுல காம்பாயறது எவ்வளவு பெரிய சமாசாரம்கறதே பின்னால்தான் தெரிஞ்சுண்டேன்.

ஒரு படைப்புக்கான வார்த்தைகள் ஒவ்வொண்ணிலயும் ஜீவனைத் தக்கவச்சுப் பண்ணனும். ஊஞ்சல் சங்கிலி மாதிரி ஒண்ணோட ஒண்ணு கோத்துண்டு வார்த்தைகள் அமையனும். வார்த்தைகள், பொருளை அமுக்காதபடிக்கு பொருளை—அர்த்தத்தை project பண்றா மாதிரி அது அமையணும்.

நான் இப்படியே கற்பனை பண்றேன். 'வார்த்தைகள்' இப்படிக் குறுகிக் குறுகி ஒருநாள் வார்த்தைகளே இல்லாமல் ஒழிஞ்சுபோயிடணும்...எனக்கு நன்னாத் தெரியும், இது துர் ஆசை. நிறைவேறாதுன்னு!

வார்த்தைகளை விரயம் பண்ணவே கூடாது; சிக்கனம் ஒரு நல்ல படைப்பின் வீர்யத்துக்கு அடிப்படை. பின்ன ஏன் உங்க கதை 4.5 பக்கத்துக்கு வர்றதுன்னு கேக்கலாம். பேசற பொருள் பெரிசா இருக்கறதுதான் அதுக்குக் காரணம்.

சொல்லைக் குறுக்கக் குறுக்க, அதுக்கு ஒரு அசாத்ய ப்ரஷர் ஏற்படும். அந்த சொல்லைப் பிரயோகம் பண்ணும் போது பட்டாசு மாதிரி 'படார்னு' வெடிக்கும். பட்டாசு சிதைஞ்சு போயிடும்...போகட்டும் இது உண்டாக்கற வெடிப்பு இருக்கே அதுதான் முக்கியம்.

## கவிதை

கவிதைக்கு அப்படிப்பட்ட வார்த்தைகள் தேவை. ஆனாலும் கவிதைங்கிறது வெறும் வார்த்தையில இல்லை. கவிதை என்பது ஜீவனில் உறைவது.

கவிதையோ, வசனமோ, உக்கிரம் வேணும். என் கதையில் உக்ரம் இருக்கிற இடத்தைக் 'கவிதை' என்று நீங்கள் அழைத்தால் நான் பொறுப்பில்லை. தனிப்பட்ட முறையில் வசனத்துக்கும் கவிதைக்கும் வித்தியாசம் இருக்கிறதா நான் நெனக்கலே...

'Basic emotions' ஒரு சரியான கணத்தில், அடிவயிற்றி லிருந்தோ, முதுகுத்தண்டிலிருந்தோ, உக்ரம் ததும்ப எழும்பித் தன் முகம் காட்டும். உக்ரத்தால் எழுச்சி. எழுச்சி தானே கவிதை!

## சில கேள்விகள்...சில பதில்கள்

கே: 'அபிதா' நாவலில், அபிதா ஒரு chief character இல்லை. கதையின் பிற்பாகத்தில்தான் அபிதாவே வருகிறாள். அப்படி இருக்கும்போது, ஏன் கதைத் தலைப்பை 'அபிதா' என்று வைத்தீர்கள்?

ப: Attain பண்ணமுடியாத ஒரு stateசின் உருவகம்தான் அபிதா. That state may be a thing or a person.

Sometimes, it acts as a catalystic elemeat. Though it has no involvement it will influence others heavily. 'அபிதா' அவளது நிலையில் அப்படியே இருந்தாலும், இவனை ரொம்ப பாதிக்கிறா.

சகுந்தலைமூலம் பூரணமடையாத தனது காதலை பூரண மாக்கிப் பூர்த்தி செய்துகொள்ள, அவன் விரும்புகிறான்.

அபிதா அதிலே முழுக்க develop ஆகலே. அபிதா யாரு? சகுந்தலையின் second edition தானே?

## PERSONAL EXPERIENCE

என் அனுபவத்தில் மோதாத எதையும் நான் கதையாக் கிடலை...என் personal experience! மனசிலே ஆழ உழுது போய் இருக்கும் வாழ்க்கையிலே போய்ச் சேர்ந்து, பிரிக்கமுடியாதபடி வாழ்வோடு இழைஞ்சுபோய் அடி மனசிலே தங்கிக் கிடக்கும், அது என்னிக்காவது கூக்குர லிட்டுக்கொண்டு வெளிக் கிளம்பறபோது நான் பாத்திருக்கி றேன். பார்ப்பேன், பார்க்கிறேன். நினைவில் தேய்ந்து, வருடக்கணக்கில் அனுபவத்தின் மெய்ப்பொருளாக, ஒருவித மான அலாதியான காவிய சோகத்தோடு வெளிக்கிளம்பும் அந்தத் தருணத்திலே நான்கூட அது என்னோடதுன்னு சொந்தம் கொண்டாட முடியாது. என்னோடது இல்லைன் னும் மறுக்கறதுக்கு இல்லை.

சிலந்தி, பண்ணற கட்டடம் முழுக்க அதுக்குள்ள இருக்கிற எச்சிலால்தான் நூற்கிறது. சம்பவம், பாஷை சூழ் நிலை, உணர்வு, மன அவஸ்தைகள் பாவனைகள், பழைய நினைவுகள், தேடிக் கண்ட சுயதர்சனங்கள் இவை எல்லாம் சேர்த்து நான் ஒரு கட்டிடம் கட்டறேன்.

சிலந்தியோட வலை இல்லை அது. கட்டடம். அந்த சமயத்திலே காவிய உரு வலையோட மத்தியில் இருக்கலாம். ஓரத்தில இருக்கலாம். சில சமயம் சிலந்தி தான் கட்டின வலையிலேயே சிக்கற சமயங்களும் உண்டு!

'கிரிட்டிக்ஸ்'னு சொல்லற சிலபேருக்கு, இந்தக் கட்டடம், ஓட்டடைன்னு தோணினா, அதுக்கு நான் என்ன பண்ணமுடியும். ஒரு மாதிரியான உருவக பாஷையிலே சொல்றேன், இது புரியறதா?

என் 'அபிதா' ஒரு guiding star மாதிரி, துருவ நட்சத்திரம் மாதிரி பெரிய அம்பியை stimulate பண்ணறா. கலா ரீதியாகவும், சமூக ரீதியாகவும், அவளது பவித் திரத்தைக் காப்பாத்தறதுக்கு, அவளது மரணத்தைத் தவிர

வேற வழி என்ன இருக்கு! நேக்கே வருத்தம்தான் அபிதா அப்படி மறைஞ்சுபோறதல, ஆனா வேறவழி என்னஇருக்கு?

'கரடிமலை' ஒரு character ஆகும்னு எனக்கு அபிதாவை எழுதறபோது தெரியாது. ஏன், அதுல வர்ற நந்திகூட, ஒரு பிரதான பாத்திரமாகி இருக்கிறதே! முதல்ல introduce ஆற நந்தி, அப்புறம் கடைசில. அபிதாவைச் சாகடிக்கற காட்சிலதான் appear ஆறது. அதுனால, பாத்திரப் படைப்புகள், உயிருள்ள அம்சமாகத்தான் இருக்கணும்னு பாத்திரங்களின் அவசியம் இல்ல... அதேமாதிரி, பிரதானம்கிறதே, அதன் உயிர்ப்பைப் பொறுத்தே இருக்கே தவிர, கதையிலே அதன் வியாபகத்தைப் பொறுத்ததா இருக்கலை.

கே: எல்லாக் கதாநாயகிகளும் மானுஷ்யத் தன்மையை விட, அதீதமான தெய்வீகத்தன்மை பொருந்தியவர்களாக இருக்கிறார்கள்.

ப: தாயின் சொரூபமாக, அம்மனின் சொரூபங்களாகவே, எனக்கு என் கதாநாயகிகள் காட்சி அளிக்கிறார்கள். தெய்வீக உருவகம்தானே 'அம்மா' என்கிறவள்...

ராமகிருஷ்ண பரமஹம்ஸரோட சம்பாஷணைகள், உபதேசங்கள், வாழ்க்கை, என்னில் ரொம்ப ஊடுருவி இருக்கறதும் பாத்திரங்களின் தெய்வத்தன்மைக்கு ஒரு காரணமா இருக்கலாம்...

கே: எழுத்து, சங்கீதம் இரண்டுக்கும் ஏதேனும் அடிப்படைக் காரணிகள் உண்டா? உண்டாயின் அவற்றை விளக்க முடியுமா?

எழுத்து, சங்கீதத்துக்கும் அடிப்படை சத்திய வேட்கை. இந்த வேட்கை இல்லாதவன் எழுத்தாளனாகவோ பாடகனாகவோ இருக்கமுடியாது.

உன்னத நிலை... இரண்டுமே, 'supremacyஐ reach பண்ற தாகத்தோடு கிளம்புகிறவை... பூரணத்துவத்தை விட, பூரணத்தைத் தேடற—தேடிப்போற 'தேடல்' இருக்கே அதுக்கே ஆயிரம் அர்த்தங்கள் இருக்கு!

# 7. சொல்லோடு என் உறவு

இந்தக் கட்டுரையில் நீங்கள் காணப்போவது என்னுடைய அனுபவத்தின் மூலம் (கிட்டத்தட்ட 45 வருடங்களுக்கு மேல்) சொற்களுக்கும் எனக்கும் கண்ட சொந்த உறவு பற்றிய விஷயங்கள், அவைகளை உங்களுடன் பங்கிட்டுக் கொள்கிறேன். இந்த உறவில் என் கண்டுபிடிப்புக் கள், நான் தேர்ந்த, தெளிந்த முடிவுகள், அனுமானங்கள் அனைத்தும் என்னுடைய சொந்த முடிவுகள், அனுமானங் கள், அவைகளிலிருந்து பொதுத்தன்மையை (Generalisation) இழை பிரிக்கவோ, இது இது இப்படித்தான் என்று விதி களையோ ஏற்படுத்த எவ்வளவோ முயன்று பார்த்தும் இயலாதவனாக இருக்கிறேன் என முன்னாடி தெரிவித்துக் கொள்கிறேன். ஏதேனும் ஒரு இலக்கணத்துள் இவை அடங்கித்தான் இருக்கும். அல்லது இனிமேல் அடங்கலாம். அல்லது இலக்கணம் கண்டுபிடிக்கப்படலாம். அதற்குரிய இலக்கணம் இலாது எதுவும் வெளிப்படமுடியாது. ஆனால் அந்த இலக்கணத்தின் பெயர் எனக்குத் தெரியாது. என் அனுபவத்தை உங்கள் முன்னால் வைக்கிறேன். பிறகு அவரவர் பாதிப்பு, மனப்போக்கு, சாமர்த்தியத்துக்கு ஏற்றவாறு இதை இழுத்துக்கொள்ளட்டும். அவரவர் பூத்ததுக்குத் தக்கபடி.

சொற்கள் என்று சொல்லும் இந்த சந்தர்ப்பத்தில் என்னால் சொற்களை வெறும் சொற்களாக நோக்க முடியவில்லை. சொற்கள் பாஷையின் ஆக்கம், கருவி என்கிற கண்ணோட்டத்தில்தான் பார்க்கிறேன். பாஷையின் ஆதாரம் Communication. எண்ணமாக இருக்கும் விஷயம், எதிராளியின் மனதில் போய்க் கவ்வவேண்டும். அதுதானே! 'கண்ணோடு கண்ணோக்கின் வாய்ச் சொல் எப்பயனுமில' என்கிற அந்த கடாக்ஷத்தை Communication இன் உன்னதக் கட்டத்தை நோக்கிச் சொற்கள் செல்லவேண்டும் என்கிற அந்த நிலையையும் உள் அடக்கித்தான் என் சொற்களைப் பார்க்கிறேன். இதுவும் கவனத்தில் இருத்தல் வேண்டும்.

சொற்களை அவைகளின் நன்னூல் இலக்கணம் பிறழாத படி அவைகளின் 'க்' அன்னா 'ச்' அன்னா 'ர' வன்னா பிசகாமல் அகராதியில் அவைகளின் தனித்தனிக் கொள்ளை அர்த்த ஜாபிதாவுடன் பார்க்கையில் எனக்கு அவை 'சப்' பென்று இருக்கின்றன. ஒரு dictionaryயில் அதாவது Thesaurus இலிருந்தோ சந்தர்ப்பத்துக்கேற்ற சொல்லையோ வாக்கியத்தையோ எடுத்துக் கோர்த்துக்கொள்வது எனக்குப் பொருந்தவில்லை. ரொம்பவும் செயற்கையாக இருக்கிறது. ஆனால் சந்தர்ப்பத்தில் அது அது அதனதன் இடத்தில் அமர்ந்ததும் உயிர் பெறுகையில், அப்பப்பா!

தமிழ் மட்டும் அல்ல. communicationகாக நான் பயன் படுத்தும் பாஷையில் தூயதாகவோ, கலப்படமாகவோ, இறக்குமதியாகவோ சேர்ந்த பிறமொழிச் சொற்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

குந்துமணிகள் பூமியில் பொடிக் கற்களுடன் சேர்ந்து இறைந்து கிடக்கின்றன. ஒருபக்கம் சிவப்பு, ஒருபக்கம் கறுப்பு. இரண்டையெடுத்து மண் பிள்ளையார் விழிகளில்

பதித்ததும், பிள்ளையார் பார்வையில் என்ன உயிர்! என்ன உக்கிரம்! சிவந்த விளிம்பில் கருவிழியாக குந்துமணி மாறி விடுகிறது. என்ன தத்ரூபம்! அப்போது தோன்றுகிறது. அந்தக் குந்துமணி இல்லாமல் பிள்ளையார் இல்லை ஆனால் பிள்ளையாரில்லாவிடில் குந்துமணிக்குப் பலனுமில்லை பயனுமில்லை. பொருளுக்கும் சொல்லுக்கும் உள்ள உறவு இதுபோல்தான் என்று சொல்லலாம். ஆகவே சொற்கள் வெறும் உமியாகிவிடுவதோ, கத்தியை இட்ட உறையாக மாறுவதோ, சொற்களைப் பயன்படுத்துவதை—இல்லை மாற்றிக்கொள்கிறேன். ப்ரயோகம் செய்வதைப் பொறுத்தது. உ ல்மேல் சதைபோலும், பொருள்மேல் படர்ந்து கொண்டு பொருளை அடக்கிய சொல்: பொருளில் அடக்கிய சொல், அழகு கொடுத்துக்கொண்டு, அர்த்தம் கொடுத்துக் கொண்டு, வளர்ச்சி கொடுத்துக் கொண்டிருக்கும் சொல்... ('என் சொற்கள்' என்கிறேன். சொற்கள் என் ப்ரத்யேக சொத்து இல்லை என்று அறியேனா?) அப்படியும் நான் சொல்வதில் உண்மை உண்டு. என் பரம்பரையில் தமிழ்மணம் உண்டு. என் பாட்டனார் தமிழ்ப் பண்டிதர். வரகவி. அவருக்குப் பதினாறு வயதில் பிள்ளையார் அவர் வாயில் கற்கண்டு போட்ட மாதிரி கனவு கண்டாராம். விழித்ததும் பாட ஆரம்பித்துவிட்டார். அவருடைய தங்கை, அவளே என் தாயைப் பெற்ற பாட்டி; நன்னூல், நைடதம் பாடம் பண்ணியவள். தன் பாட்டுக்கள் அமைந்திருக்கும் இலக்கணம் பற்றி அண்ணன் தங்கையிடம் கேட்டுத் தெளிந்து கொள் வாராம். என் பாட்டனாரின் உடன் பிறந்தோர் எழுவரும் கம்பராமாயணத்தை அலசு அலசு என்று அலசி, மேற் கோள்கள் அதிலிருந்த எடுத்துக்காட்டி விபரீதமான எதிர் வாதங்கள் பேசுவார்களாம்.

அவர்களுக்கும் முன்னால் என் கொள்ளுப்பாட்டி—என் பாட்டனாரின் தாயாரிடம் ஒரு மண்டலம் எங்கள் குல தெய்வம் அம்பாள் விளையாடினாளாம். எழுதப் படிக்கத்

தெரியாத கைநாட்டுப் பேர்வழியின் வாயினின்று திடீரென வேதம், வியாகர்ணம், தர்க்கம், மீமாம்ஸம், தத்துவம் புறப்பட்டனவாம். கற்றறிந்த பண்டிதர்கள் வீட்டுக்கு வந்து வியப்புறுவதுடன் விளக்கங்களைக் கேட்டு அறிந்து போவார்களாம். அறுபது வருடங்கள் அவளும் அவள் கணவரும் ஒருநாள் தவறாது கோயிலுக்குப் போய் அர்த்தஜாம தரிஸனம் கண்ட பின்னரே உண்டனர் எனும் பழக்கத்தின் விளைவு!

அவர்கள் வழியில் வந்த பிரசாதம் நான். ஆகையால் என் சொற்கள், என் சொற்களுடன் என் சொந்தத்தின் நியாயத்தைச் சொல்கிறேன். தவிர, Words in creative process எனும் தலைப்பின் அடிப்படையில் இந்தப் பீடிகை தேவைப்படுகிறது. இந்தக் கட்டுரையின் விஷயமும் இந்த ரீதியில் சற்று தனிப்பட்ட முறையில் அமைந்திருப்பின், அதற்கேற்றபடி உங்கள் நோக்கையும் Condition பண்ணுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்களேன்.

நான் எழுதத் தொடங்கிய நாளிலிருந்தே அதாவது 1937/38—எனக்கு வயது 19/20 இருக்கும்—எனக்குச் சுபாவமாகவே என்னை அறியாமலே சொற்களைத் தேடும் ஆர்வம் இருந்தது என்று இப்போது உணர்கிறேன். தேடுவது என்றால் Dictionaryஇல் அல்ல. பொதுவாக என் உட்புலன், ஓசைகளை, என்னுடைய அவ்வப்போதைய சூழ்நிலையின் ஓசைகளைப் பிறர் வாயினின்று வரும் வார்த்தைகளின் தனித்தன்மையை—ஒட்டுக் கேட்க, ஒட்டுப் பார்க்க ஆரம்பித்துவிட்டது. அதை வெட்கம்விட்டே சொல்கிறேன். Creative Processஇல் புலன் மாறாட்டம் எனக்கு ஆச்சரியமில்லை. செவி பார்க்கும். கண் கேட்கும்.

பாதங்களடியில் மணியாங்கற்களின் சரக் சரக்—

மரங்களில் இலைகளினூடே காற்றின் பெருமூச்சு—

அந்திவேளையில்,

நக்ஷத்திரங்கள் ஜரிகைக் கட்டிய இருள் படுதாவின் படபடப்பு—

கடற்கரையில், ஓடத்தினடியில், அலைமோதிப் பின் வாங்குகையில்

கரையில் விட்டுச் சென்று கண்சிமிட்டும் அற்புதமான

நீலநுரைக் கொப்புள் ஒளிமின்கள்—

சில சமயங்களில் கிராமத்தில் ஒளியினாலேயே செண்டு கட்டினாற்போல் கருவேல மரத்தின்மேல் நெருக்கமாய்ப் படர்ந்த மின்மினிப் பூச்சுக் கூட்டங்கள், கிசுகிசுவென்று ஏதோ ரஹஸ்யங்கள், சப்தங்கள்—

செம்பருத்திச் செடியடியில் சலசலப்பு—

நள்ளிரவில் தாம்புக்கயிறு சரிந்து கிணற்றுள் விழும்

வாளியின் 'தடால்'—

திடுதிடுவென்று யாரோ ஓடும் சப்தம், அல்லது

அதுபோன்ற பிரமை,

என்னைப் பொறுத்தவரை, (கேட்பது மட்டுமல்ல, புலன்கள் உணர்வது அனைத்தும் சொற்கள்தான் Communication—இன் அத்தனை விதங்கள், உருவங்கள்.)

இதுதவிர, அல்லது இதுவே காரணமாக, திடீர் திடீரென என்னில் காரணம் தெரியா ஒரு மட்டற்ற மகிழ்ச்சி; அடுத்து இனம்தெரியா துக்கம், சோகம், ஒரு ஏக்கம்.

அல்லது

உற்சாகத்தின் துளும்பல் தாங்காமல் ஒரு கத்தல் கத்தினாலென்ன? என்று தோன்றும் வெறி.........இவைகளும் சொற்களே.

சொல் எனும் வடிகால்

இப்போது தெரிகிறது— The Creative Process is Working நான் இயற்கையின் சிருஷ்டி. என் ரத்த ஓட்டம் நரம்பு பூர்வமாக, என்னுள் உயிர் சக்தி தன் வியாபகத்துக்குத் தவிக்கும் தவிப்பை உணர்கிறது. இந்த அவஸ்தையைப் பெரியவர்கள் வயதுக்கோளாறு என்று புத்திமதி சொல்லி அடக்குவார்கள், அதட்டுவார்கள். அவர்கள் குறிப்பது, கண்டிப்பது பால் உணர்வின் விழிப்பு. இதை அறவே மறுப்பதற்கும் இல்லை. இந்த விவாத ரீதியில் சொற்களுக்குப் பால்தன்மை உண்டு என்ற கருத்தை உங்கள் முன் வைக்கிறேன். words in creative process என் கையில் இந்தக் கூற்று தகும் அல்லவா?

மனோத்தத்துவ ஆராய்ச்சியின் ஆரம்பம், முடிவு எல்லாமே, நானாக அறிந்தவரை, பிற நிபுணர்கள், டாக்டர்கள் சொல்லக் கேட்டவரை—Egoவின் expression என்கிற சூத்திரத்தின் விரிவுதான். வெள்ளைக் காகிதத்தைக் கறுப்புக் காகிதமாக ஆக்குவது உள்பட முக்கியமாக அதுவாக.

லா. ச. ரா நிறைய வடமொழிச் சொற்களை உபயோகப்படுத்துகிறார் என்று என்மேல் ஒரு குற்றச்சாட்டு உண்டு. அதிலும் பாண்டித்யமான சொற்கள்—!

படு உண்மையாகச் சொல்கிறேன்—சத்யம் விடுவதற்கு அஞ்சுகிறேன்—வடமொழியென்று ஒரு பதம்கூட படித்து அறியேன். ஒரு எழுத்து எழுதினதில்லை தமிழ் எழுத்தில். தமிழ் உச்சரிப்பில் எல்லோரிடமும் சகஜமாக நடமாடும் பிரயோகங்கள்தான் என்னிடமும் உண்டு. கூட சில அஸாதாரண வார்த்தைகள் இருப்பின், பேச்சுமுறையில், புராணிகர் கதை சொல்லுகையில் அவரிடமிருந்து உதிர்ந்து மனதில் வைத்துக்கொண்ட வார்த்தைகள்—இம்மட்டுத்தான் என் வடமொழி ஞானம். அப்படியும் கதை கேட்டு 25, 30 வருடங்களுக்கு மேலாகிவிட்டன. எல்லாம் பழைய ஞாபகத்

தில் ஊறிப்போய், இடம், பொருளுக்கு ஏற்ற இடத்தில் தாமாக வந்துவிடுவதை நான் பதறி ரப்பர் போட்டு அழிப்ப தில்லை. இருந்துவிட்டுப் போகட்டுமே! அதனுடைய இடம் அது இல்லாது அங்கு அது விழவில்லை. என்னுடைய சொற் களில் என் குறிக்கோள் பாஷை Communicationதான்—மொழி அல்ல.

இந்த Communication ஜாதி, இனம், இடம் யாவருக்கும் அப்பாற்பட்டது. சிருஷ்டியின் மூலமூர்க்கத்தில் உண்டானது. ஓசை பிறந்ததும் அதனின்று பிரிந்தது வார்த்தைகள் அல்ல. சொல்தான் பிறந்தது. சொல் வேறு, வார்த்தை வேறு. சொல் என்பது நான், என் தன்மை, என் பொருள், என் தேடல், என் ஆரம்பம், என் முடிவு, அதற்கும் அப்பால் என் மறுபிறப்பு, எண்ணற்ற பிறவிகள் மூலம் என் புதுப்பிப்பு. ஆதிமகனும் ஆதிமகளும் ஒருவரையொருவர் கண்டு, ஒருவரோடொருவர் பேசமுயன்ற அந்தப் புனித நிலையில் அவர்கள் கண்ட முதல் சொல்லின் தரிசனத்தை அனுமானத்தில் கண்டு அஞ்சுகிறேன். இந்த சமயத்தில், எப்பவோ ''இலக்கியத்தில் கொச்சை'' என்கிற தலைப்பில் நான் எழுதிய கட்டுரையில், ஒரு சிறு பகுதி—சில வார்த்தை கள் அப்பட்டமாக அவைகளே அல்ல—அவைகளின் சாராம்சம் நினைவிற்கு வந்தபடி:—

''குழந்தை பூமியில் விழுகையில், தாயின் வலியில் அவள் வீறல் கொச்சை குழந்தையின் அழுகை கொச்சை.

குழந்தை பாலின் இடம் தேடிக் கண்டு சுவைக்கும் சமயம் அதனின்று வெளிப்படும் சப்தங்கள் கொச்சை.

தாய் தன் பிரிவு தாங்காமல் குழந்தையைக் கொஞ்சும் சமயம் அவளிடமிருந்தும் வெளிப்படும் குழறல்கள் கொச்சை.

ஆணும் பெண்ணும் தழுவுகையில் அவர்கள் முத்தத்தின் எச்சலில் கொழ கொழத்து வரும் சொற்கள் கொச்சை.

பூமியே பட்டை உரிவது போன்ற கணவனையோ மகளையோ பறிகொடுத்த தாயின் தொப்புள் வீறல் கொச்சை.

கோப கர்ஜ்ஜனை கொச்சை.

தரிசனப் பரவசத்தின் பாஷை கொச்சை.

கொச்சையே சொல்தான்.

சொல்லின் மூலத்தை இவ்வாறு சொல்கையில் என் மகிழ்ச்சி, புல்லரிப்பு இன்னும் புத்தம் புதியதாகத்தான் திகழ்கின்றன. ஓ...ம்.

ஆகவே, பாஷையின் முதல் அல்ல மூலமூர்க்கத்தின் சக்தியைத் தாங்கிக்கொண்டு கொச்சையாகத்தான் இருந்திருக்க முடியும். அந்தக் கொச்சையினின்று பூமியின் அந்தந்த இடத்தின் நில, சீதோஷ்ண தாவர இத்யாதி சூழ்நிலைக்கேற்ப மொழிகள் பிரிந்திருக்கும். நாளடைவில் சரித்ர ரீதியில் வந்துபோகும் நாகரீகங்களிலும் மனிதர்களின் குண வேறுபாடுகளினாலும் சுயநலம் முற்ற, முற்ற, இதயத்தினின்று வராது. நாக்கு நுனி பேச்சிலும் மொழி தேய்ந்திடினும் திரும்பவும் வளம் பெறினும் இத்தனை மாறுதல்களினிடையே சொல் தன் வேரின் சக்தியை சமயங்களில் வெளிப்படுத்துகையில் உயிர் வேறு சொல் வேறு என்று என்னால் பிரிக்க முடியவில்லையே!

சமஸ்கிருதம், தேவநாகரி, Dead Languages ஆகப் போய்விட்டன. அதாவது பழக்கம் குன்றிவிட்டன, என்பது உளப்பாடு எனினும் நான் பார்க்கும் கோணத்தில் அவைகள் மொழிகளே. இந்த இடத்தில் மொழிகளின் சொற்களைக் குறிக்கவில்லை. நான் சொல் எனும் சக்தியைக் குறிக்கிறேன். Creative process.

—எனக்குக் கொடுத்திருக்கும் தலைப்பில் இந்த வாக்கியத் தொடரிலேயே சொல் ஒரு சக்தி என்கிற உண்மை வெளிப்படவில்லையா? சொற்கள் அவைகள் வெட்கமற்றவை. எத்தனை மொழிகளிலிருந்து திருப்பிக் கொடுக்காத கடன்களாக எத்தனை வார்த்தைகள், வாக்கியப் ப்ரயோகங்கள், ஒரு மொழியினின்று இன்னொரு மொழியில் கலந்து—அம்மாடி, பாஷையைவிடப் பெரிய ஜீவநதி எது?—சப்தங்கள் மாறி, அர்த்தங்களுக்கு எத்தனை சாயைகள், சாயல்கள், சாயங்கள், அழகுகள்.

ஸ்ருஷ்டிக்கு அர்ச்சனை மலர்கள்! இந்த முறையில் மனிதப் பரம்பரையின் பண்பின் பிம்பங்களாக சொற்களை ஏன் பார்க்கக்கூடாது?

அன்றொரு நாள், வெகுவெகு நாட்களுக்கு முன்னர் 10, 15 வருடங்களுக்குக் குறைவில்லை, தெருவில் போய்க்கொண்டிருக்கையில், மாலை இருளில் யாரோ ஒரு ஸ்திரி இன்னொரு ஆளிடம் பேசும் குரல் பிரிந்து வருகிறது.

"அந்த ஆசாமியா, நீ சொல்றதை நம்பமுடியலியே. அவன் முதுகைத் தட்டினால் வயித்திலிருக்கிறதைக் கக்கிக் கொடுத்துடுவானே!" ஸ்தம்பித்துப் போனேன்! இந்த நாட்டுப்புறத்தாளிடம் இத்துணை கவிதையா?

போனவாரம் விறகு மண்டியில் அடுப்புக்கரி வாங்கப் போனேன். நாடார், "போன வாரம் கிலோ விலை ரூ. 1. 50 இன்னிக்கு 1. 60 கிஷ்ணாயில் தட்டுப்பாடு ஆனவுடனே கரி மேலும் மார்க்கட் பிரியமாயிட்டுது. பிரியமாயிருக்கிறதாம்! விலை உயர்வை எவ்வளவு நேர்த்தியாக வெளிப்படுத்துகிறார்!

அண்டை வீட்டுக்காரர் பெண்ணின் கலியாணத்துக்குப் போயிருந்தேன். மணப்பெண்ணின் தம்பி, சின்னப் பையன், பதினாலு வயதிருந்தால் அதிகம்—என்னை நன்கு விசாரித்து,

சாப்பாட்டுக்கு உட்கார வைத்து, பேச்சோடு பேச்சாக ஸர்வ ஸாதாரணமாகச் சொல்கிறான், ""மாமா, வந்தவாளை உபசாரம் பண்ணி. திருப்திப்படுத்தி, இந்த சமயத்தைப் பரிமளிக்கச் செய்வதைவிட எங்களுக்கு என்ன வேலை?

சமயத்தைப் பரிமளிக்க சொல் இவ்வளவு ஓசையின்பத்துடனும், மணத்துடனும், சொல்லிக் கொடுத்த வார்த்தையாக இல்லாமல், Spontaneous ஆக இந்த வாண்டிடமிருந்து எப்படி வெளிப்படுகிறது. முற்றின வயதுக்காரன் எனக்கு இப்படிப் பேச வருமா? குழந்தை அம்மாவைக் கேட்கிறது ""அம்மா, இந்த மூக்கை (முறுக்கை) நேக்கு தேந்து (திறந்து) தாம்மா!'' திறந்து—அது கேட்பது பிட்டுத்தா.

இவைகள் என் எழுத்துப் பிரயாசையில் நான் உற்பத்தி பண்ணின வார்த்தைகளல்ல. தற்செயலில் செவியில் பட்டு, நினைவில் தைத்து, தைத்த இடத்தில் தங்கி வளர்ந்து கொண்டு விண்விண் என என் உயிரைத் தெறித்துக் கொண்டிருக்கும் ஜீவ முத்துக்கள்.

வாழ்க்கையை அனுபவிக்கத் தெரிந்தவனுக்கு, எழுத்தைப் பயில்பவனுக்கு, கேட்கச் செவியையும், காணக் கண்களையும் பழக்கிக்கொள்ளுதல்— வெறுமெனப் பழக்கிக் கொள்ளுதல் அல்ல—discipline செய்துகொள்ளல் முதல் அவசியம் அப்பொழுதுதான் இதுபோல் மொழி முத்துக்கள் கிடைக்கும். கிடைத்துக்கொண்டேயிருக்கும். முதல் இன்பம் கண்டவனுக்கு, அடுத்து, எழுத்து என்னும் Communication யான் பெற்ற இன்பம் வையகத்துக்கு, வையகத்திலும், அடையாளம் கண்டுபிடித்துக் கொள்பவர்களுக்குத்தான் என்று சொல்லத் தேவையில்லை. சொற்களும் ஆத்ம பந்துக்களும் ஒன்றில் ஒன்று நிறைவு காண்கின்றன.

வாய்ச் சொல்லாகக் கேட்டுப் பிறகுதான் வார்த்தைகளை எழுத்தில் வடித்தாகிறது. வாய்ச்சொல்லுக்கும் முன்னைய உள்ளத்தின் எழுச்சி உக்கிரத்தை, மழுப்பாமல்

அதை எழுத்திலும் காப்பாற்றுவது எப்படி? பாஷையில் ஓரளவு அக்கறை உள்ள எந்த எழுத்தாளனுக்கும் இதுவே அவன் தன்னைக் கேட்டுக்கொள்ளும் கேள்வியாக இருத்தல் வேண்டும். கேள்வியாகவே இருத்தல் வேண்டும்.

எழுத்துப் பத்திரிக்கையில் எப்பவோ நான், "நான்" என்று ஒரு கட்டுரை எழுதினேன். எழுத்தின்மேல் எனக்கு இருக்கும் ஆர்வத்தைச் சொல்கையில் ஒரு சொற்றொடர் "நெருப்பு என்றால் வாய் வெந்துபோக வேண்டும்" அதை கேலியாகவோ பாராட்டாகவோ இன்னமும் நேயர்கள் அவ்வப்பொழுது ஏற்படும் புது—வாசகர்கள் எனக்கு நினைவு படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தங்களுக்கும் சொல்லிக் கொள்கிறார்கள்.

சொற்களை அவைகளின் Creative Process உடன் இணைத்துப் பார்க்கத் தேவைப்படுவதால் மேற்கண்டதை நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

—இதில் எதை அடக்குவேன். எதை விடுவேன். Creative Process எனும் பெயரெச்சத்தின் வேர்ச்சொல் Creation—அல்லவா? ஸர்வ கபளீகரி அது, பிறப்பு, வாழ்வு, தாழ்வு, ஓங்கல், மங்கல், பொலிவு, நலிவு, ஓய்வு, மாய்வு—எல்லாமே Creative Processதான். பெரிது பெரிது புவனம் பெரிது அதனினும் பெரிது சிந்தனை. ஏனெனில் சிந்தனையில் புவனத்தையே சிருஷ்டிக்கிறேன். ஆம் காலையில் கண் திறக்கிறேன். சிந்தனையின் ஓவியம் இதோ என் பூமி. இரவு கண் மூடுகிறேன். அப்பவே மாய்ந்தேனோ என்னவோ? என் புவனமும் அழிந்தது. அன்றன்று ஒன்றொன்று அவனவன் பூமி; இதைத் தான்ன இலக்கியம் பின்னியாகிறது? Cycle of evolution ஏ Creative Process இன் மறுபெயர்தான். ராமன் கிருஷ்ணன், ரிஷிகள், புத்தர், சங்கரர், நபிகள் நாயகம். சாக்ரடிஸ், Confucius இன்னும் இதர Supermen

எல்லோரும் இந்த Creativs processஇல் தோன்றி, இயங்கி அவரவர், அவரவர் சொல்லைச் சொல்லி, சொல்லி யானதும் அதிலேயே மறைந்தவர்கள்தான். சிந்தனைக் கென்றே ஒரு தட்சிணாமூர்த்தியைப் படைத்தேன். அவனே சிவன்; அவனே தவன்; இன்னமும் உயிரின் மர்மம் என்ன? எங்கே போகிறோம்? என்னுடைய பொருள் என்ன? எனும் சிந்தனையில் ஆழ்ந்து கிடக்கிறான். சிந்தனையே Creative Process எழுத்தில் முடக்கிய சிந்தனை இலக்கியம். எழுத்தறி வித்தவன் இறைவனாகும். சிந்தனையை எழுத்தில் சொல் லாகப் பார்க்கிறேன்.

மானுடத்தின் மாண்பைச் சொல்லிக்கொண்டு, அதை மரபுக்குச் சாஸனமாக்கி மரபுக்கு மறக்கும் இயல்பு ஏற்படும் போதெல்லாம் நினைவு மூட்டுவது, நினைவு மூட்டுவதற்குத் தான் இலக்கியம், இந்த லக்ஷியத்தில் இந்த ஆணவத்தில், இந்த அர்ப்பணத்தில் அந்த இலக்கியத்தை உருவாக்கும் சொற்கள் என்ன வலுவுள்ளதாக அமைந்திருத்தல் வேண்டும்!

இங்கே ஒரு இடைமறிப்பு—

கட்டுரையில் இப்போது உபன்யாச வாடை அடிக்கிறது என்று தோன்றுபவர்களுக்கு நான் சொல்லக்கூடியது இதுதான்:—

வாழ்க்கையின் பந்தாட்டத்தில் என் நம்பிக்கைகள் ஏதேதோ கலைந்து குலைந்து, மறுத்து மறைந்து அதற்கேற்றவாறு என் சிந்தனையும் எங்கெங்கோ ஓடி ஆடித் திரிந்து கடைசியில் தெளிந்தது. நமக்குகந்தது, நமக்குரியது, நாம் வந்த மரபில் நான் வந்த வழி எனும் உண்மைக்குத் திரும்புவதே.

நம்நாடு ஆத்மீக நாடு. அயோத்தியினின்று லங்கைவரை ராமன். அவனையொட்டிப் பல சீலர்கள் திரிந்து அவர்கள் பாதம் பதிந்த மண்ணில் பிறந்தவர் நாம்.

எது நியாயம் என்று தெரிவதற்கே குருக்ஷேத்திர யுத்தம் நிகழ்ந்த பூமி இது.

அந்த யுத்த களத்திலேயேதான் கீதை பிறந்தது.

என்னுடைய இந்த வயசில் ஊசிக்காதின் வழி மறு வாசற்படி தாண்டக் காத்திருக்கும் இந்தக் கட்டத்தில்—கடைசி மூச்சின் இழைக்கு ஊசிக்காதுகூட சொர்க்கவாசல் தான்—இந்தக் கட்டத்தில் இலக்கியத்தைப் பற்றி, நான் மேல் சொன்னவாறுதான் சிந்திக்கத் தோன்றுகிறது. இன்னும் பத்துவருடங்களுக்கு முன்னால் இந்தக்கட்டுரையை நான் எழுதும்படி நேர்ந்திருப்பின் அதன் முகமே வேறு மாதிரியாக இருந்திருக்குமோ என்னவோ? ஆனால் அதற்கும் பதில் இருக்கிறது. Creative process—அப்போதைய என்னுடைய அந்தக் கட்டம் அப்படி நேர்ந்திருக்கும்.

இது சமயத்தில் ஒன்று சொல்வது சொல்லிவிடுதல் பொருத்தம். என் குடும்பத்தின் பின்னணிப்படி, வாழ்க்கையில் என் பங்குக்கு எனக்கு நேர்ந்த நல்லது, பொல்லாது, சோதனைகளின்படி, அவைகளும், அவைகள் மூலம் என்னுடைய இலக்கிய அனுபவங்கள் என்னை உருவாக்கியபடி நான் ஒரு ஐதீகவாதி. என் எழுத்தும் என்னைப் போலத்தான் ஐதீகம் என்றால் என்ன? உடனே பஞ்சக்கச்சமும் குடுமியும் தான் மனதில் தோன்ற வேண்டுமா? அப்படி இருந்தாலும் தான் என்ன? எழுத்துமட்டில் யான் அறிந்த ஐதீகம் வழிவழியாக வந்து அந்த அந்த காலத்தின் தீயிலோ கங்கையிலோ குளித்து உரமேறி பிறர்க்கும் தனக்கும் தன்னை நிருபித்துக் கொண்டிருக்கும் சொல்.

இது நான் படித்து உங்களுக்கு வழங்கும் சொல் அல்ல. என்னுடைய Creative processஇல் நான் கண்ட சொல். ஆனால் இன்னும் அறிந்த சொல் அல்ல.

மேலே:—

Creative process பற்றிச் சொல்கையில் உடனே அதில் Inspiration (உள்ளெழுச்சி) உடைய இடம் என்ன என்பதைச் சொல்லத் தோன்றுகிறது. என்னுடைய கதைகளில் பெரும் பாலும் ஏதோ ஒரு Inspiration Direct or Indirect-இல் அவைகளின் கருவூலம் ஊன்றியவை. உங்கள் எதிரே வைக்கும்படி இந்தக் கட்டுரையை எனக்கு எழுதிக் கொடுத்த என் பிள்ளை உடனே சொன்னான். Inspiration என்பது உங்கள் சொந்த அனுபவம். கட்டுரையின் தலைப்பு Words in Creative Process அதாவது உங்களுடைய Inspiration கட்டத்தைதாண்டி, உங்கள் விஷயம்: அது சிறுகதையோ, நாவலோ—காகிதத்துக்கு இறங்கும் கட்டத்துக்குத் தயாரான பின், அதன் எழுத்தாக்கத்தில் சொற்களைப் பற்றி நீங்கள் சொல்ல வேண்டும். இல்லையேல் தடம் மாறி கட்டுரையின் திக்கே மாறிவிடும் என்று என்னை உஷார்ப் படுத்தினான்.

சேகருடைய எச்சரிக்கை சமயத்துக்குக் கிடைத்த புத்திமதி என்பதை மறுக்கமுடியாது எனினும் Inspiration இல்லாமல், எழுத்து, சொல்லாக்கம் இருக்கவே முடியாது என்பது என் திடமான கருத்து. அதனுடைய பங்கு அங்கங்கு வேறுபடலாம். அவ்வளவே தவிர creative work இல் அதனுடைய இடம் இன்றியமையாதது. எந்த எழுத் தாளனும் ஒரு சமயமேனும் அதன் தோள் தொடலை, அது தரும் Thrillஐ உணராமல் இருக்கமாட்டான். அதன் லாகிரியைத் தேடித் தொடர்ந்து அவனை எழுதவைப்பதோ, ஊக்குவிப்பதோ Inspiration தான். அது எந்த சமயத்தில் எப்படி நேருகிறது, எத்தன்மைத்து என்று சொல்ல முடியாது.

ஒரு உதாரணம்: 38/39 வருடங்களாகியிருக்கும் என் தங்கை மகள், குழந்தை, 4,5 வயது ஒருநாள் மாலை பள்ளி யிலிருந்து திரும்பி வந்ததும் மாமா, பள்ளிக்கூடத்தில்,

மாமரம், கிளி மாம்பழத்தைக் கொத்தி, கொட்டை என் தலைமேல் விழுந்தது, அசிங்கம்" என்று உடம்பைச் சிலிர்த்துக்கொண்டாள். அவள் துணுக்கு மழலை வார்த்தைகளில் விவரித்த அந்தத் துணுக்குச் சம்பவத்தினின்று "மஹாபலி" என்ற ஒரு கதை தோன்றி உருவாயிற்று. இத்தனை வருடங்களுக்குப் பின்னர், ஒரு வாரப் பத்திரிக்கையில் ஸ்ரீ இரா. தண்டாயுதம் அந்தக் கதையினின்று பெரும் பகுதிகள் தந்து அதுபற்றி எழுதியிருப்பதை சமீபத்தில் படிக்க நேர்ந்தமையால் அதுபற்றி இங்கு சொல்லத் துணிந்தேன். இத்தனை வருடங்கள் கழித்து—என் கதை தான். அவர் தந்திருக்கும் பகுதிகளைப் படிக்கையில் எனக்கு பாதிப்பு இப்பவும் ஏற்படுகின்றது—என் மருமகள் தலைமீது விழுந்த மாங்கொட்டை எனக்குத் தந்த கதையின் சுருக்கம்—

சாலையோரம் ஒரு மாமரம். மாமரத்தடியில் ஒருவன் இறந்து கிடக்கிறான். அவன் இறந்த மர்மம் என்ன? அந்த மாமரம் அறியும். மாமரம் அதில் காய்ந்து கனிந்து அந்தந்த பருவத்துடன் கழிந்த பல தலைமுறைகளின்பாட்டி.

அப்படி அந்த மரத்தில், ஒருசமயம், பூ வைத்து, பிஞ்சாகி, காயாகிய ஒரு புது உயிரை அதன் சோதரர் எனும் இலைகள் பட்சிப் பார்வை, சிறுவர்களின் கல்லடி, பெரியவர்களின் கொம்படியிலிருந்து மறைத்துக் காத்து, படிப்படியாக வளர்ந்த ஒரு பழத்தின் பருவங்கள் விஸ்தரிக்கப் படுகின்றன. மாங்கனியாள் பருவமடைகிறாள். அடுத்து அவள் பருவ வேதனை. மாமரத்தில் வேர்களினின்று பழத்துக்கு சேதி பறக்கிறது. மகளே! உனக்கு வரும் மணாளனே உனக்கு யமன் அவனுக்காக காத்திருக்கையில் உன் மரணத்துக்குக் காத்திருக்கிறாய், உன் நிலைக்கு ஆறுதலோ அதினின்று காப்பாற்ற வழியோ என்னிடம் இல்லை." மாங்கனியாள் அப்படியே தன் விதிப்பயனுக்காகக் காத்துத் தவமிருக்கிறாள்.

மாங்கனியாளுக்கு வேளை வந்துவிட்டது. ஒருநாள் அதன் பார்வைக்கு, ஆகாயத்தினின்று புறப்பட்டதோர் புள்ளி கீழே நெருங்க நெருங்கப் பெரிதாகி, பஞ்சவர்ணக் கிளியாக மாறி, கிளி, பழமிருக்கும் கிளையிலேயே அமர்ந்ததும். பழம் பட்சியின் கண்ணுக்குப் பட்டுவிடுகிறது. அவ்வளவுதான். கிளி மாம்பழத்தைப் பறித்து, தன் கால்களுக்கிடையில் தள்ளி இடுக்கி, தன் மார்பின் மெத்'தில் கனியை முதலில் அழுத்தியதும், கனியின் அந்த ஆலிங்கன மூர்ச்சையில் கிளி, அதைக் கொத்திக் கிழித்துத் தின்கையிலே அந்த மரணாவஸ்தையில், உயிர் ஊசலாடுகையிலேயே மாங்கனியாள் அறிகிறாள். அவள் பயனேதான் அவள் பிறவியின் பலன். அந்தப் பலனேதான் அவள் முடிவு. அந்த முடிவேதான் அவள் நிறைவு.

மாங்கொட்டை கீழே விழுகிறது. கிளி பறந்துவிடுகிறது. அவ்வழி வந்த ஆள், அதை மிதித்து வழுக்கி விழுந்து இசைகேடாய் மண்டையில் அடிப்பட்டதாலோ, ஏற்கனவே இதய பலவீனம் காரணமோ இறந்துவிடுகிறான். இது சமுதாயத்தின் முடிவு.

ஆனால் உண்மையான காரணம், அவன் ஒரு மஹாபலியை மிதித்துவிட்டான்—அந்தப் பாபம் அவனைக் கொன்றுவிட்டது. இயற்கை சக்திகளின் தீர்ப்பின் நிறைவேற்றம்—Inspiration பற்றி இதில் இச்சமயம் இம்மட்டில் போதும்.

Inspiration எப்படி நேர்கிறது. என்று தெரியாது என்று சொன்னேன். இந்த Creative process மட்டும், அது நிகழ்ந்து கொண்டேயிருக்கையில், அதன் கதி, முறை இப்படித்தான் என்று திட்டவட்டமாகச் சொல்லமுடிகிறதா என்ன? கண்டிப்பாக இல்லை என்றுதான் சொல்வேன். அதுபற்றி அலசுவ

தெல்லாம் பின்னோக்கில்தான். சேஷ ஹோமம் ஆனபிறகு, கல்யாணச் செலவைக் கணக்கு பார்க்க உட்காருகிற சமாச்சாரம்தான். வீட்டைக் கட்டினபிறகு சுவரில் செற்களை எண்ணுகிற சமாசாரம்தான்.

விஷயமும், மீடியமும், திடீர் என்று கடிவாளத்தை அறுத்துக்கொண்டு இஷ்டத்துக்கு ஓடாமல் அடக்குமுறையில் இருக்கிறபடி எழுத்தாளன், தன் சிந்தனை ஓட்டத்தையும் சொல்லும் முறையையும் பழக்க வேண்டும். சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்பதில் எழுதும் எழுத்தும் அடங்கியது. இதற்கு உதவுவது படைப்பாளிக்கு இயல்பாக உள்ள Character, சொல் நேர்மை, திடசித்தம், இத்யாதி, இத்யாதி.

இதென்ன இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குகிறான் இந்த மனுஷன்? கிட்ட கிட்ட வந்து சொந்த விஷயத்தில் தலையிடுகிறான்? Characterக்கும் எழுத்துக்கும் என்ன சம்பந்தம்? என வெகுண்டெழும் நேயர்களுக்கு நான் சொல்லக்கூடியது ஒன்றுதான். இதுவரை நான் சொல்லி வந்திருக்கும் Contextஇல் சொல் என்பது ஒரு தவம். தவத்தில் இறங்குவதற்குரிய தகுதிகளைச் சொல்லாமல் என்னால் இருக்க முடியாது. இந்தத் தகுதிகளும் நான் உளறவில்லை, Creative processல் சேர்ந்தவைதான். படைப்பாளி தன் எழுத்தை உருவாக்கிக் கொண்டிருக்கையிலேயே அவனே இந்தக் Creative processஇல் Evolve ஆகிக்கொண்டிருக்கிறான் என்பதையும் நினைவு மூட்டுகிறேன்.

விக்கிரமாதித்தன் சிம்மாசனத்தின் ஒரு சில படிகளில் ஏறியபின் எழுத்தாளனுக்கும் சொற்களுக்கும் இடையே தோன்றி படிப்படியாக விருத்தியாகும் உறவு விசித்திரமானது, உயிருள்ளது. இதை என் அனுபவத்தினின்று இன்ப வேதனையினின்று திடமாகக் கூறுகிறேன். நினைவின் அடி

வாரத்தினின்று உணர்ச்சிப் பிழம்பாகி, பிழம்பு எண்ணம் (Idea) ஆகி, பிறகு அதன் முதல் வார்படத்தில் முரட்டுத்தன மாக, அதாவது அதன் Theme இன் சட்டத்துள் மாட்டிக் கொண்டபின் சிந்தனையில் ஊறி, கர்ப்பவாஸம் கண்டு, இருந்து, சூடேறி, எழுத்து வடிவுக்குத் தயாராகி—இந்த Creative process இல் ஆக்கப்பொழுது ரிஷிகர்ப்பமாகவும் இருக்கலாம். கஜகர்ப்பமாகவும் இருக்கலாம், விஷயம் காயிதத்துக்கு ஏறாமலேகூட இருக்கலாம். கடைசியாகச் சொல்லப்பட்ட காயிதக் கட்டம் அவ்வளவு முக்கியமல்ல. நடந்தால் நடக்கட்டும். நேராவிடில் போகட்டும். ஆனால் அந்தக் குறிப்பிட்ட படைப்பு நேர்ந்தாகிவிட்டது.

பஞ்சபூதக் கதைகள் என்கிற வரிசையில்,—புனல் அனல், மண் வாயு—இந்த இயல்புகளை மனிதன் உருவாக்கி அவை களை நடுநாயகமாகக் கொண்டு, கதைகள் உருவாகி இரண்டு வருடங்களில் வெளியாயின. ஆகாசத்தை அடிப்படையாகக் கொண்ட கதை, தலைப்பு 'ஏகாவித்து கண்டு சூளையி லிருந்து முழுமை பெற்று அச்சிலே ஏறும்பொழுது பத்து வருடங்கள் கடந்துவிட்டன.

இந்த வரிசைதானே முடிவு பெறும் எனும் திண்ணம் என் உள் உணர்வு அறிந்திருந்த போதிலும் எப்பொழுது என்பது என் வசத்திலில்லை. நிற்க.

படைப்பு சொல் ஆகிக்கொண்டேயிருக்கையில் எழுதப் படும் விஷய பலத்துக்கு ஏற்றவாறு, அதில் படைப்பாளியின் ஈடுபாட்டைப் பொறுத்தவாறு, ஏதோ ஒரு கட்டத்தில் சிந்தனை அருவி, கதை சொல்லும் முறையைத்தான் எடுத்துக்கொண்டு (take over) விடுகிறது. இதனால் எழுத்தாளன் மீடியத்தின் அடக்குமுறையை இழந்துவிட் டான் என்று அர்த்தமல்ல. ஓடத்தை கரை நோக்கி, சுழல் கொண்டுபோய்க் கொண்டிருக்கிறது என்பதை உணரமுடி

யும். மிகவும் சுவாரஸ்யமான நிலை. அந்த இடத்தில்தான் திசை மாறாமலோ, வேறு அலைகளிலோ, சுறாமீனிலோ மாட்டிக்கொள்ளாமல் ஓடத்தின் திக்கின்மேல் உஷாரா யிருக்க வேண்டிய பொறுப்பு தவிர, மற்ற கவலைகள் குறை யும். ஸ்வாரஸ்யமான நிலை.

சொற்களும் விட்டிற்பூச்சி போன்றவை. சிந்தனை அருவியில் மாட்டிக்கொண்ட பின் அவைகளுக்கு, மூலப் பொருளின் ஈர்ப்பிலிருந்து தப்பவும் வழியில்லை. உடனே மாட்டிக்கொள்ளவும் மனமில்லை. தவிக்கின்றன. கன்னா பின்னாவென்று பெருகுகின்றன. அணிஅணியாக வகுக் கின்றன எங்களில் பொருத்தமானதை எடுத்துக்கொள் என்று சவால் விடுவதுபோல் இது Creative processஇல் ஒரு வெகு சங்கடமான நிலை.

(சில சமயங்களில் பவழ மாலையில் ஒரு Outsize பிதுங்கு வதுபோலும், தேவர்கள் பந்தியில் ராகு, கேது திருட்டுத் தனமாக உட்கார்ந்தது போலும். ஏதேனும் ஒரு சொல் (இந்த இடத்தில் சொல் எனும் பிரயோகம், ஒரு வார்த் தையையோ சொற்றொடரையோ வாக்கியத்தையோ குறிக்கும்) தனக்கென்று தனி உருவம் எடுத்து விளையாட்டு காட்டும்) அதன் தனி உருவில் அதற்குள்ள மேனகைத் தனத்தில் மயங்கிவிடாமல் தன் தவத்தை இழக்காமல் குறி யில் முறுக்கேறிக் கொண்டேயிருக்கும் கவனமுனைப்பு தவறாமல் இது மாயா சீதையா, வேதவதியா, இந்தப் படைப்பில் இந்த சொல்லுக்கு என்ன இடம்? உண்டா இல்லையா என்று தெரிய வேண்டும். Creative processஇல் தோன்றிய இந்த வேறான சொல்லுக்கு உருவாகிக்கொண் டிருக்கும் படைப்பில் உண்மையில் இடமில்லையேல் மாயா சீதையை வெட்டி வீழ்த்தல் வேண்டும். கலைஞனின் கலை உணர்வு இரக்கமற்றதாக இருத்தல் வேண்டும். (Artistry

should be ruthless) சத்தியத்தின் எடை இரக்கமற்றது. சொல்லின் வழி சத்தியத்தை நோக்கிச் செல்கிறேன் என்கிற நினைப்பு இருத்தல் வேண்டும்.

சத்யம் சிவம் சுந்தரம் மூன்று கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று இணைந்தவை. சத்யம்=காலவரையின்றி இந்தப் புவனம் அதன் தோற்றத்தினின்று இன்று வரை, இனிமேலும் அந்தரத்தில் அதன் இடமும் இயக்கத்தின் சீர்பாடும் பிசகாத தத்துவம் அரூபமான கொள்கை. சத்யத்தின் defination அடங்கவில்லை. இது என் மேதாவிலாசத்தைக் காட்டிக் கொள்ளவுமல்ல. இந்த சமயத்துக்கும் உளப்பாடுக்கும் ஒவ்வியதாக, என்னுடைய அர்ச்சனைச் சொல் என்று கொள்ளும்படி மிகப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

சிவம்=அன்பு

சுந்தரம்=அழகு

எழுத்தின் Creative process-ல் இந்த வார்த்தைகளை சிவம், சுந்தரம், சத்யம் என்கிற வரிசையில் அடுக்குவேன்.

சிவம்:—எழுத்தின் Context இல் சமயத்தின், உள்ள நெகிழ்ச்சி—அதன் வேகம் பின்பு அறிவின் வேகமானியில் வேறுபடலாம்—உள்ள நெகிழ்ச்சி சிறிதேனும் இலாது ஒரு படைப்புக் கருவூலம் காணமுடியாது என்பது என் துணிபு. இந்த உள்ள நெகிழ்ச்சியை சிவம் என்று கொள்ளலாமா?

சுந்தரம்:—அந்தப் படைப்பின் வெளியீடு, வெளியீட்டு முறை, சொற்கள் உத்திகள் இவைகளுக்கெல்லாம் அடிப்படையான ஊக்கம், சிரத்தை இவையெல்லாம் அடங்கும்.

சத்யம்:—இந்தப் படைப்பு ஒருவாறு தன் முடிவு கண்ட பின், எழுத்தாளனோ, வாசகனோ அவனவன் வாழ்க்கைப் பிரயாணத்தில் குறிப்பிட்ட எழுத்தின்மூலம், தான்

அடைந்திருக்கும் இடத்தை தன் உள்ளிலும் புறத்திலும் சுற்றுமுற்றும் பார்த்துத் தெரிந்துகொள்வதை சத்யம் என்று சொல்லிக்கொள்ளலாம். வந்து சேர்ந்திருக்கும் இடத்தை அடையாளம் கண்டுபிடித்துக்கொள்ள முடிந்த தெனில் அது அவனவன் பாக்கியம். இதற்குமேல் சத்யத்தின் விசுவரூபத்தை நம்மால் சொல்ல இயலாது.

சரி, எனக்கு உள்ள நெகிழ்ச்சி நேரும் காரணம், சமயம், விளைவு இவைகளின் அடிப்படையை நான் அறியேன்.

சத்யம்: அதேபோல் என் ஆயுசையே கஜக்கோலாகக் கொண்டு நான் அளக்க முயன்றாலும் சத்யத்தின் அடி முடி காண வல்லேன்.

சௌந்தர்யம்:—இது இந்த ஆயுசிலேயே ஓரளவேனும் எட்டாத தூரத்தில் இல்லை. சிருஷ்டி மனிதனுக்கு வழங்கி யிருக்கும் பல கொடைகளில் மகத்தானது. பிரக்ஞை. இந்தப் பிரக்ஞையின் முறையான உபயோகத்தையே பரவ லான முறையில் சௌந்தர்யம் என்று சொல்வேன். இது மனிதத் தன்மைக்குப் பொதுவாகப் பொருந்தும் Defination எழுத்துக்கு இந்த Defination—பொருத்தி அதனால் எழும் விஸ்தாரத்தைக் காண்கையில், அதன் விவரிப்பில் எனக்குத் தனி உற்சாகம்.

நான் அர்ப்பணித்துக்கொண்ட எழுத்தாளன் அல்ல. அதாவது என் ஆவி, உடல் இன்பம் யாவுமே எழுத்துக்குத் தியாகம் என்கிற எண்ணம் எனக்கில்லை. ஆனால் செய்வன திருந்தச் செய் என்பதில் எனக்கு ஊக்கம், நம்பிக்கை குன்றாதனவை. நான் இந்தத் துறையில் கடினமான உழைப்பாளி என்பதை நான் நன்கு உணர்வேன். என் எழுத்தில் அழகு காண்பதில் என் ஆர்வம் இன்பம் மட்டுப்பட வில்லை. கூடியே இருக்கிறது. கூடிக்கொண்டே வருகிறது.

லா. ச. ரா ஒரு செளந்தர்ய உபாசகன், நானே தைரியமாக விட்டுச் சொல்கிறேன் உடல் அழகு அது பிறவி வினை. ஆனால் அதுமட்டும் உண்மையில் அழகு ஆகிவிடாது. என் மனம், வாக்கு, செயலில் அழகு, நேர்த்தி Elegance இந்த ஆசையின் நிரூபணை மனிதப் பிரயத்தனத்தில் எட்ட முடியாத சாதனை அல்ல. சத்யத்தின் தரிசனம் கிடைத்தால் கிடைக்கட்டும் கிடைக்காவிட்டால் இருக்கவே இருக்கிறது மறுபிறவி. Creative process—காலவரையேது? கண்ணி மைக்கும் நேரமும் பிறவியின் முழுப்பொழுதும் அதற்கு ஒன்றுதான். அதற்கு தனிப்பிரக்ஞை கிடையாது. அதில் விழுந்து அதன் கடையலில் மசியும் பண்டங்களுக்கும் பாத்திரங்களுக்கும்தான் பிரக்ஞை உண்டு. கடை! கடை! அமுதம் நேரும்வரை கடைந்துகொண்டேயிரு! அமுதம் நேர்வதெப்போ! கடையல் நிற்பதெப்போ!

சொல்லின் இறக்கையடிப்பு கன்னத்தில் உராய்ந்து கொண்டு விரைவது காத்திருப்பவனுக்குத் தெரியும். ஒரு சமயம், ஒரு கதையில் ஒரு பாத்திரத்தின் பேச்சின் நாஸூக்கிற்கு உவமை தேடிக்கொண்டிருந்து. அந்த நினைப்பில், மடியில் pad உடன் ஈஸிசேரில் ஒரு கோழித் தூக்கமும் போட்டுவிட்டேன். அப்போது ஒரு கனவு—அல்லது தோற்றம். ஒரு பாழும் சுவற்றில் ஒரு கரித்துண்டு தானே எழுதிக்கொண்டு நகர்ந்தது.

''மாம்பூவைக் காம்பு ஆய்வது போல்''

—எனக்கு நான் தேடிய சொல் கிடைத்துவிட்டது. Stevanson Treasure Island கதையைப் பூராகக் கனவாகவே கண்டதாக ஒரு கதையின் கதை வழங்கி வருகிறது. ஆகையால் எனக்கு நேர்ந்தது பெரிய விஷயம், அசாதாரணம் என்று சொல்ல வரவில்லை. ஆனால் சொல்லின் ஊடலுக்கு இது ஒரு உதாரணம்.

புதுச்சொற்கள்? இத்தனை வருட சாதகத்தில் தற்செயலாக ஒன்றிரண்டு நேர்ந்திருக்கலாமோ என்னவோ? சொற்களையே சிருஷ்டிக்குமளவுக்குப் பெரிய படைப்பபாளியாக என்னை நான் கருதவில்லை. பிரயோகங்களில் அபூர்வமான பொருள் ஏற்றம் அல்லது ஒரு தனிச்சொல் தான் பதிந்திருக்கும் விதத்தில் ஒரு இடப்புதுமை—இவை நிகழ்ந்திருக்கின்றன. ஸாதகம், ஸாதகம், அலுப்புக் காணாத ஸாதகம்? சித்திரமும் கைப்பழக்கம்—ஏற்கனவே சொல்லிவிட்டேனோ.

இருக்கிற சொற்களை அவைகளின் இடமும் சமயமும் தேடித் தேர்ந்து, அங்கு அவைகளைப் பதித்தாலே போதும். அதற்கே உண்மையான செளந்தர்ய உபாசனைக்கு ஆயுசு பற்றாது. இந்த சமயத்தில் ஒன்று சொல்லுதல் அவசியம். இந்த சூரிய சாக்ஷியில் புதிது, அதாவது ஏற்கனவே இல்லாதது, இப்போது நான் உண்டாக்கினேன் என்று எதுவுமில்லை. அவன் படைத்து, அவனுடைய ரஸமி படாததை நாம் எதையும் உத்தாரணம் செய்துவிடவில்லை. அவனுடையது Creation. மனிதனுடையது உண்டாக்கல் கண்டுபிடிப்புக்கள். Invention/discovery இந்த Invention களின் அடிப்படைத் தத்துவங்களும் இயற்கைக்குச் சொந்தமானவையே. உலகம், உயிர் பிறந்ததற்கு முதற் காரணமாம் அணுத்திரள் ஒலியிலிருந்தது. ஆக்கசக்தியின் ஓயாத இயக்கம் எங்கு கொண்டு போய் விடப்போகிறதோ அதுவரை அவனுடையதே. ஆகவே சொற்களும் இந்த ரகத்தைச் சேர்ந்தவையே. ஆகையால் இதில் என் படைப்பு என்ன தனி? இடமறிந்து, சமயமறிந்து அதிர்ஷ்டமும் சேர்ந்து சொற்களின் சேர்க்கையில் நேரும் உள்ளுணர்வின் கூச்சம், நரம்புகளில் ஒரு விழிப்பு, இரத்த அணுக்களில் ஒரு மலர்ச்சி, அதன்மூலம் ஒரு திரைவிழுதல், அதனால் வெளிப்படும் சக்தி தரிசனம்—அடேயப்பா—I am Prometheus என்பதை அவ்வப்பொழுது உணர்ந்துகொண்டேயிருக்கிற பிரக்ஞை விரிவுக்கு ஈடு எது?

சொல்வேட்டை, புலி வேட்டை போன்றது.
பரஸ்பர வேட்டை,
புலிமுகம்
புதர் மறைவில்,
நிலாவில்
பூமியில் விழுந்திருக்கும் இலைக்கோல நிழலில்
தெரிந்தும் தெரியாத அநிச்சியத்தில்
ஒன்றன்மேல் ஒன்று பாயக்காத்திருக்கும் எது முன் எது பின்?
எதை எது வேட்டை?
எனும் தருண நெருக்கடியில்
வேட்டைக்கும், வேட்டையாடுபவனுக்கும்
இடையேகாணும் உறவு—இந்த உறவின் த்ரில்—

சொல்லுக்கும் எழுத்தாளனுக்கும் இடை உறவு பற்றிச் சொல்கிறேன். The hunter & the hunted நீயே நான். நானே நீ. உன்னில் நான் என்னில் நீ. இந்த ஐக்கிய பாவத்தை —இதன் அகண்ட இனங்காணாத சோகத்தை, அதேசமயத் தில் உவகையை, காதல் உணர்வை அனுபவித்தவர்தான் அடையாளம் கண்டுகொள்ள முடியும். சொல்லைத் தேடு கிறேன் என்று சொல்வதைக் காட்டிலும் தொடர்கிறேன் என்பதே பொருந்தும்.

வாய்ச்சொல்லுக்கும் எழுத்துக்கும் ஒரு வித்யாசம். எழுதிக்கொண்டே போகையில் எழுத்தாளனின் உள் ளிருக்கும் மோன சக்தி, கூடவே அவன் எழுதும் எழுத் துக்குத் துணைவருகிறது. மோனத்தின் தவத்தனிமையின் பலம் சொல்லுக்கு ஊறுகிறது. சொல்லின் யோகதண்டத் தின்மேல் சாய்ந்தபடி, மனம் தவப்படுகையில் அதோ சொல் ஜபிக்கும் விஷயத்தின் கோபுர முனைப்பு—அதோ அவ்வப் போது தெரிகிறது!

திரும்பத் திரும்பக் கதையென்றும் கவிதையென்றும் கட்டுரையென்றும் ஞானம், விஞ்ஞானம், சாஸ்திரங்கள் என்றும் அடிப்படையாகவோ, நுட்பமாகவோ நமக்குக் கிடைக்கும் இலக்கிய தரிசனங்கள் Images & Imageries ஆகத்தான். வாழ்க்கையிலேயே ஒரு வாழ்வு மற்றொன்றுக்குச் சின்னம். creative processஇல் நேரும் இந்த அமுதத் திவலைகளை, சொற்கள் சௌந்தர்யத்தின் மரபுக்குச் சேமிக்கின்றன. சொற்களே மரபின் சேமிப்பு.

நாளடைவில் எழுத்து சாதகத்தில் எனக்கு ஒன்று புலனாயிற்று—புலனானபோது புதிது: சொற்களுள், சொற்களிடையில் மறைந்திருக்கும் இசை. மேலெழுந்தவாரியாகத் தெரியும் வெறும் ஓசையின்பம் மட்டுமல்ல—இதை விளக்குவதே எனக்கு மிகவும் கடினமாயிருக்கிறது. ஆனால் சந்தோஷமாயிருக்கிறது. கட்செவியெனும் உட்செவிக்கு மட்டும் எட்டும் ஒரு இழைபாடு algebraவில் homogeneous expression என்று உண்டு. அதுபோன்றும் சொற்களினிடையே ஓசை வெளிப்படாத ஒரு இசைக்கோர்வை. அந்தர இசை—இனிமேல் வார்த்தைகளுக்குத் திணறுகிறேன்.

அண்மையில் வானொலியில் பாலமுரளி கிருஷ்ணா ஒரு மாணவிக்குப் பாட்டு சொல்லிக் கொடுப்பதாக ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. 'மாமவ பட்டாபிராம' எனும் 'மணிரங்கு' ராகக் கீர்த்தனை. ஸாஹித்யத்தில் ஏதோ ஒருஇடத்தில் ஒரு பதத்தை ஸ்வரப்படுத்திக் காட்டினார். அது ஒன்றும் புதிதல்லவாயினும் அந்த சமயத்தில் என் மனோநிலையில் வித்வானின் கன சாரீரத்தில் அந்த இடம் வெகு அற்புதமாக இருந்தது.

சொற்களும் ஸ்வரங்கள்தானே! ஸ்வரம் என்பது என்ன? ஓசையின் வெவ்வேறு உச்சங்கள். சொற்கள், அந்த ஓசை உச்சங்களின் விதவிதமான ஏற்பாடான சேர்க்கைகள்

(இந்த முறையில்) சொற்களைக் காண, அனுசரிக்க எனக்கு இந்தப் பாகுபாடு என்னை அறியாமலே ஏற்கனவே சொன்ன மாதிரி, நாளடைவில் ஊறிவிட்டது.

ஒலியின் உருவே எழுத்தாகும். சொற்களை எழுத்தில் பிடிக்கும் போது அவைகளின் ஒலிச்சக்தியுடன் பிடிக்க வேண்டாமா?

—த்வனி......

ஒரு சிருஷ்டி உருவாகிக் கொண்டிருக்கையில் இந்தச் சொல்லை இப்படி அமைக்கலாமா? வாக்கியத்தில் ஆரம்பத்தில் வைக்கலாமா? அல்லது இடையில் பதிக்கலாமா அல்லது கடையில் அதற்கு இடங்காணலாமா? அந்தந்த இடத்தில் ஓசை எப்படிப் ப்ரதிபலிக்கிறது, இதனால் பொருள் எந்த அளவுக்கு நலுங்குகிறது, அல்லது அறவே மாறுகிறது, அல்ல, மிகைப்படுகிறது. இவைகளின் எதிரொலி, எதிரொலிகள் எவ்வளவு தூரம்—

—கம்ஸனின் ஸதா ஸர்வதா கிருஷ்ணத்தியானம் போல் இதே நினைப்பு. இதே ஸ்மரிப்பு இதே பயம் என்கிற முறையில் இதே ஒரு பலமுமாகி, சொல்லுக்கு ஒரு மந்தர உச்சாடன சக்தி ஏற்படுகிறது என்பது என் அனுபவம். ஒன்றும் வேண்டாம். நினைத்ததையே நினைத்துக் கொண்டிருந்தாலேயே ஒரு உருவேற்றம். சொல்லே மந்திரமடா என்று பாரதி சும்மாவா சொன்னான்?

ஊஞ்சல் சங்கிலியின் தனித்தனி கொக்கிகள் போலும், ஒரு வாக்கியத்தின் அமைப்புக்குக் காரணமாயிருக்கும் அதன் பதங்கள் அடுத்தடுத்து ஒன்றிலொன்று புதைந்து இறுக்கம் கண்டு அதன் பொருள் முகத்திலேயே வெடிப்பது போன்ற ஒரு effect உண்டாக்க முடியும்.

'நெருப்பு என்றால் வாய் வெந்து போக வேண்டும்' வெறும் அடுக்குத் தொடர் மட்டில் நான் கூறும் சொல் ஆகாது. அது கொஞ்சநாழியின் கிச்சுக் கிச்சு. அத்தோடு சரி. சொற்களின் மூலம் அமைதி—எளிய முறையில், நேருக்கு நேர்—கழைக் கூத்தாடித்தனம் ஒன்றுமிலாது, நாணயம் மட்டும் தூக்கி நின்று, இரைச்சல் அனைத்தும் அடங்கி, சொல்லின் அதிகாரம் (அதட்டல் அல்ல) மட்டும் மிஞ்சி, எழுத்து இதை அடைய முடிந்ததெனில் இதனினும் பேறு உண்டோ?

பொருளுக்கு முடிவில்லை. ஓசைக்கு முடிவில்லை. இவைகளை மொழிபெயர்த்துக் கொண்டேயிருக்கும் சொல் லுக்கும் முடிவில்லை. வாழ்க்கையின் லக்ஷ்யமாய மோனம் கூட ஒரு சொல்தான். மகத்தான சொல்.

யாவற்றிற்கும் ஓரே சொல்.

சிவம்! சுந்தரம்! சத்யம்!

ஸரிதானய்யா. இந்த சக்கர வட்டமெல்லாம் இருக்கட்டும் படைப்பு முறைமையில் சொற்கள் எப்படி வருகின்றன? நேருக்கு நேர் பதில்!

என்று கேட்டால்,

உயிரின் மர்மம்போல்தான் சொல்லும்.

என் பதில்—

தெரியாது.

ஓம்.

[தஞ்சைப் பல்கலைக் கழகம் நடத்திய 'இலக்கியப் பட்டறை'யில் நிகழ்த்திய உரை]

# அர்ச்சனை

இன்று மாலை கோவிலுக்குப் போனேன்.

திருநெல்வேலி வந்து மூணு நாட்கள் ஆகின்றன. நாளைக்கு மதுரைக்கு டிக்கட் வாங்கியாகி விட்டது. இன்னமும் கோவிலுக்குப் போகாமல் இருந்தால்—?

சாங்கோபாங்கமாக, சட்டையைக் கழற்றிவிட்டு, மேலே அங்கவஸ்திரத்துடன் போனேன். நான் தங்கியிருக்கும் வீடு அம்மன் சன்னதித் தெருவில். ஆகவே, கோவிலுள் அம்மன் சன்னதி வாசல்வழி நுழைந்தேன். மதிலைச் சுற்றி, மாட வீதிகளில் கடைகண்ணியும் ஜனங்களும் வழிகிறார்கள். பிரம்மோத்ஸவம்.

வெளிக்கும்பலோடு ஒப்பிட, கோயில் உள்ளே கூட்டமே இல்லை.

இருபது வருடங்களுக்குப்பின் இப்பத்தான் வருகிறேன். தட்டினால் ஸ்வரங்கள் பாடும் தூண்களைத் தவிர கோவில் பற்றி மற்றவை தேய்ந்த ஞாபகங்கள்தாம். அனேகமாகப் புதிதாய்ப் பார்க்கிற மாதிரிதான்.

மற்றும் இருபது வருடங்களுக்கு முன் கோவிலுள் முதன் முறையாக நுழைந்த ஆள் வேறு. இப்போ ஆள்வேறு. என்னைத்தான் சொல்லிக்கொள்கிறேன்.

அம்பாள் சன்னதி காலி, குருக்கள் பூட்டிக்கொண்டே போய்விட்டார்.

கிராதிக் கதவு வழியே உள்ளே பார்வையைக் கவித்துக் கொள்கிறேன். கவிந்த இருளில் அகல்களின் மங்கிய சுடர்களுக்குப்பால், அவள் லேசாக விளிம்பு கட்டுகிறாள். சிக்குப் பிடித்து, சாயம் தேய்ந்த தோம்பில் பரிதாபமாக நிற்கிறாள்.

இவள் கதியே இப்படி ஆனால் சுவாமியைப் பற்றி கேட்கவே வெண்டாம். பார்த்துவிட்டேன். எல்லா சிவன் கோவில்களிலும் சிவன் நிலைமை ஒரே நிலைமைதான்.

எப்பவுமே உத்ஸவர்தான் 'மாப்பிள்ளை'. பிரம்மோத்ஸவம் வேறே.

மதுரையிலும், லிங்கத்தின் ஆவடையாரைச் சுற்றி அழ்-மு-க்கு வஸ்திரம்தான்.

ஆனால் அம்மாவுக்குப் பூஜைக்குப் பூஜை, பட்டுப் புடவை மாற்றிய வண்ணம்தான். ராஜாத்தியாச்சே! அந்த அட்டஹாஸமும் தர்பாரும், சன்னதியில் சதா கூட்டமும்!....

ஐயா, ராஜாத்தி மணந்த பிச்சைக்காரன்!

முதன் முறையாக மதுரை கோவிலுக்குச் சென்றபோது —அதே இருபது வருடங்களுக்குமுன் சன்னதியின் கிராதிக் கம்பிகளின் இருமருங்கிலும் தாங்கமுடியாத நெரிசலில், கர்ப்பக்ருஹத்தை ஒட்டிப் பக்கவாட்டில் ஒரு வாசல் சுலபமாகவும் கூட்டமே இல்லாதிருக்கிறது.

'ஐயோ ஏன் கஷ்டப்படுகிறார்கள்? இவர்களுக்குப் புத்தியில்லையா? கண்ணில்லையா?' என்று எனக்குள் சிரித்துக்கொண்டு அந்த வாசலில் நுழைய யத்தனிக்கையில் ஒரு கை தடுத்தது.

''எங்கே போகிறீர்?''

உள்ளே காட்டினேன்.

'இது கட்டண வழி. உங்களுக்கெல்லாம் ஒன்பது மணிக்குத் தரும தரிசனம். அப்போ வாரும்.'

இருபது வருடங்களுக்குமுன், எனக்கு நினைவு தெரிந்து, என் முதல் நீண்ட பிரயாணத்தில் அதுதான் முதல் ஷாக்.'

சென்னையில் காபாலி கோவில், கந்தகோட்டம்—ஆனால் க்லுப்தமாக கோவிலுக்குப் போவோரில், நான் அல்லன். அதற்கும் கொடுப்பனை வேண்டும்.

ஆமாம், இங்கே காந்திமதி அம்மன் சன்னதியில் நின்று கொண்டு, மீனாட்சி, கற்பகாம்பாள் பெருமையைப் பேசிக் கொண்டிருக்கிறேனே என்ன நியாயம்?

இவளைப் போலத்தான், ஆள் உயரத்துக்கு, எங்கள் பெருந்திரு.

எனக்கு வயது பத்து, பன்னிரண்டில் சென்னையி லிருந்து லால்குடிக்கு வர நேர்ந்த ஒரு அபூர்வ சமயத்தில், அண்ணா—அதான் அப்பா, சன்னதியில் சொன்னது இப்போ ஞாபகம் வருகிறது.

'ராம், லால்குடியில் நமக்கு வேறு சொத்து கிடையாது! இதோ இவள்தான் நம் குடும்ப சொத்து, நம் எல்லாமே இவள்தான்—'

அப்படிச் சொல்கையில் அவருக்குக் கண் துளும்பிற்று. அப்போ எனக்குப் புரியவில்லை. இப்பவும் முழுக்கப் புரியவில்லை. ஆனால் இப்போது, இங்கே எனக்குக் கண்கள் தளிக்கின்றன. பெருகி கன்னங்களில் வழிகிறது.

அம்மா!
நீ காந்திமதியோ,
மீனாட்சியோ
கற்பகமோ,

பெருந்திருவோ
உனக்கு இன்னம் எத்தனை பெயர்களோ?
நீ இங்கே இருக்கிறாயோ இல்லையோ

அன்று அண்ணாவின் கண்ணீரில் நனைந்த சொல்லில் வாழ்கிறாய், பளபளக்கிறாய்.

இப்போது என் கண்ணில் பெருகுவது அண்ணாவின் கண்ணீர். வம்சம் வழிவழியாக உன் சன்னதியில் வடித்த கண்ணீர் வீழ்ச்சியே நினைவெனும் ஜீவநதியாகப் பாய்கிறது.

போன வாரம் குருவாயூரில் இருந்தேன். கண்ணனும் கூட இருந்தான்.

இரவு 10, 11க்கு பஸ் குருவாயூரை அடைந்தபோது ராக்ஷஸப்பசி. லேசான மழை பெய்து, பூமி 'சொதச்சொத' அங்கங்கே இருட்டு.

''அதோ கேசவனைப் பார்த்தேளா?''

''கேசவனா, யார்? எனக்குத் தெரியாதே!'' திறுதிறு வென விழித்தேன், சுற்றுமுற்றும்.

''சரி விடுங்க.'' கண்ணனுக்குப் பொறுமை குறைவு. ஆனால் இப்போ அவனைக் குறை கூறுவதற்கில்லை. இரவு தங்க விடுதி பிடித்தாகணும். ராக்ஷஸப்பசி வேறே.

தூங்கினேன் என்று சொல்லமாட்டேன். முந்தின நாள். ''ஏக்தம்'' பன்னிரண்டு மணிநேரம் பஸ் பிரயாணம் என்னை அடித்துப் போட்ட மூர்ச்சையிலிருந்து மீண்ட போது கண்ணன் கோவிலுக்குப் போகத் தயாராகிவிட்டான். ஸ்னானம் பண்ணி, திருநீறைப் பட்டை பட்டையாக இட்டுக் கொண்டு பாலமுருகன் மாதிரியிருந்தான்.

''நீங்கள் பின்னால் வாங்கோ. நான் முன்னால் போறேன்.''

நான் ஏற்பாடாய்க் கிளம்பியபோது அப்படி ஒன்றும் நேரமாகிவிடவில்லை.

கிராமத்தில் பெரிய வீட்டை ஞாபகப்படுத்துகிற மாதிரி, ஓட்டுக் கூரையிட்டு, கேரளாவின் கோயில் கட்டடப் பாங்கு எனக்கு எப்பவுமே பிடிக்கும். எப்டிவும்? இதுவரை எத்தனைமுறை இந்தப் பக்கம்?

இந்தப் பக்கமும் இருபது வருடங்களுக்கு முன்னால் வந்ததுதான்.

ஆனால் நினைப்புக்குக் கடிவாளமுண்டா? சென்னையில், அம்பத்தூரில், என் அறையில், ஜன்னலோரம் சிமிட்டி மேடையில் படுத்தபடி, வெளியே, மரமாய் வளர்ந்துவிட்ட செம்பருத்திச் செடியில், எட்டா உயரத்திலிருந்து எள்ளும் பூக்களைப் பார்த்துக்கொண்டு, இருபது வருடங்களுக்குமுன் என் நீண்ட பிரயாணத்தை எத்தனை முறையானாலும் நினைவுகூட்டி மகிழ, அசைபோட, ஏங்க...நினைப்புக்குக் கடிவாளமுண்டா?

இதழ்கள் புலுபுலு விரிதல் போலும் மலரும் பொழுதில் ஆண்களும் பெண்டிரும் நீராடி கூந்தல் ஈரம் இன்னும் உலராமல் கோடாலிமுடிச்சில், வெள்ளையுடுத்து, சுறுசுறுப்பாகக் கோயிலில் வளைய வருவதைக் காண நெஞ்சை அள்ளுகிறது.

தன் சுழிப்போடு, கூட்டம் என்னை இழுத்துத் தள்ளிக் கொண்டுபோய். இசைகேடாய்ப் பக்கவாட்டில் தள்ளி என்னைத் தன்னிடமிருந்து உதறிவிட்டது. எங்கோ பிரிந்து போனேன். அதனாலேயும் பரவாயில்லை. இரவு மயக்கம் இன்னும் முழுக்கத் தெளியவில்லை. நடந்துகொண்டே தூங்கும் பருவத்திலிருக்கிறேன். என் வட்டம் முடிந்து

ஆரம்பித்த புள்ளிக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறது—நான் தூங்கவில்லை. நடந்துகொண்டே கனவு கண்டுகொண்டிருக்கிறேன். காலத்தைத் தாண்டி காலத்தின் உள் சுழியுள்...

மனம் வைத்தால், இந்தப் பெரிய வீட்டில் ஒரு திண்ணையில், தூணோடு கயிறை அணைத்து, யசோதா ஆத்தா தயிர் கடைந்துகொண்டிருப்பதைக் காணமுடியும். அவளுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவள் பரந்த முதுகில் தொங்கிக் கொண்டு போக்கிரிப் பயல், அவள் காதுமடலை (சற்று அழுத்தமாகவே) கடிக்கிறான். மயிலிறகு அவள் நெற்றிப் பொட்டில் குறுகுறு—

"ஹே கிருஷ்ணா! குருவாயூரப்பா!" சன்னதியில் கோஷம் எட்டுகிறது. நான் போதையிலிருக்கிறேன்.

ஒரு திண்ணையில் நம்பூத்ரி சந்தனமும் தீர்த்தமும் வழங்கிக்கொண்டிருக்கிறார். அவரிடம் போய்க் கை ஏந்துகிறேன்.

"டிக்கட் வாங்கியிருக்கா?"

திறுதிறு—

"டேய்! அப்பா சில சமயம் முழிக்கறதைப் பார்த்தால், நடிக்கிறார் இல்லை?"

"இல்லை. நட்சத்திரத்தை விழுங்கியிருக்கிறார்."

"அதோ அவ்விட கௌன்டர். நோக்கியோ? வாங்கி வரட்டோ. அஞ்சு ரூவா."

அங்கிருந்து, கோவிலிலிருந்து விலகுகிறேன். வெளியே, காலணிகளை விடும் (டிக்கட்டுக்குத்தான்) இடத்தை ஒட்டி அங்கே கிடந்த கல்லின்மேல் உட்காருகிறேன். இதென்ன திடீர்னு இப்படி ஒரு அசதி?

"எங்கெலாம் அப்பா உங்களைத் தேடறது, ஏன் இங்கே உட்கார்ந்திருக்கேள்?"

"'கண்ணா, எப்போடா வீட்டுக்குத் திரும்பப் போறோம்?''

என்னைக் கவலையோடு நோக்கினான். ''என்னப்பா திடீர்னு?''

எனக்கும்தான் புரியவில்லை. நாடே, ஒரு முடிவிலாத, நீண்ட கௌன்டர்—எண்ணங்கள், நம்பிக்கைகளுக்கும்கூட— ஆகிவிட்டதை நினைக்கும்போது திகைப்பாய் இருக்கிறது.

கனவு அற்ற தூக்கமோ கிடையாது.

கனவுகள் இழந்த வாழ்க்கையை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

பயமாயிருக்கிறது.

கோவிலை விட்டு வெளியே வந்தபோது வெய்யில் மஞ்சளாகிவிட்டது. தங்கியிருக்கும் வீட்டுக்கு ஏதேனும் வாங்கிப் போலாமே! ஓரமாக நடந்து சென்று வடக்கு மதிலுக்குத் திரும்பினேன். இங்கே கூட்டம் சற்று தணிவு.

மதிலோரமாக ஒருவன், ஜாதிக்காய்ப் பெட்டியைக் கவிழ்த்துப் போட்டு, அதன்மேல் வாழையிலையில் மல்லிப் பூ விற்றுக்கொண்டிருந்தான். இன்னும் தொடுத்துக்கொண்டிருந்தான். எதிரே போய் நின்றேன்.

''நூறு, ரூபாய்.''

''உன் கணக்குப் பிடிபடல்லே. பட்டணத்தில் முழத்தில் தான்...''

''ஓ, பட்டணத்திலிருந்து வாரீங்களா? அப்டின்னா இது முக்கால் முழம் தேறும். ஆனால் வயல்காடில்லே ஆளுங்க குரல் கொடுத்துக்கற மாதிரி, எட்ட எட்டக் கட்டி அங்கே முழம் பண்ணிடறாங்களே, அப்படியில்லே இது. என்ன அடர்த்தியாயிருக்குது பார்த்தீங்களா?'' சரத்தைத் தூக்கிக் காட்டினான்.

"அப்பா நான் ஊருக்குப் புதுசு. எப்படியிருந்தாலும் நீ கேக்கற விலையைத்தான் கொடுக்கப்போறேன். ஆனால் உன் விலை சூடாத்தான் படுது..." என்று இழுத்தேன்.

"என்ன செய்யறதுங்க. இப்போ பண்ணினாத்தானே உண்டு! நாளைக்குத் தேருங்க. அப்படியும் பூக்கட்டி என்ன சம்பாரிச்சுட முடியும்?"

இரண்டு முழம் வாங்கினேன். ஐந்து ரூபாய் நோட்டுக்கு மீதி சில்லரை கொடுத்தான்.

"ஏம்பா, அரைரூபாய் கூடக் கொடுத்துட்டே போல இருக்கே!"

புன்னகை புரிந்தான். "ஆமானுங்க, நீங்க ஊருக்குப் போனால், எங்களைப்பத்தி நல்லபடியா நினைக்க வேணாமா?"

இவனுக்கு என் நினைப்பிலேயே இடம்பிடிக்க வேணுமாம். தான்மட்டும் இல்லை, திருநெல்வேலிக்கும் சேர்த்து, இவனும் மேடையை ஞாபகப்படுத்துகிறான். ஏக்கம் அலை மோதிற்று.

சமாளித்துக்கொண்டு, சற்று எட்டத் தள்ளுவண்டியில் வாழைப்பழம். விலை பேசி ஒரு சீப்பு வாங்கிக்கொண்டேன். பணம் கொடுக்க, மடியில் பர்ஸுக்குத் துழாவினால்— ஆமாம், பர்ஸ்?—எங்கே?

பதறிப்போய், இடுப்பில் எட்டுத் தடவை தடவித்தடவி, வாழைப்பழ வண்டிக்கும் பூ வாங்கின இடத்துக்கும் இடையே தூரத்தைப் பத்துத் தடவை நடந்து என்னையே த்ட்டா மாலை சுற்றினால் கிடைத்துவிடுமா? ஐயைய்யோ, நாளைக்கு மதுரைக்கு டிக்கட்டும் என் முழுப்பணமும் அதிலே தான். இப்போ என் முழி நிச்சயம் திருட்டு முழி, திகில் முழி.

இருந்தாற்போல் இருந்து என் காதண்டை ஒரு குரல்.

"பர்ஸ்தானே? அதோ அங்கே ஒரு பெண் பிள்ளையும் பையனும் நிக்கறாங்களே!—சுட்டிக்காட்ட மாட்டேன்—வெற்றிலை கூடைக்காரியோடு பேரம் பேசறாங்களே! அதான் ஸார், பையன் கிஷ்ணாயில் காலனோடு நிக்கறான், அம்மா கையிலே ப்ளாஸ்டிக் கூடை தொங்குது—அவங்ககிட்ட உங்கள் பர்ஸ் இருக்குது, போய்க் கேட்டு வாங்கிக்கங்க..."

அவ்வளவுதான். நேரே போய் மதில்மேல் சாய்ந்தபடி நின்றுகொண்டு, நெருப்புக் குச்சியால் பல் குத்த ஆரம்பித்து விட்டான்.

இவன் எனக்கு ஒத்தாசைக்கு வரமாட்டான். ஆமாம், தான் ஏன் வம்பில் மாட்டிக்கொள்ள வேண்டும்? இடம் காட்டினதே பெரிசு.

என்னென்று கேட்பேன்? ஏன் அப்படிச் செய்தேன் என்றும் தெரியவில்லை. நேரே அவளிடம் போய் இரு கை களையும் சேர்த்து ஏந்தினேன்.

என்னை ஏற இறங்கப் பார்த்தாள். ஒன்றுமே பேச வில்லை. கூடையை அடைத்த முளைக்கீரைக் கட்டு அடியி லிருந்து எடுத்துக் கொடுத்தாள்.

அடுத்தது என் செய்கை அதுவும் புரியவில்லை. மடியி லிருந்து வாழையிலைக் கிழிசலில் பொட்டலத்தை எடுத்து நீட்டினேன்.

வாங்கிப் பிரித்துப் பூவை எடுத்துக் கொண்டையில் சொருகிக்கொண்டாள். அவள் கண்களில் ஃப்ளாஷ்! உடனே மறைந்தது.

இருவரும் 'விர்'ரென நடந்து ஒரு கடைச்சந்தில் மறைந்தனர்.

இத்தனையும் ஒரு டாப்ளு (Tableaux) நிழல் ஆட்டம் (Shadow play)

மோனம் புனைந்த கவிதையின் தன்மையும் வேளையும் யாரால் முன்கூட்டிச் சொல்ல முடியும்?

அம்மா!

நீ என் தாயின் மறுபிறவியோ?

முற்பிறவியில் என் மகளோ!

உன் பெயர்

காந்திமதியோ? மீனாட்சியோ? கற்பகமோ? பெருந் திருவோ? சமயத்தின் சமயாம்பிகையோ?

—கேவலம், ஒரு பர்ஸ் காட்டின கண்ணாமூச்சிக்கு இப்படி ஒரு அந்தாதியா?"

"ஐயா, இது கண்ணாமூச்சி காட்டினது பர்ஸ் இல்லை ஐயா!"

"பின்னே யார்?"

"சரி விடுங்க!"

குருவாயூரில், மறுநாளே, கண்ணன், மனம் குளிர்ந்து சமயத்தில் விளக்கினான்.

தன் பாகன் நோய்வாய்ப்பட்டு இறந்த பிரிவாற்றாமை தாளாமல், ஆகாரம் எடுக்காமல், பட்டினி கிடந்து தானும் உயிர்நீத்த கேசவன் எனும் யானைக்கு எழுப்பியிருக்கும் சிலையைப் பார்க்கச் சொன்னானாம்.

மனிதாபிமானம், ஆன்மீகம் இவ்விரு வார்த்தைகளும் அரசியல் அகராதியில் சேர்ந்து, படாத பாடுபடும் நிலையில், கேசவனின் அபிமானத்தை என்னென்று அழைக்க? மிருகாபி மானம் எனலாமா?

பூக்காரான், தன் ஊருக்கே சேர்த்து, நினைப்பின் மூலம் அமரத்வத்தை நாடுகிறான்.

பர்ஸ் கூட அவனுடைய ப்ரஸாதம்தான். மறுத்திருந் தால்?

கோயிலில் 'டிக்கட்' கேட்டாலும்.

ஆமாம், இத்தனையும் யாருக்கு அர்ச்சனை?

சென்னையில், அறை ஜன்னலுக்கு வெளியே, செடியில், எட்டா உயரத்தில் சிரக்கம்பம் செய்துகொண்டு செம் பருத்திப் பூக்கள் சிரிக்கின்றன.

அவைதான் அறியும். —குங்குமம்

# 9. சி. சு. செல்லப்பா

சுமார் மூன்றரை வருடங்களுக்கு முன் நான் மதுரையில் சில நாட்கள் தங்க நேரிட்டபோது, திடீரென்று நினைத்துக்கொண்டு வத்தலக்குண்டுக்குப் பஸ் பிடித்து ஏறி, இறங்கி செல்லப்பா அவர்களின் வீடு விசாரித்துக்கொண்டு அடைந்து, கதவைத் தட்டினதும் அவரேதான் திறந்தார். என்னைக் கேட்ட முதல் கேள்வி—''என்ன காரணம் வந்தீர்கள்?''

நீண்ட காலத்துப்பின் சந்திக்கையில், முதல் பேச்சே இதுவானால் வந்தவனை அருட்டியிருக்கும். ஏது, ஒருவேளை நான் வந்திருக்கக் கூடாதோ? ஆனால் செல்லப்பாவை எனக்கு நேற்று இன்றா பழக்கம்? இப்படிக் கேட்டாரே ஒழிய, என் கைப்பெட்டியை எப்பவோ வாங்கிக்கொண்டு விட்டாரே!

இதை எதற்குச் சொல்ல வந்தேனென்றால், எந்த விஷயத்திலும் அவருடைய அணுகுமுறையில், சக்கரவட்டமிலாத ஒரு நேரடித்தனம் (Directness) வெளிச்சம் (Openness) எளிமை (Simplicity) இவைகளுக்கு அவர் வரவேற்பு ஒரு சாம்பிள்.

அவரோடு நான் தங்கின மூன்று நாட்களுக்கும் அன்புக்குக் குறைச்சலே, இல்லை. என் தாயார் உயிரோடு இருந்தபோது என் வீட்டில் என் மனம் எப்படி ஒருவிதமான விடுதலையி லிருந்ததோ, அப்படியிருந்தேன்.

உபசரிப்பென்றால் உதட்டு உபசாரமில்லை. சிலபேர் மிகைபட ஒழுகுவார்கள். மேலே கவ்விக்கொள்வார்கள்.

"இதோ பாருங்கள் ராமாமிருதம், நான் கவனித்தேன். எப்பவுமே ரஸம் உங்களுக்குப் பிரியம்போலத் தெரிகிறது. ஏந்திக் குடிக்கிறீர்கள். அது உடம்புக்கு நல்லதல்ல. சாதத் துடன் கலந்து சாப்பிடுங்கள். ஒன்றும் பண்ணாது."

இதனால்தான் தாயார்மாதிரி என்றேன்.

நான் போயிருந்த சமயம், கண்ணுக்கு ரண சிகிச்சை ஆகி, இன்னும் மருந்திலிருந்தார். சிக்கலான சிகிச்சை என்று அறிந்தேன். மதுரையில் புகழ்பெற்ற கண் ஆஸ்பத்திரி (பேர் சமயத்துக்கு நினைவு வரவில்லை, இது ஒரு சாபம்) டாக்டர்கள், சிப்பந்திகள் தன்னைக் கவனித்துக்கொண்ட முறைபற்றி உற்சாகத்துடன் புகழ்ந்து பேசினார்

சாயங்காலம் பையன் (ஒரே மகன்) ஆபீஸிலிருந்து வந்தான். விசுப்பலகையில் படுக்கவைத்து ("சும்மா படு அப்பா! எனக்கு எப்படிப் போடணும்னு தெரியும். படு என்கிறேனே!") கண்ணில் சொட்டு மருந்தை ஊற்றினான். பையனின் உரிமையான அதட்டலும், அவர் அதற்குப் பணிந்துபோகும் பாங்கும் பார்க்க இன்பமாயிருந்தது.

செல்லப்பா வீட்டைப் படுசுத்தமாய் வைத்திருந்தார். (இதில் வீட்டுப் பெண்டிருக்கு அதிகப் பங்கு கொடுக்க எனக்குத் தோன்றவில்லை) செல்லப்பாவின் கைதான் எனக்கு தெரிந்தது, முக்கியமாகத் தோட்டத்தில்— ஏனோதானோ

இலாது எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும் முழு மனதோடு அவருடைய ஈடுபாடும், அந்த ஒழுங்கான பாத்திகளும் பூச்செடிகளும், ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தண்ணீர் பாய வெட்டியிருக்கும். கால்வாய்களும், தென்னைகளின் அடியைச் சுற்றி ஒழுங்கான அந்த வட்டக் குழிவுகளும் செல்லப்பாவின் கை மட்டுமன்று, ஆதிக்கம் பளிச்சிட்டது. அரைகுறைக் காரியம் அவரிடம் கிடையாது.

மூன்றாம் நாள் காலை நான் கிளம்பத் தயாரானதும் சொன்னார். "என்ன அவசரம் போய் வெட்டி முறிக்கப் போகிறீர்கள்? இன்று மாலை சிட்டி வருவதாக எழுதியிருக்கிறார். கலகலப்பாய்ப் பேச நமக்கு விஷயங்கள் நிறைய இருக்கும். இருந்துவிட்டுப் போங்களேன்!"

இரண்டு மூணு தரம் சொல்லிவிட்டார். அவர் சொன்னதும் உண்மைதான். ஆனால் ஏதோ சாக்குச் சொல்லிக்கொண்டு நழுவிவிட்டேன். எனக்கே காரணம் இன்னும் தெரியவில்லை. புத்திக் கிறுக்கு.

செல்லப்பாவும் நானும் முதன் முதலாகச் சந்தித்த தெப்போ? சரியாக ஞாபகமில்லை.

எனக்கு 18, 19 வயதில் என் முதல் தமிழ்க் கதையுடன் ஹனுமான் வாரப் பத்திரிகை (ஆசிரியர்—சங்கு சுப்ரமணியம்) ஆபீசுக்குப் போனேனே, அங்கே அவர் உதவி ஆசிரியராக இருந்தாரே அப்பவா? அப்போது நாங்கள் பேசினதாக நினைவில்லை. எனக்கு அங்கு தி.ஜ ர.வைத்தான் தெரியும்.

அல்லது, மரீனா கடற்கரையில் மணிக்கொடி எழுத்தாளர்கள் மாலை மாலை சந்தித்துப் பேசுவார்களே, அப்போதா?

ஒன்று தெரியும். செல்லப்பாவுக்கு என் ஆரம்ப கால எழுத்துக்களைப் பற்றி நல்ல அபிப்பிராயமில்லை. "இந்தப் பையன் நன்றாக எழுதுகிறான்" என்று தி.ஜ.ர என்னை

அறிமுகப்படுத்தியபோது, 'என்ன நல்ல எழுத்து? எதிலும் ஒரு வக்கிர பார்வை!" என்று அவருடைய உரத்த குரலில் ஒரு விளாசு விளாசினாரே பார்க்கலாம்! அப்போது அவரிடம் எனக்குக் கண்ட நடுக்கம், நாளடைவில் அன்பும் ஆழ்ந்த மரியாதையாகவும் மாறிவிட்டாலும் இப்பவும், எப்பவும் அவரிடம் எனக்குச் சற்றுப் பயம்தான். காரணம் அவருடைய நேர்மை (honesty) என்று இப்போது உணருகிறேன்.

பரமசிவன்போல் அவர் கோபத்தின் ப்ரபையுள் நின்றார் என்று எனக்குத் தோன்றிற்று. முதல் தாக்கம். ஒற்றை நாடித் தேகம். கதர் அரைக்கை சொக்காய், கதர் வேட்டி, கையில் எப்பவும் ஒரு துணிப்பை. அனேகமாக அதில் புத்தகங் களும் எழுதுகோலும் தானிருக்கும். சற்றுக் குறுகலான நீண்ட முகத்தில் குழிவான கண்களில் கோபம் பறப்பதாக என் எண்ணம். அந்த நாளைப் பற்றிப் பேசுகிறேன். செல்லப்பா மன்னிக்கணும்.

அப்போது வை. கோவிந்தன் வெளியிட்டு வந்த சக்தி மாதப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த தி.ஜ.ர என் கதை களை வெளியிட்டு வந்தார். அடுத்து, அந்தக் கூட்டத்தில் என் எழுத்து, பொதுவாகவோ குறிப்பிட்டோ அடிபடும் போதும் செல்லப்பாவின் அபிப்பிராயம் மாறவில்லை. என் கதைகளைப்பற்றி அவரிடம் நான் வாதிக்கவில்லை, அந்த அளவுக்கு எனக்குத் துணிச்சல் ஏது? என் பயம்தான் அதிகரித்துக்கொண்டு வந்தது.

பிறகு ஒரு சமயம். புதுக் கதையுடன், 'சந்திரோதயம்' (ஆசிரியர்—க.நா.சு) ஆபீசுக்குச் சென்றபோது அங்கு ஆசிரியர் குழுவில் செல்லப்பா உட்கார்ந்துகொண்டிருக் கிறார்! கதையைக் கொடுத்துவிட்டு, 'சரி என் கதை வெளி வந்தாற்போலத்தான்' என்று நினைத்துக்கொண்டே வெளியேறினேன். என் தப்பான எடைக்கும் என் சின்னத் தனத்துக்கும் அத்தாட்சி வேறே வேண்டாம்.

'அபூர்வராகம்' சந்திரோதயத்தில் வெளிவந்தது பெரிதல்ல. வந்த சுருக்கில், திருவல்லிக்கேணி பெல்ஸ் ரோடில் செல்லப்பாவைச் சந்திக்க நேர்ந்தது. அதே சாலையில் பத்து நிமிடங்களுக்கு முன்தான் ந. சிதம்பர சுப்ரமண்யத்துடன் பேசினேன்.

செல்லப்பா, கதையைப் பாராட்டினார். அவர் பாராட்டிய வாசகம் ஞாபகமில்லை. ஆனால் முடிவில் வார்த்தைகள் இன்னமும் நினைவில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

"என்ன ராமாமிருதம், வாழையிலை ஏட்டில் அல்வாத் துண்டைப் பரிமாறிவிட்டு அதில் முடி அகப்பட்டாற்போல் கதை முடிவில் உங்கள் வழக்கமான சேஷ்டையைக் காண்பித்துவிட்டீர்களே!"

'அபூர்வராகம்' எனக்கு எழுத்துத் துறையில் ஒரு திருப்பம். வாசகர்களும் சக எழுத்தாளர்களும் 'இதென்ன புதுக் குரல் கேட்கிறது?' என்று கண்ணைக் கசக்கிக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார்கள்.

அதற்குப் பின்னாலும் என் கதைகள் வெளிவந்து கொண்டிருந்தன. செல்லப்பா என்ன அபிப்பிராயம் சொல்வார் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஜனனி, யோகம், புற்று, ப்ரளயம்...ஊஹூம் செல்லப்பா வாய் திறக்கவில்லை. நானும் கேட்கவில்லை. எனக்கு மட்டும் ரோசம் இல்லையா? அவர் வரையில் என்னிடம் ஏதோ ஒரு அத்திபூத்து, உதிர்ந்துவிட்டது என்று என்னைப்பற்றி நினைத்துக்கொண்டேன். என்னில் ஏதோ விசனம் கண்டேன்.

காலம் கடந்தது.

ஒருநாள் மாலை பெரிய தெருவில் (நாங்கள் திருவல்லிக்கேணி வாசிகள்) ஏதோ குருட்டு யோசனையில் எதிரே யார், என்ன வருகிறது என்றுகூடத் தெரியாமல்—

"என்னய்யா இது, இந்தமாதிரி தெருவில் நடந்தால் ஆபத்து இல்லையா?"

அதட்டல் கேட்டு உலகுக்கு மீண்டால் என் வழியில் செல்லப்பா நின்றுகொண்டிருந்தார், கையில் அவர் பையுடன். முகத்தில் சிரிப்பு இல்லை. தெருவில் என் அஜாக்ரதைக்குக் கோபம் தானிருக்கும்.

ஒரு நிமிஷம் பொறுத்து, "சுதேசமித்ரன் வார இதழில் உங்கள் கதை—இதழ்கள் (பார்கவி) படித்தேன். ரொம்ப நன்றாக இருக்கிறது. ஒரு அப்பு அழுக்குக் கிடையாது. Perfect Endingஇல் வைத்திருக்கும் முத்தாய்ப்பு பிரமாதம்.

யார் இப்படிச் சொல்வது? செல்லப்பாவா? வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷியா? இல்லை, சிற்பம் சிரக்கம்பம் செய்கிறது.

எனக்கு வாயடைத்துப்போய்க் கண் கலங்கிவிட்டது. ஓ, செல்லப்பா எதிரில் உணர்ச்சிவசப்படுவதில் எனக்கு வெட்கம் கிடையாது, அவரைவிட நான் ஐந்து, ஆறு வயது இளையவன்தான்.

செல்லப்பா, கனிவுடன்—"என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? நல்ல பண்டம் கிடைக்காதா என்று தேடிக் கொண்டேயிருக்கிறோம். கிடைத்தால் உங்களைவிட சந்தோஷம் எங்களுக்குத்தான் அதிகம்."

இந்த நாளில் இப்படி யாரேனும் சொல்வார்களா? மணிக்கொடி எழுத்தாளர்களின் விசேஷம் அதுதான். அதிலும் செல்லப்பா.

மேலும், "உங்கள் கதையை சுதேசமித்ரன் வார இதழில் விமர்சனம் செய்யலாம் என்றிருக்கிறேன்."

ஏதேது, கொண்டைபோட்டு, மயில் ரக்கை சூட்டல் வேறா? அங்குமிங்குமாக, துணுக்காக, ஒரு வரி இரு வரியாக, தினசரி பேப்பரிலோ, வாசகர் கடிதங்களிலோ, பாராட்டு

வந்தால் அதை ஃப்ரேம் போட வழியிருக்கிறதா என்று யோசிக்கும் நான் அது. தொடர்ந்து அந்த ஒரு கதையை மூன்று வாரங்கள் விமர்சனம். என் கதையைப் படிப்பதைக் காட்டிலும் என்னைப் பற்றிப் படிக்க என்ன ருசி!

செல்லப்பாவின் அலசல் விமர்சனம் என்றால் என்னென்று நினைக்கிறீர்கள்? வரிக்கு வரி check post. தப்பான யூகத்துக்கு இடந்தரக்கூடாது என்கிற கவலையில் விவரமான விளக்கங்களில் எடுத்துக்காட்டுகளில் அவருடைய தமிழ் நடையே மாறிவிட்டது என்பது என் கருத்து.

என் கதை அமைந்திருந்த மனோதத்து ரீதியும் அதன் விளம்பகால அசைவும் (movement) அவருடைய அலசல் விமர்சனத்துக்கு ஈடுகொடுத்தன. அவருக்கும் புகுந்து விளையாட சௌகரியமாயிருந்தது என்று நினைக்கிறேன்.

அவருடைய எழுத்துப் பத்திரிகையில் 'நான்' எனும் என் சொல் சித்திரம் வந்து ப்ரகாசம் அடைந்தது. அதில் ஒரு வாக்யம், "நெருப்பு என்றால் வாய் வேக வேண்டும்" —(அதாவது சொல்லுக்கும் செயலுக்கும் இடைக்கோடு அழியும் நிலையை எழுத்தில் சாதிக்க வேண்டும் எனும் என் ஆசையைக் குறிக்கிறது) இப்பவும் பாராட்டாகவோ, ஏளனமாகவோ, வியப்பிலோ, இலக்கிய வரலாறு, விமர்சனக் கட்டுரைகள், நூல்களில் என் பெயர் வருகையில்—இந்த வாக்யம் குறிப்பிடப்படுகிறது.

செல்லப்பா பிடிவாத குணம் படைத்தவர். இதற்கு ருசு வேறெங்கும் தேட வேண்டாம். பத்துவருடங்கள் 'எழுத்துப் பத்திரிகையை நடத்தினாரே அது போதாதா? பொழுது போக்கு அம்சம் ஏதுமில்லாமல் முழுக்கவே விமர்சனத்துக் கென்றே ஆன பத்திரிகை. இதனுடைய வெற்றி நிச்சயம் வியாபார ரீதியில் இல்லை. முழுப் பொழுதை எழுத்தாக்கிக்

கொண்டவனுக்கு தினமும் சோதனையான அந்நாளில் (இப்போது மட்டும் என்ன வாழ்ந்தது?) 'செல்லப்பா, எப்படி உங்களால் சாத்தியமாகிறது' என்று கேட்க முடியுமா? அவ்வளவு துணிச்சல் எனக்கேது? 'அது என் சொந்த விஷயம். இலக்கியம் பேச வந்தீர்களா, வம்பு பேச வந்தீர்களா?' என்று கேட்டுவிட்டால்? கேட்பாரோ மாட்டாரோ, செல்லப்பாவிடம் அந்த அத்து எனக்கு எப்பவும் உண்டு. நாக்குத் துடித்ததுடன் சரி.

'எழுத்து'வின் வெற்றி வேறுவிதத்தில், விமர்சனத்தின் அந்தஸ்தை அது எடுத்துக்காட்டிற்று.

புதுக்கவிதை இயக்கத்துக்குத் தொட்டில் என்கிற முறையில் எழுத்து என்றும் பேசப்படும். செல்லப்பா லட்சியவாதி. அவருக்கு அது போதும். இல்லை, அதுகூட அவருக்கு அவசியமில்லை. தனக்குச் சரி, இல்லை, தன் மனச் சாட்சிக்குச் சரியென்று பட்ட ஒரு காரியத்தில் ஈடுபட்டோம் என்கிற திருப்தி போதும்.

பிடிவாதம், வீம்பு—அரிச்சந்திரனிலிருந்து காந்தி வரை, ராமபிரானிலிருந்து துரியோதனன்வரை பீஷ்மனிலிருந்து செல்லப்பா வரை நான் பூஜிக்கும் குணங்கள். இந்தக் குணங்களால் என்றுமே லாபம் இல்லை. நன்மைகூட இல்லை.

ஆயினும் அவை குணங்கள். அவையில்லாவிட்டால், முதுகெலும்பே இல்லை Compromise செல்லப்பாவின் அகராதியிலே கிடையாது.

விமர்சனம் என்பது—இல்லை, விமர்சனத்தைப் பற்றி நான் எண்ணுவதை, இடமும் நேரமும் கிடைத்தால் பின்னால் எழுதுகிறேன். உண்மையான விமர்சகனின் தகுதிகள் என்னென்று எனக்குத் தெரியும்.

1. புத்தி கூர்மையிலும் கத்தி கூர்மை.

2. நுனிப்பில் மேயாமை. (பத்துப் பக்கங்கள் மேலெழுந்தவாரியாகக் கண்ணோட்டம் விட்டுவிட்டு, புத்தகத்தையே விமர்சனம் செய்யும் போலித்தனம் இல்லாமை)

3. எடையிலும், தராசிலும் துல்லியம்.

4. இரக்கமற்ற நாணயம்.

5. சமயத்துக்குத் தாளம் போடாத நேர்மை.

விமர்சன லட்சணங்களைச் சொல்வதாக நினைத்து, மனித லட்சணங்களையே சொல்லிக்கொண்டு போகிறேன். இவை அத்தனைக்கும், செல்லப்பாவிடம் குறைவேயில்லை.

செல்லப்பா பெரிய மனுஷன்.

பெரியோரைப் புகழ்வோம்.

—குங்குமம்

# 10. ந. பிச்சமூர்த்தி

ஒரு சமயம், வெங்கட்ரங்கம் பிள்ளைத் தெருவில் (திருவல்லிக்கேணி) பிச்சமூர்த்தி அவர்களின் வீட்டுக்குப் போயிருந்த சமயத்தில், அவர் அப்போதுதான் ஸ்நானம் செய்துவிட்டுக் குளியலறையிலிருந்து வெளிப்பட்டுக்கொண்டிருந்தார். (என்ன மெலிந்த உடல்!) அவர் கழுத்தில் மாலையாகத் தொங்குவது கண்டு, நானும் என் பூணூலை மாலையாகப் போட்டுக்கொண்டு, வீட்டில் ஒரு வாரம் வளைய வந்தேன்.

ஆனால், நிமிஷமாக, அம்மா இதற்கு முற்று வைத்து விட்டாள். என் மனைவியிடம் சொல்லி அனுப்பினாள்: ""அவனை ஒழுங்காயிருக்கச் சொல்லு. எனக்கு என் ஈமக் கடன்களுக்கு இன்னும் வேளை வரவில்லை.""

இதை அவள் என்னிடம் நேரிடையாகச் சொல்லியிருக்கலாம். ஆனால், உடனே கீழ்ப்படிய வேண்டிய கட்டளையானால், அது யார் மூலமேனும்தான் வரும். உடனே நிறைவேறியும்விடும். அதுதான் என் அம்மா.

எனக்குப் பிச்சமூர்த்தி 'ஸ்டார்'. இந்த நாளில் சினிமா 'ஸ்டார்'கள் ஓங்கியிருந்தால், நான் குறிப்பிட்ட காலத்தில் எழுத்தாளனுக்கு 'மவுஸ்' கூடியிருந்தது. இத்தனைக்கும்

அவனுடைய ரசிகர் வட்டம் குறுகல்தான். மிக்கக் குறுகல். ஆனால் அதனுள் அவன் ஒரு 'க்ளாமரை' அனுபவித்தான். இப்பவும்தான் சினிமா நடிக நடிகையர் எத்தனை விளம்பரம் அனுபவித்தாலும், அவர்களுக்கும் எழுதிப் பிரபலமடையத் தனிஆசை. ஏனோ தெரியவில்லை.

நான் எழுத்தாளன். ஆனால் பிச்சமூர்த்தி எனக்கு 'ஸ்டார்.' பிச்சமூர்த்தியின் எழுத்துக்குத்தான் நான் முதலில் பரிச்சயமானேன். அப்போதுதான் நான், எழுத்துலகில் அடி வைத்திருந்த காலம். என் நிலை, சின்னக் குழந்தை தட்டுத் தடுமாறி, தடுக்கி விழுந்து, எழுந்து, நடை பழகு வதுபோல. அப்போது, இன்னும் புத்தக உருவில் வராது, ஒன்றை நான்காக மடித்த 'ரோஸ்' டின்ட்பேப்பரில் ஒருநாள் அவர் கதை கண்டேன். கதைத் தலைப்பு ''வெண்கலப் பானை'' கதை ஞாபகமில்லை. ஐம்பது வருஷ சமாச்சாரம் பேசுகிறேன்.

இப்பவே சொல்லிவிடுகிறேன், இங்கே நீங்கள் காண்ப தெல்லாம் அனேகமாக முப்பது நாற்பது வருஷ சமாச்சாரங்கள்தான்.

ஆனால் மல்லனுக்கு மல்லன், கைகலக்கு முன்னர், கண் ணோட்டத்திலேயே, எதிரி பலம் உணர்வதுபோல, அந்தச் சொல் அழுத்தமும், தன்னம்பிக்கையும், கதையில் ஏற்றி யிருக்கும் மன தீர்க்கமும் Concentration—அம்மாடி!— இந்த உன்னதத்துக்கெதிர் நான் எந்த மூலை? உண்மை யிலேயே ஒடுங்கிப்போனேன்.

அப்போது எழுத்துலகில் எனக்கு ஆதரவு, தைரியம், அடைக்கலம் எல்லாமே கு.ப.ரா.தான்.

''எனக்குப் பிச்சமூர்த்தி மாதிரி எழுத வருமா, ஸார்?'' என் குரலின் தீனம், இப்போது லேசான சிரிப்புடன் நினைவு வருகிறது.

தி.ஜ.ர. கனிவுடன், ““பிச்சமூர்த்தி என்ன, அவருக்கு மேலாகவே உன்னால் எழுத முடியும், மண்டைக்கனம் காணாமல் இருந்தால், அவரிடம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன.””

இது நடந்த ஒரு வாரத்துக்குள், மாலை, மெரீனா கடற்கரையில் மணிக்கொடி எழுத்தாளர்கள் கூடிப் பேசுமிடத்தில் பிச்சமூர்த்தியைச் சந்தித்தேன்—இல்லை, பார்த்தேன். பல நாள்கள் நாங்கள் பேசிக்கொள்ளவில்லை. நா எழவில்லை. பிச்சமூர்த்தி, கு.ப.ரா. புதுமைப்பித்தன், சி.சு. செல்லப்பா, தி.ஜ.ர. பி.எஸ். ராமையா, ந. சிதம்பர சுப்ரமணியன், சிட்டி முதலியோர் இருக்கும் இந்த “ஸதஸ்”ஸில் நான் யார்?—கோழிக் குஞ்சு.

““என்னவோய், பூச்சாண்டி காட்டுகிறீர்களா?”” என்று இப்போ கேட்பவர் கேட்கக்கூடும்.

நண்பனே, அப்படி அன்று.

இவர்களைப் பார். இவர்கள் வெறும் எழுத்தாளர்கள் இல்லை. இவர்கள் எழுத்தின் உபாஸகர்கள். இவர்கள் பொருளாதாரம் மிக்க நலிவானது. என்றுமே சுளுவாயிருந்ததில்லை. ஏசு, ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சீடர்கள் போன்று, இவர்கள் எழுத்தின் பைராகிகள். அது காந்தி யுகம். இவர்களுக்கு லக்ஷியங்கள் உண்டு. ‘நாளைச் சூரியனுக்கு நாம் இருக்கிறோமோ இல்லையோ, நாளைக்குச் சூரியன் உண்டு’ என்கிற திட நம்பிக்கை கொண்டவர்கள். அந்த நம்பிக்கையில், நம்பிக்கைக்காகவே வாழ்ந்தவர்கள். எழுத்தில் ஏதோ தரிசனம் கிடைத்து, அதுவே பித்தாய் அலைபவர்கள். எழுத்தில் சம்பிரதாயமான முகப்புகளுக்கு எதிர்நீச்சல் போட்டு, புது முகடுகளைத் தேடி நீந்துபவர்கள்.

இவர்களுக்குச் சமுதாயத்தின் வெகுமதி என்ன?—பட்டினி, கஷ்டம், ஓயாத நெருக்கடி. சோதனைகள். இவர்களுடைய எழுத்தாற்றலுக்கு மட்டும் இவர்களை நான் வணங்கவில்லை. இவர்களிடம் ஒரு அடிப்படையான நாணயம், மானுடத்தின் சுயகௌரவம் இருந்தது.

தீக்குள் விரலை
வைத்தால் நந்தலாலா
நின்னைத் தீண்டும் இன்பம்

தோன்றியிருப்பது இவர்கள் சிலரிடம், சில சமயங்களில் அடையாளம் தெரிந்தது. இவர்களிடையே பிச்சமூர்த்தி, தன் தாடியுடன், ரிஷிபோல் விளங்கினார்.

தி. ஜ. ர. அவரிடம் என்னைச் சற்றுமுன் தள்ளினார். "இந்தப் பையனை நீங்கள் படித்துப் பார்க்கணும்—இவனிடம் நல்ல அடையாளங்கள் தெரிகின்றன. உங்கள் எழுத்தில் ஒரேயடியாய்ச் சொக்கிப் போயிருக்கிறான்."

அவர் கன்னங்களில்—தாடி தாண்டித் தெரிந்தவரை—சந்தோஷகரமான லஜ்ஜைச் சிவப்பு ஏறிற்று. ஏற்கெனவே செவந்த மேனி. என்மேல் கண்கள்—வீக்ஷண்யம் நிறைந்து, துருவும் கண்கள், கோபமற்ற அக்னி. பெரிய மேட்டு விழிகள். நடுவகிடிலிருந்து மயிர்ச் சுருள்கள் செவியோரங்களில் கரும்பட்டுக் குஞ்சங்களென ஆடின. இந்த மனிதனின் காந்த சக்தியை உணர நேரம் தேவையில்லை.

அவர் முன்னிலையில் எனக்கு நாக்கு அவிழ நாள்கள் ஆயின. அதனால் என்ன, எனக்கு அவருடைய பாவனைகளையும் இப்போதைக்குக் கவனித்துக் கொண்டிருந்தால் போதும்.

சில சமயங்களில், இதுபோல் நேர்ந்துவிடுகிறது. காரணமேயில்லாத அபிமானம். பின்னால் அந்தக் காரணங்கள் நேரலாம். நேராமலுமிருக்கலாம். ஆனால் காரணம் இரண்டாம் பக்ஷம். சில சமயங்களில் இதுபோல் நேர்ந்து விடுகிறது.

இது சாக்கில் உரக்கச் சிந்திக்கிறேன். பக்தி ருசி, பக்தி பண்ணுபவன்தான் அறிவான். பக்தி என்பதே என்ன?

முதல் சந்திப்பின் தணியாத புதுமை.

பழகப் பழக ஊறிப் பெருகும் ப்ரேமை.

மரியாதை.

கூடவே இனம்புரியாத ஒரு பயம்.

தொடர்ந்து, பிறவியின் தனிமையின் ஏக்கம்.

இவைகளின் கலவையின் அமிர்தம்தான் பக்தி.

பிச்சமூர்த்தியிடம் ஒரு நாயகத் தன்மையிருந்தது. அந்தக் கூட்டத்தில்—கூட்டம் என்ன கூட்டம், அதிகப்படியானால் எட்டு, பத்து, குறைந்தால் அஞ்சு, ஆறு! ஆனால் அங்கு புரண்ட விஷயங்களுக்கு, அதுதான் உண்மையான இலக்கியப் பட்டறை—

அந்தக் கூட்டத்தில் அவர் என்ன பேசினாலும், அவரிடம் யாவரும் கண்ணும் செவியும் கவனமும் ஒருமித்து இருந்தனர். அவர்தான் வயதிலும், அனுபவத்திலும், ஞானத்திலும் பெரியவர் என்பதில் அங்கு யாவருக்கும் சந்தேகமேயில்லை. தன் குரல் முன்னால் கேட்கவேண்டும் எனும் ஆசைகொண்டவர் அங்கு யாருமில்லை.

பிச்சமூர்த்தியின் பேச்சில் வர்ணங்கள், கர்ணங்கள், பார் (Bar) விளையாட்டுக்கள் காணமுடியாது. எப்பவும் ஒரு

கச்சிதம், ரத்னச் சுருக்கம். பேசி நிறுத்தியதும், இன்னும் கொஞ்சம் சொல்லமாட்டாரா எனும் ஆசை தூண்டப் பட்டுத் தவிக்கும்.

''ராஜகோபாலா!''

(கு.ப.ரா.வை முழுப் பெயர் சொல்லி அவர்தான் அழைத்துப் பார்த்தேன்!)

'செல்லப்பா!'

'சிட்டி!'

'ராமையா!'

குரலில் லேசான நடுக்கம். என்ன கனிவு! அப்பவே என் ஆசை; என்னை அப்படி எப்போது அழைப்பார் என்று எதிர் பார்க்க ஆரம்பித்துவிட்டேன். ஆனால் அந்தப் பேறு எனக்குக் கடைசிவரை கிட்டவில்லை. 'வாங்கோ, போங்கோ' என்றுதான் விளித்தார். பன்முறை ஆக்ஷேபித் தும் பார்த்துவிட்டேன். இத்தனைக்கும் நான் பதினைந்து வயதேனும் சிறியவன்.

சரி, என்ன அந்தக் கூட்டத்தில் பேசினார்? இலக்கியம், வசனம், கவிதை, விமர்சனம் எல்லாம்தான். என் நல் அதிர்ஷ்டம், எனக்கு அவருடைய பரந்த வீச்சு இல்லா விட்டாலும் என் தகப்பனார் எனக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்திருந்த முறையில் எனக்கு அந்த பாஷையில் ருசி ஏற்பட்டு, மேனாட்டு இலக்கியத்துடன் அந்த வயதிலேயே கணிசமான பழக்கம் இருந்தமையால் அவருடைய விவாதங் களையும், விவாத நுணுக்கங்களைப் புரிந்துகொண்டு ரஸிக் கவும் முடிந்தது. அதனால் என் திருஷ்டி விரிவடைந்து பயனும் அடைந்தது.

மேற்கண்ட விவரங்கள், பொதுவாகப் பிச்சமூர்த்தி, பேச மனமில்லாதவர். தன் தந்தக் கோபுரத்தைவிட்டு இறங்காதவர் என்கிற தப்பு அபிப்பிராயம் தந்தால், அது

என் துர்ப்பாக்கியமே. அவர் கோபுரமே கொண்டாடிய தில்லை. பேச்சு கச்சடாவாக இருக்காதே தவிர, கலகலப் பானவர்தான். சகஜமாகப் பழகும் தன்மையுடையவர். அவருடைய சான்னித்யம் எனக்கு அவரைச் சுற்றிக் கயிறு கட்டினால், அதற்கு அவர் என்ன செய்வார்?

பிச்சமூர்த்தியின் எழுத்தும் அவருடைய பேச்சுப் போலத் தான். படாடோபம், படபடப்பு, அலங்காரங்கள் இல்லாமல் நறுக்குத் தெறித்த நடை. செறிந்த உலக அனுபவத்தில் தோய்ந்து, அதிலேயே விளைந்து, விஷயத்திற்கு அழுத்தம் தரும் உவமைகள். பின்னோக்கில் இன்னொரு சிறப்பும் அவர் பாணியில் படுகிறது. இன்னமும் படிக்க மறு பக்கத்தைத் திருப்பினால், ஆச்சர்யம், அங்கு ஒன்றும் இருக்காது. ஏனெனில், முந்திய பக்கத்திலேயே முடிந்துவிட்டது. ஏன் இப்படி, கதை முழுமை அடையாமல் ஏமாற்றிவிட்டதா? அப்படி எண்ணினால் தவறு. விளக்கப்புகின், எனக்குத் தோன்றுவதைச் சொல்லுகிறேன்—படித்து முடித்தபின்னரும் விஷயத்தின் உயிர்மூச்சு படித்தவன் நெஞ்சில் மிதப்பலாடு கிறது. அதாவது என்னதான் நீ கதையாகவும், நாவலாகவும், கவிதையாகவும், காவியமாகவும் எழுதித் தள்ளினாலும், ஓவியமாகத் தீட்டினாலும், தத்துவமாகப் பேசித் தள்ளி னாலும், வாழ்க்கைநூலின் மறுநுனி காணவே முடியாத நூல் கண்டு என்கிற உணர்வு நினைவில் இடறிக்கொண்டேயிருக் கிறது. இதைஒரு அபூர்வ சாதனையாகவே கருதவேண்டும்— The endless continuous mystery and mysticism of life— அவரைக் கொடியின் இயல்பு ஓயாத, முடிவற்ற படர்ச்சி.

வாழ்க்கை, ஒரு சட்டையுரிப்பு என்று பிச்சமூர்த்தி அடிக்கடி சொல்வார். இது ஒன்றும் புதிதல்ல, வெங்காயத் தோல் தத்துவம்தான் என்றாலும், அனுபவத்தின் முத்திரை யுடன் அவரிடமிருந்து வெளிப்படும்போது, அழுந்தத்தான் கவனம், அவர் பேச்சை வாங்கிக்கொண்டது.

கலைமகளில் ஒரு குறுநாவல் எழுதியிருந்தார். குறு நாவல் என்பதைவிட, நீண்ட கதை. அதில் இரவு வேளை யில் இயற்கையின் வருணனை வருகிறது. இரவின் இருளில் இரவின் ஓசைகளுடன், நட்சத்திரங்களுடன் உவமைகளை வாரியிறைத்து, இரவே நம்மைச் சூழ்ந்துகொள்கிறது. அப்பப்ப! என் ப்ரமிப்பை அவரிடம் தெரிவித்துக்கொள்ள முயன்றபோது, (எப்படி எழுதினீர்கள்?") அவர் அதைச் சர்வ சாதாரணமாக எடுத்துக்கொண்டுவிட்டார். "என்னமோ வந்தது எழுதிவிட்டேன்."

அப்படியானால், இவர் அடித்துத் திருத்துவதில்லையா? இடங்களைத் திருப்பி எழுதுவதில்லை. Fair Copy என்பதே இல்லையா? மேற்கூறியவையெல்லாம் இன்னமும் என் அவஸ்தைகள். ஆனால், எங்கள் இடையில் வயது வித்தியா சத்தில், ஏற்கெனவே நான் வகுத்துக்கொண்டுவிட்ட வேறு வித்தியாசங்களில், என் கேள்விகளை அவரிடம் எப்படிக் கேட்பேன்?

இதையொட்டி அவர்: "Creative urge, energy ஆக மாறும்போது, செலவாகிவிட வேண்டுமென்பதுதான்.

அதன் ஒரே வேதனை, ஒரே அவஸ்தை, ஒரே function. கடலில் உருவாகித் திரண்டுவிட்ட அலை, கரையில் மோதி உடைந்து பரவித்தானே ஆகவேண்டும், அதனால் வேறு என்னதான் முடியும்?" அவரை நாங்கள் ஏகமாக மதித் தோம். ஆனால், அவர் தன்னைப்பற்றி என்னதான் எண்ணிக்கொண்டிருந்தார்? கடைசிவரை புதிர். அவரிடம் போலி அமரிக்கையில்லை. அமரிக்கைகூட இல்லை. அவர் சுபாவமே தன்னைப்பற்றி நினைத்துக்கொள்ளாததுதான். அதுபோன்ற விஷயத்துக்குச் சிந்தனையைத் தந்ததாகத் தெரியவில்லை. எப்படி ஒரு எழுத்தாளனால், தன் சிந்தனையே இல்லாமல் இருக்க முடிந்தது? முதலில் இது சாத்தியமா?

இல்லை, அவருக்குத் தன்னைப்பற்றித் தெரியும். வெளிக் காண்பித்துக் கொள்ளவில்லை. என் எழுத்தைக்கூட நேரிடையாக என்னிடம் அபிப்பிராயம் தெரிவித்ததில்லை. கண்களை மலர விழித்துக்கொண்டு, என் தோளைத் தொட்டு, ராமாமிருதம், உங்களுக்குத் தெரியுமா? என் வீட்டில் என் கதைகளைவிட, உங்களுடைய கதைகள்தான் அவர்களுக்குப் பிடிக்கும்.''

நான் மகிழ்ந்துபோய்விடவில்லை. கொஞ்சம் எரிச்சலாகத்தான் வந்தது. இந்த ரிஷி என்னைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை...

புதுக்கவிதை பற்றிப் பேச்சு வந்தது.

''புதுக்கவிதையை ஒரு movement—ஆ ஆக்கணும்னு செல்லப்பா ரொம்பப் பாடுபடுகிறான். அதில் என் பங்கைப் பெரிசாக்கிக் கொண்டாடறான். புதுசா ஒண்ணைப் புகட்டறதுன்னா Public இடம் அவ்வளவு சுருக்க சாத்யமா? people have to be educated first before they can appreciated a thing'' பேச்சில் விரக்தி தொனித்தது.

அவருடன் விவாதிக்கவோ, அவருக்கு ஆறுதல் சொல்லவோ, எந்தவிதத்தில் நான் தகுதி? வாளாகிவிட்டேன். ஆனால், செல்லப்பாவின் முயற்சி வீணாகவில்லை. புதுக் கவிதைப் பரம்பரையே உருவாகிவிட்டதை முற்றிலும் காணப் புதுக்கவிதையின் பிதாமகர் இருந்தார் என்று சொல்லமுடியாது.

அவருடைய மூத்த பெண், அல்ல, அடுத்தவளா, அறியேன். வாய்ப்பாட்டுப் பயின்று கச்சேரி அந்தஸ்துக்கு வந்து, அவளும் அவள் தங்கையும் உடன் பாட, சில கச்சேரிகள்கூட நடைபெற்றன. ஆனால் மேடையில் நன்கு ஊன்றிக்கொள்ளுமுன், கலியாணம் கூடிவிட்டது.

பிசுக்காரும் செய்துகொள்ளாமல் கேட்டவுடனே அமர்ந்து பாடுவார்கள். மூத்தவளுக்கு நல்ல குரல்.

"ராமாமிருதம், உங்களுக்கு வேணுமென்கிற பாட்டு ஏதேனும் பாடச் சொல்லுங்கள். பாடுவார்கள். அவர்களுக்கும் ஒரு பிராக்டிஸ்தானே!"

சாமா ராகம் ஆலாபனை பண்ணிப் பாடும்படி கேட்டேன். அப்போது மவுசில் இருந்த 'மானஸ ஸஞ்சரரே' பாடுவார்கள் என்று என் எண்ணம். ஆனால் அவர்கள் அந்தப் பாட்டைப் பாடவில்லை. மிக்க அவாவுடன் நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஆலாபனையும் செய்யவில்லை. சட்டெனப் பாட்டில் இறங்கிவிட்டார்கள். ('குரு குஹாய' என்று நினைக்கிறேன்) அதுவும் மனமில்லாமல், ஏதோ தயக்கத்துடன்தான், என்று எனக்குத் தோன்றியது.

அவர்களுக்குப் பாடமில்லை என்று பிச்சமூர்த்தி சமாதானம் கூறினார். "தவிர, இந்த ராகம் நினைத்தமாதிரியில்லை. சுத்தமாகப் பாடவேண்டுமானால் திரடல் உள்ளது, நாம் இப்போ சாதாரணமாகக் கச்சேரியில் கேட்கிற ஆபேரி, ஆபேரியில்லை. ஹிந்தோளம். ஹிந்தோளமில்லை. தேவகாந்தாரி, தேவகாந்தாரியில்லை. அதுமாதிரிதான். ஜனரஞ்சகத்தில், சம்பந்தமில்லாத ஸ்வரங்கள் கலக்க ஆரம்பித்து, பாடமே அதுதான் என்று ஸ்தாபிதமும் ஆகிவிட்டது. கலப்படம் எங்குதான் என்றில்லை. Music - is it a changing fashion?"

சின்ன விஷயம், இதில் என்ன இருக்கிறது என்று நினைப்பவர் நினைக்கலாம். எனக்கு அப்படியில்லை.

கேட்கும் சூழ்நிலையில், வேளையில், சந்தர்ப்பத்தில், அதனதன் இடத்தில் அது அது பெரிதுதான். எழுத்து, ஸங்கீதம், கலை, இவைகளுடன் நல்தன்மையும் சேர்ந்து

அந்தச் சமயத்துக்கு ஏற்படுத்தும் ஒரு ஆறுதல், உற்சாகம் தீவிரம்—இதுவே சௌந்தர்ய உபாசனைதான். பொழுதை ஒரு உயர்ந்த தடத்தில் கழிக்க, அதற்கே பேறு வேண்டும்.

உத்யோக ரீதியில் இடமாற்றம் என்னைக் கிட்டத்தட்ட நாட்டின் தென்கோடிக்குத் தள்ளிற்று. நானும் அவரும் இது வரை இருந்த அளவுக்குக்கூடச் சந்திக்க முடியாமல் போய் விட்டது.

அவரைக் கடைசியாகச் சந்தித்தது சிதம்பர சுப்ரஹ் மணியனின் ஷஷ்டியப்த முகூர்த்தத்தில். சொற்பகாலத்துள் எப்படி இந்த மூப்பு? அப்பவும் அழகன்தான்.

""கும்பகோணத்துக்கே போயிடலாமான்னு பாக்கறேன். இங்கேயிருந்து என்ன பண்றேன்?""

குரலில் சலிப்புத் தெரிந்தது.

ஆனால் கும்பகோணம் போகவில்லை. நோய்வாய்ப் பட்டு சென்னையில் ஆஸ்பத்திரியில் காலமான செய்தி யைத் தினமணியில் படித்தேன்.

வருத்தம், துக்கம்? தனியாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று—கலைஞன், தன் கலை மூலம், மக்களின் இரத்த ஓட்டத்திலே, அவர்கள் அறியாமலே கலந்து விடுகிறான்.

மனிதனே மனிதனின் அமுதகலசம்.

பிச்சமூர்த்தியைப் பற்றி என் பார்வையில் சாயம் தோய்ந்திருக்கிறதல்லவா?

ஆனால் அதுபற்றி எனக்கு ரோசமில்லை

பிச்சமூர்த்தி கெட்டிச்சாயம்.

# 11. ந. சிதம்பர சுப்பிரமணியம்

நான் எஸ்.எஸ்.எல்.சி (இன்றைய பத்தாம் வகுப்பு) படித்துக்கொண்டிருந்த சமயம், என் சித்தப்பாவுடன் திருவட்டீஸ்வரன் கோவில் குளத்துச் சந்து வடக்கோடி வீட்டில் இருந்தேன். நடு முற்றத்தைச் சுற்றி மூன்று குடித் தனங்கள் (நாங்கள் ஒன்று). மாடியில் தனிக் குடித்தனம்.

சந்து வீடு என்றதும் மூக்குத் தண்டு சுருங்குகிறதா? அப்படி, சாதாரணமாக நினைத்துவிட வேண்டாம்.

வாரா வாரம் ஒரு கிழவர் மாடியிலிருந்தவர்களைப் பார்க்க வருவார். மாடியேறிப் போவார்.

"இவாள் யார் தெரியுமா?" சித்தப்பா என்னை உரத்த ரஹஸ்யத்தில் கேட்பார். பெரியவருக்கும், சித்தப்பா நின்று கொண்டிருந்த இடத்துக்கும் யாது சம்பந்தமும் இருக்காது. ஆயினுக்கும் அவருக்கு வழி விடுவதுபோல, ஒதுங்குவார்.

விழிப்பேன்.

"யூ ஃபூல், அவர்தான் தக்ஷிணாத்ய கலாநிதி மஹா மஹோபாத்யாய பண்டித உ.வே. சுவாமிநாத ஐயர்டா!"

அப்பவும் விழிப்பேன்.

என் தமிழ் மணம் அப்படி.

ஆயினும், ஐயர் வந்து பார்க்கும்படி மாடியில் யார்? போகப் போகத் தெரியவந்தது. ஐயர்வாள் தமிழில் எப்படியோ, மாடியில் இருப்பவர் ஸம்ஸ்கிருதத்தில் அத்தனை புலமை. பெரியவர்கள் பெரிய தடத்தில், மாடியில் பரிமாறிக்கொள்கிறார்கள் என்பது தவிர என்னால் வேறு என்ன யூஹிக்க முடியும்? வேறு என்னதான் எனக்குத் தகுதி?

மாடியில், தாத்தாவும் பாட்டியும் தவிர யாருமில்லை. ஒரே பையன். சிம்லாவில் பெரிய உத்யோகம்.

பிறகு, பையனுக்குத் தென்னாட்டுக்கு மாற்றலாகி விட்டதோ, அல்லது பெற்றோர்களைத் தன்னிடமே வரவழைத்துக் கொண்டுவிட்டானோ, அவர்கள் பெயர்ந்து விட்டார்கள்.

நான் எஸ்.எஸ்.எல்.சி தேறி, வேலை தேடும் மும்முரத்தில் இறங்கினேன்.

அடுத்து மாடிக்கு ஒரு ஸங்கீத வித்வான் வந்தார். பிரபலமானவராகத் தெரியவில்லை. ஆனால் அவருக்கும் வயதாகவில்லை. சதா, மாடியில், தம்பூர், ஹார்மோனியம். அவர் சாதகமும்தான். சில சமயங்களில், பக்கவாத்தியங் களுடன் கச்சேரியும் நடைபெறும். கஞ்சீராவும், மிருதங் கமும், அவைகளின் தனி கோதாவும், தாளத்தில் தொடை தட்டலும் மாடி அதிரும்.

சித்தப்பாவுக்கு எரிச்சலாய் வரும். குழந்தைகளுக்குப் படிப்புக் கெடுகின்றது. தவிர, அவர் எண்ணத்தில் ஸங்கீதம் சோம்பேறிப் பிழைப்பு. ஆனால் ஒன்றும் செய்ய முடியாது.

மாதம் ஓரிருமுறை, மாலைவேளை மாடியிலிருந்து ஒரு சின்ன ஊர்வலம் கிளம்பும். முன்னால் தம்பூரா, அடுத்து வித்வான், அவர் பின்னால் ஒரு சின்னப் பரிவாரம்.

டோபா மயிரை நெற்றியிலிருந்து பின்னுக்கு அழுந்த வாரி, முடிப் பிரிகள் சுருண்டு, பிடரியில் குஞ்சங்களாய்த் தொங்க...

சித்தப்பா மூக்கைப் பிடித்துக்கொள்வார். அவருக்கு ஜவ்வாது, ஏன், எந்த வாசனையுமே ஆகாது. அது போகட்டும்; வித்வான் ஏன் மையிட்டுக் கொண்டிருக்கிறார்? எனக்கு ஆச்சரியமாயிருக்கும். ஆண்கள் கூடவா?

அவரும் போய்விட்டார்.

எனக்கு இன்னும் வேலை கிடைத்தபாடில்லை. தட்டெழுத்தும் குட்டெழுத்தும் சின்னப் பரீக்ஷை தேறினேன்.

சென்னைப் பல்கலைக்கழக லைப்ரரியில், வாசகர்களின் பெயர்ப் பதிவு ஏட்டில், என் பெயருக்குப்பின் 'பி.ஏ.' என்று பொய் சேர்த்துக் கொண்டு, உள்ளே சென்று, மேனாட்டு இலக்கியங்களைப்—படிக்கவில்லை, விழுங்கினேன். உள்ளே பற்றிக்கொண்டுவிட்ட ஆக்கசக்தி வடிகால் தேடித் தவித்தது. நானும் எழுதணும். எப்படி, என்ன, எதை? தவிப்பே அதுதான்.

மாடி கொஞ்ச நாள் காலியாகக் கிடந்தது. வாடகை சுளையாய் ரூபாய் பதினெட்டுக் கொடுத்துவரச் செயல் வேண்டாமா?

ஏதேனும் புத்தகத்தை எடுத்துக்கொண்டு மாடியில் தனிமையில் உட்கார்ந்திருப்பேன். புத்தகம் மடியில் விரித்த படி கவிழ்ந்து கிடக்கும். இந்தக் கூடத்தில், பாண்டித்யமும் ஸங்கீதமும் நடமாடியிருந்திருக்கின்றன என்கிற எண்ணத்திலேயே மர்மமான கவர்ச்சி தெரிந்தது.

"அப்பா, உப்பரிகையிலிருந்து இறங்கி வரையா? அட்வான்ஸ் வாங்கியாச்சு."

இளஞ்ஜோடி! அம்மா.

அம்மாவுக்கும் வயதாகவில்லை.

வசதியான குடும்பம். நிறைய நிலபுலன் (மன்னார்குடிப் பக்கம்?) சொத்து இருக்கும்போல் தெரிகிறது. ஒரே பையன் சி. ஏ வுக்குப் படித்துக்கொண்டிருக்கிறான். ஆனால் ஒரு குறை. கலியாணமாகி நாளாகிறது. இன்னும் புத்ரப்ராப்தி யில்லை.

(இதுபற்றிச் சிதம்பர சுப்பிரமணியம் பின்னால் என்னிடம் தமாஷாக: "அம்மா அவசரப்பட்டுவிட்டாள். கொஞ்சம் பொறுத்திருந்தால் அந்தக் கவலையைப் பட்டிருக்க வேண்டாம்!")

—நான் இன்னும் வேலை தேடிக்கொண்டிருக்கிறேன். என்னைவிடப் பெரியவன் கலியாணமாகி இன்னும் படித்துக் கொண்டிருக்கும் சௌகரியம்—புரியவில்லை. புழுக்கம்தான் தெரிகிறது.

முதல் சிறுகதை

சில மாதங்களுக்குப் பிறகு, இன்னொரு சித்தப்பாவுக்கு —அவர் ஜாகை, திருவல்லிக்கேணி—இடம் மாறினேன். அவருடைய கண்காணிப்பில் வேலை சுருக்கக் கிடைக்கலாம் என்று பெரியவர்களின் முடிவு.

அங்கேயும் வேலைவாய்ப்பு நிலைமை மாறிவிடவில்லை. ஆனால், வேறு வாய்ப்புகள் தாமாகவே முளைத்தன.

எதிர் வீட்டில் கல்லூரி மாணவன் சகவாசம் கிடைத்தது.

அவன் வீட்டில் உத்தமமான புத்தகங்கள், சஞ்சிகைகள் படிக்க முடிந்தது. என் இலக்கியப் ப்ரக்ஞை விரிவடைந்தது. ரஸனை மெருகேறிற்று. அறிவுபூர்வமான சம்பாஷணையில், சர்ச்சையில், விசாரங்களில் திளைத்தேன்.

என் நண்பன் சம்பந்தப்பட்டு, ஆனால் நிச்சயமாக அவன் உதவியால் அல்ல—'Short story' எனும் ஆங்கில மாதப் பத்திரிகையில் என் முதல் கதை பிரசுரமாகியது.

அடுத்தடுத்து என்னுடைய மூன்று கதைகள், மணிக் கொடியில் வந்தன.

என்னை அறியாமலே என் நடையில் சேவல் புகுந்து கொண்டது. லேசாகத்தான். ஆனால் சேவல்.

பிறகு ஒரு மாலை,

(''ராமாமிருதம், உனக்கு ஒரு ஸர்ப்ரைஸ்!'') என் நண்பன், பிரஸிடென்ஸி காலேஜ் மணிக்கூண்டெதிரில், மரீனாவில் கூடிப் பேசும் மணிக்கொடி எழுத்தாளர்கள் குழுவுக்கு அழைத்துச் சென்றான். அதில் குளத்துச் சந்து வீட்டு மாடியில் குடியிருக்கும்—

இவர் இங்கே, எப்படி?

யாரோ: ''இவர்தான் சிதம்பர சுப்பிரமணியம்.''

அங்கே விழிமுகம்.

இங்கே அறிமுகம்.

தளதளவென்று, பூசினாற்போன்ற தேகம். அலைபாயும் மயிர். கதர் அரைக்கைச் சொக்காய் மேல், சவுக்கத்தைச் சால்வை போல் போர்த்தியிருந்தார்.

ஆனால், அவர் என்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அடையாளம் கண்டுகொள்ள விருப்பப்படவில்லை என்று தோன்றிற்று. சுண்டல்காரப் பையனிடம் எனக்கும் என் நண்பனுக்கும் அளக்கச் சொன்னார். (இதெல்லாம் விஷயமா என்கிறீர்களா? எங்களுக்கு அப்போது—அது பெரிய விஷயமாய்த் தானிருந்தது.)

என்னை இங்கே இப்படிப் புதுமுகமாகப் பார்ப்பது எனக்கு ஆத்திரமாக வந்தது. ஏன்? நானும் அடியெடுத்துக் கொடுக்கவில்லை. அப்புறம் சித்தப்பா வீட்டுக்கு நான் போக நேர்ந்தபோதுகூட அவரைச் சந்திக்கவில்லை.

[அவர் தாயார்: ""ஏண்டா பையா, நீ கதை எழுதறியாமே!""

நான்: ""யார் சொன்னது?"" (அசட்டுக் கேள்வி. ஆனால் அடக்க முடியாத கேள்வி. பெருமிதம் அப்படி!)

""என் பிள்ளைதான் சொன்னான். நன்னாவே எழுதறியாமே!""]

ஓ, இவர்தான் சிதம்பர சுப்பிரமணியமா? இத்தனை அருகாமையில், முழு ஆளாய்த்தானிருந்தார்.

அவர் குரலை இன்றுதான் கேட்கிறேன். ஸன்னமான குரல். பேச்சிலேயே சுபாவமான சங்கோஜம் தெரிந்தது. அதிகமாகப் பேசுபவர் இல்லை. பிறர் பேச்சைக் கவனிப்பவர் தான் போலும்! அப்படியும் 'உம்'மென்று இல்லை. இன்முகம்தான். வாய்விட்டுச் சிரிக்கையில் உடம்பு குலுங்கிற்று.

இவர் கதைகளை ஏற்கெனவே படித்திருக்கிறேன். அப்போது நான் அவசரமாக மேயும் மாடு. என் பசிக்கு எல்லாமே புதுமை. இப்போது பின்னோக்கில் ந.சி.யின் எழுத்தை எடை போடுகையில் நான் காண்பது ஒரு கலைஞன். அவருடைய கதைக்கருக்கள் மென்மையானவை. பால்மேல் ஏட்டின் நலுங்கல்போல். உடனே ஞாபகத்துக்கு வரும் ஒரு கதையின் சுருக்கம் இங்கே சொல்கிறேன்.

சங்கீதத்தில் ஆர்வமிக்க ஒரு பெண், அவளைப்போலவே கலையார்வம் கொண்ட அவள் கணவனுடைய ஆதரவினால், முறையாக இசைப்பயின்று ஒருநாள் அவளுடைய முதல் மேடையும் ஏறுகிறாள். சபையோருடன் ஒருவனாக அவள் கணவனும் உட்கார்ந்திருக்கிறான். சபையோரிடம் அவன், நியாயமான ஆவலுடன் எதிர்பார்க்கும் ரஸிகத்தன்மைக்குப்

பதிலாக அவர்கள் பேச்சில் அவன் கேட்பதென்ன? அவனு டைய ஆடை ஆபரணங்களையும் அங்க நேர்த்திகளையும் ரஸித்துக்கொண்டிருக்கிறார்கள் கேலியாகவும், கிண்டலா கவும்...குன்றிப் போகிறான். பல வருஷங்களுக்கு முன் படித்தது. இதில் ஆசிரியர் அச்சுறுத்துவது எந்த உயர்ந்த லக்ஷியமோ, அழகோ, எப்பவும் அதைச் சூழ்ந்துகொண் டிருக்கும் ஆபாசம், அவலத்தின் பாதிப்பிலிருந்து முற்றிலும் தப்பமுடியாது. அப்படித்தான் கதையை நான் காண்கிறேன்.

ந.சி.யின் தமிழ்நடை தெளிந்த நீரோடை போன்றது. எளிமையான சொற்கள், ஸ்படிகச் சிதர்கள்போல்.

தி.ஜ.ர. ஒரு தடவை சொன்னார். இன்னும் மறக்க வில்லை: ''ஓ அவருக்கென்ன, மனுஷன் எப்பவும் இசை, இலக்கியம், கலை என்கிற சூழ்நிலையிலேயே உழல்கிறார். அதையே சுவாசிக்கிறார். அவர் நன்றாக எழுதுவதற்குக் கேட்கணுமா?''

இதய நாதம் (பேரே பாருங்கள், அதிர்வுகள் கேட்க வில்லை?), தமிழ் நாவல் இலக்கியத்தில் ஒரு மைல்கல். அதில் அவருடைய கலையின் செழிப்பு, முழுக்கத் தெரிகிறது. அது தோன்றியதும் அதன் பரபரப்பும், சக்தியும், மக்கள் நினைவில் வெகுநாள் தங்கியிருந்தது. அதன் 'கிண் கிண்'' இன்றும்கூடச் செல்லுபடிதான்.

தன்னுடைய கலையை அவர் கறிவேப்பிலைக் கன்றைப் போல் பராமரித்து வளர்த்தவர். வளர்த்தவர்களுக்குத்தான் கன்றின் அருமை தெரியும். ஆதர்சக் கலைஞன் அப்படித்தான் இருப்பான்.

பாராட்டுதலிலும் அவர் மனத்தாராளம் மிக்கவர். ''ராமாமிருதம், மணிக்கொடியில் மூன்று கதைகள் அடுத் தடுத்து உங்களுடையது வந்தனவே— 'புலியும் முயலும்',

"புலி ஆடு', 'பசி'—All truly superb-mature works. Perfect short stories. A.E. Coppard, Arthur Calder Marshall ரீதியில்—இந்தப் பேர்களே இங்கு யாருக்குத் தெரிந்திருக்கப் போகிறது?—ஒரு 'மூடை' (mood) அதன் தருணத்தை அப்படியே உறைய வைத்துக் காட்டியிருக்கிறீர்கள். Situation கதை கதைன்னு அடிச்சுக்கறான்கள். இந்தச் சங்கிலியை என்னிக்கு அறுக்கறோமோ, அப்பத்தான் நம் எழுத்துக்கே விடுதலை.''

இரண்டாவது உலக மஹாயுத்தம்.

கூடவே நாட்டின் விடுதலைப் போராட்டம்.

தவிர, அவரவரின் சொந்தப் பிரச்சினைகள்.

மெரீனாவில் மணிக்கொடி எழுத்தாளர் கூடிப் பேசின பேச்செனும் பெயரில் நேர்ந்த உறவின் ஸ்ருதி, நினைப்போடு சரி. நாங்கள் கலைந்து போனோம்.

ஒருமுறை விசாரித்துக்கொண்டு—அப்போது அவர் கோடம்பாக்கத்தில் குடியிருந்தார். வாஹினி பிக்சர்ஸ் லிமிடெட்—மானேஜராக வேலை பார்த்து வந்தார். அவர் வீட்டுக்குப் போனேன். இருவருக்கும் காணாததைக் கண்ட மாதிரிதான். அளாவி மகிழ்ந்துகொண்டிருந்த சமயத்தில், நான் வந்த காரியத்தை அவிழ்த்துவிட்டேன். நான் வங்கியில் இருந்தேன். சூழ்நிலை சரியில்லாமல் எனக்கு என் வேலை மீது வெறுப்பு. வாஹினியில் வேலை போட்டுத் தரும்படி கேட்டேன்.

வந்ததே அவருக்கு ஒரு கோபம்! அதுமாதிரி அவரை நான் பார்த்ததேயில்லை. சற்று மிரண்டுபோனேன்.

'Don't be a fool. நீங்கள் இப்போது இருக்கும் இடம் உங்களுக்குக் கிள்ளுக் கீரையா? அவசரப்பட்டுப் பைத்தியக் காரத்தனம் ஏதேனும் பண்ணிவிடாதீர்கள். உங்கள் அசட்டுத் தனத்துக்கு யார் மேலேனும் பழியைப் போடத் தேடாதீர்கள்.''

'நீங்கள் வாஹனியில்தானே இருக்கிறீர்கள். அப்போ அது சோடையா?' என்று முனகினேன்.

''இதோ பாருங்கள் ராமாமிருதம், என் காரணங்கள் சூழ்நிலை வேறு. B.N.-உம் நானும் காலேஜில் ஒரு வகுப்பில் இருந்தோம். 'சும்மாத்தானே இருக்கே, வாயேன்' என்று அழைத்தான்; தவிர, பெரியவர்கள் வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள் என்று நானும் சும்மா இருக்கலாமா? நம்முடைய சமூகத்தின் set-up இல், உத்தியோகம் கௌரவச் சின்னம் மட்டுமல்ல, வயிற்றுப் பிழைப்பே அதுதானய்யா!'' அவர் புத்திமதியைக் கேட்டேனோ, பிழைத்தேன்.

அவருடைய அந்திம நாள்களில் அவருக்குக் காலம் சரியாயில்லை. பல சோதனைகள் நடுவில் உடம்புக்கு வந்துவிட்டது. கேள்விப்பட்டு அவர் வீட்டுக்குப் போனேன். மாமி ஏதோ மென்று விழுங்கினாளே ஒழிய, அவர் உடல் நிலையைச் சரியாகச் சொல்லவில்லை. ஆனால், நான் தெரிந்துகொண்டது அவருக்கு 'ஸ்ட்ரோக்'. ''நடமாடறார். தன் காரியத்தைத் தானே பார்த்துக்கறார், ஆனால்—''

ஆனால் பேச்சு சரியாக வரவில்லை.

ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசாமலும் இல்லை. ஆனால் அனேகமாக ஜாடைதான் காட்டினார். கண்கள்—சற்றுச் சிறியவைதான்—அசாதாரணமாகப் பேசின. பளபளத்தன. எனக்கு அவர் நிலைமை கெடுபிடியாகத் தோன்றவில்லை.

ஆனால், நான் பார்த்து வந்த ஒரு மாதத்துக்குள், ஒரு நாள் காலை, 'ஹிந்து'வை நடுப்பக்கத்தில் பிரித்ததும் அவருடைய மரணச் செய்திதான் கண்ணில் முதன் முதல் பட்டது. கொஞ்சம் அதிர்ச்சிதான். உடனேயே மனதில் ஒரு வாக்கியம் தோன்றிற்று.

''சாவே, கர்வம் கொள்ளாதே.''

சுவடுகள் அழியலாம். ஆனால், ரேகைகளை அழிக்க முடியாது.

# 12. பிராயச்சித்தம்

குங்குமம் ஆசிரியருக்கு:

குங்குமம் செப். 1 — 7 தேதி இதழில் என்னைப்பற்றி ந. சிதம்பர ஸுப்ரஹ்மண்யனின் கட்டுரையைப் படித்ததும் ஆச்சர்யமடைந்தேன். சற்றுப் பொறி கலங்கினமாதிரியே ஆகிவிட்டது. ஏனெனில் முதன் முறையாக நானே இப்பத் தான் படிக்கிறேன். எப்போது, எந்தப் பத்திரிகையில் வெளி யானது? எங்களுக்குள் நெருக்கமான பழக்கமிருந்தும் அவர் என்னிடம் குறிப்பாகக்கூட உணர்த்தவில்லை? காரணம், அவருக்கே இயல்பான சங்கோஜமா? அல்ல, தம்பட்டமற்ற அவருடைய பெருந்தன்மையா?

இந்தக் கட்டுரை தெளிவுபடுத்தியிருக்கும் அளவுக்கு, அவர் என் எழுத்தின்மேல் வைத்திருந்த அபிப்பிராயத்தை என்னிடம் நேரிடையாகச் சொன்னதில்லை. அவருடைய மனோவிலாஸத்துக்கு, விசாலத்துக்கு இதைவிடச் சான்று வேண்டாம். அந்தக் காலத்தில் எழுத்தாளர்களும் அவர்கள் ஆக்கத்தின் அளவும் குறைவுதான். ஆனால் அவர்கள் கடைப்பிடித்த மரபே தனி.

கட்டுரையைப் படித்ததும் எனக்குக் கிளறிவிட்ட மாதிரியாகிவிட்டது.

கடைசியாக அவர், தியாகராய நகர், மோதிலால் தெரு வில் குடியிருந்தபோது, அவர் நோய்வாய்ப்பட்டிருப்பதாகத் தெரிந்து, காணப் போயிருந்தேன். அங்குதான் தெரிந்தது. நோயே என்னென்று, சரியாகப் பேச வரவில்லை. நாக்குக்குப் பதிலாகக் கண் பேசிற்று. திரியாகத் திகுதிகுத்தது. நடமாட்டம் இருக்கிறது. பேச்சுத்தான் பாதிக்கப்பட்டிருக் கிறது என்று மாமியிடமிருந்து தெரிந்துகொண்டேன். அப்படியும் ஏறக்குறைய ஒரு தலை சம்பாஷணையில் ஒரு மணி நேரம் இருந்துவிட்டு, வீடு திரும்பினேன்.

போய் வந்த ஒரு மாதத்துள், ஒரு காலை, ஹிந்துவை நடுப்பக்கத்தில் பிரித்ததும் கண்ணில் பட்டது அவர் மரண மான செய்திதான் (Obituary) அவர் வீட்டிலிருந்தும் தபால் வந்தது.

ஆனால் நான் உபசாரத்துக்குப் போகவில்லை. காரணம்? என்னென்று சொல்வேன்? ஏதோ ஒரு கூச்சம், துக்கப்படுவோரின் கண்ணீரைச் சந்திக்க அச்சம், உண்மை யின் தரிசன பயம். கூடவே, கூடுவிட்டு ஆவிதான் போன பின்னர் அங்கே என்ன இருக்கிறது என்ற தத்துவம். ஆனால் இது என் கோழைத்தனத்தை நியாயப்படுத்த நொண்டிச்சாக்கு என்று எனக்கே உடனே தெரிந்துவிட்டது.

ஈமச்சடங்குகள் முடிந்து பத்து நாட்கள் ஆகியிருக்க லாம். நண்பர் மகரத்திடமிருந்து கடிதம் வந்தது.

'சிதம்பர ஸுப்ரஹ்மண்யனின் மனைவியார், "எல்லாரும் வந்தார்கள், ஏன் ராமாமிருதம் வரவில்லை! கடிதம்கூடப் போட்டுதே!" என்று மிகவும் வருத்தப்பட்டார் கள். அங்கு நான் இருந்த நேரத்துக்குள், இரண்டு மூன்று தடவை கேட்டுவிட்டார்கள். நீங்கள் உடனே போய் அவரைப் பார்க்க வேண்டும்.

—என்கிற ரீதியில், என் தவறை எனக்கு அச்சுறுத்தும் வகையில்.

நான் சென்றபோது அந்த அம்மா ஏதோ வேலையாய்ச் சமையலறையில் இருந்தார்கள். நேரே போய், காலடியில் நெடுஞ்சாங்கடையாக விழுந்துவிட்டேன். வேறு தோன்றவில்லை.

"யாரு, ராமாமிருதமா, எழுந்திரு. ஏப்பா, நீ இப்படிச் செய்யலாமா? மற்றவர்களையெல்லாம் எனக்கு எழுத்தாளர்கள் என்கிற முறையில்தான் தெரியும். ஆனால் உன்னை நான் லா.ச.ரா.வாக நினைக்கவில்லை. எனக்கு ராமாமிருதத்தைத்தான் தெரியும். இன்றைய நேத்தைய பழக்கமா? கலியாணமான கையுடன் நாங்கள் நாகப்பையர் தெருச் சந்து வீட்டு மாடிக்கு குடித்தனம் வந்தபோது, நீ கீழே உன் சித்தப்பாவோடு இருந்தே. அப்போ எஸ் எஸ்.எல்.சி. படிச்சிண்டிருந்தையா? நீ இப்படிச் செய்யலாமா?"

அவள் அழுது என்னைச் சங்கடத்தில் ஆழ்த்தவில்லை. ஆனால் அப்படி அவள் கேட்கையில், வாயடைத்துப்போய், கண்ணீர் மல்க நின்றேன்.

மகரம் சமயவரமாய், என்னை ஓரளவுக்கு எனக்கு மீட்டுக்கொடுத்தார். ஆனால் இங்கே என் குற்றத்தை ஒப்புக்கொள்வதில் என் பிராயச்சித்தத்தைத் தேடுவதாக நினைத்துக்கொள்கிறேன்.

தவிர, சமயத்தின் கவிநயம் எப்படியெல்லாம் ஒளிந்துகொள்கிறது, சமயத்தின் சத்யம் எப்படியெல்லாம் வெளிப்படுத்திக்கொள்கிறது என்பதையும் தெரிந்துகொண்டேயிருக்கிறேன்.

—குங்குமம்

## 13. இதழ்கள்

வசுதேவ தவ பாலனே

*கம்பளி அடைப்புக்குள் சுகமான இருளுள்*
**கதகத**
*இமையடியில் ஆழ்ந்துபோன தன் இழப்புள்*
*மினு மினு*
*உருகும் வெள்ளிப்பாகின் இழையென*
*நுழைந்து*

அசுர குல காலனே

*அம்மாவின் குரல் நினைவைச் சுற்றிப் பற்றிக் கவ்வி இழுக்கிறது.*

தேவகி மைந்தனே யசோதையின் செல்வனே
பிருந்தாவன லோலனே
எழுந்திரும்

*அம்மாவின் குரலில் எப்பவுமே ஒரு இம்மி இனிப்பு கூடுதலாகிவிட்ட தெவிட்டல் உண்டு என்று எனக்கு அப்பவே எண்ணம். அந்நாளில் கலியாணம் கார்த்தி கொலு போன்ற விசேஷங்களில் அம்மாவும் அத்தையும் சற்றுப் பிரசித்தமான*

பாட்டு ஜோடி. திண்ணையிலிருந்து பெரியவர்கள், "தமிழ்ப் பண்டிதராத்துப் பெண்ணையும் நாட்டுப் பெண்ணையும் பாடச் சொல்லுங்களேண்டி" என்று கேட்டதும்,

கௌரி ராஜராஜேஸ்வரி சிவசங்கரி கருணாகரி
விரி கடைக்கண், வைத்தென்னை ஆளம்மா

அம்மாவின் குரல் நயத்துடன் அத்தையின் வெண்கல சாரீரம் சேர்கையில் ஒரு நாதச் சுழிப்பு நேர்ந்து, செவி வழி உடல் பூரா நிறைவது போன்ற ஒரு அனுபவம் சிறிசுகளுக்கே ஏற்படுமென்றால் விஷயம் தெரிந்த பெரியவர்களைப் பற்றிக் கேட்பானேன்?

"எப்படிப் பாடறா! இத்தனைக்கும் சிக்ஷையில்லை, ராகம் தாளம்னு தனி ஞானம் இல்லை—"

"அப்படியெல்லாம் அவசியமா என்ன? அதுவே ஸான்னித்யம் உள்ள குடும்பம் அல்லவா! அம்பாள் கடாக்ஷம் இருக்கறப்போ வித்தைக்கென்ன குறைச்சல்?"

"லக்ஷ்மி கடாக்ஷம் வேண்டாமா?"

"அங்கேதான் விதி, கர்மா, ஊழ்—வேறு பாஷை முட்டுக் கொடுக்க வந்துடறது. பாஷையிருக்கிற வரை சமாதானங்களுக்கு என்ன குறைச்சலப்பா?"

"ராமாமிருதம், எழுந்திரு. போய்ப் பால் வாங்கிண்டு வா!"

முக்கல், முனகல், கம்பளியின் கதகதப்பிலிருந்து மனமில்லாமல் உதறிக்கொண்டு எழுந்து உட்கார்ந்து உடலை முறித்து...

என்ன பண்ணினாலும் நடக்காது. இன்னிலிருந்து, பதினைஞ்சு நாளைக்கு என் முறை. மிச்சப்பாதி என் தம்பி. ராஸ்கல், துணி போனது தெரியாமல் எப்படித் தூங்கறான்

பாரு! வெடுக்குனு தொடையில்—இல்லை, கூடாது. பாட்டு வெச்சான்னா அண்ணாவுக்குத் தூக்கம் கலைஞ்சு—அவ்வளவு தான் என் தோலை உரிச்சுடுவார்.

புர்ர்—பல், கிலுகிலுப்பை அடிக்கிறது. ஆனால் அம்மா குளிச்சாச்சு, பச்சைத் தண்ணிலே. சுறுசுறுப்பா காரியத்தில் வளைய வரா. காரியம் இல்லாட்டாக்கூட, அம்மா காரியத்தை உண்டு பண்ணிப்பா.

வாசற்கொறடில் பெரிய கோலம். உள்ளிலும் வெளி யிலும் காவியில் கரைகட்டி, கோலத்தின் நடுவே சாணியில் பூசணிப் பூவை நட்டு—ஒருவேளை அம்மா வெண் பொங்கல் பண்ணப்போறாளா? அதுதான் இன்னிக்கு இன்னும் சுருக்கக் காரியம் பாக்கறாளா?

படிக்கட்டிலிருந்து இறங்கினதும் புல் நுனிகளின்மேல் பனித்துளிகளின் ஈரம் 'சில்'னு—ஈரம் மண்டையைப் பிளக்கிறது. இப்படியே ஒரு மைல் நடந்தாகணும்.

பட்டணத்திலிருந்து புதிதாகக் கிராமத்துக்கு வந்திருக் கும் எங்களுக்குத்தான் இன்னும் விடியலையே ஒழிய, தெரு வில் நடமாட்டம் நிறையவே இருக்கு. ஆண், பெண் அத்தனைபேரும் இந்நேரத்திலிருந்து ராத்திரி வரை ஏதேனும் வேலையா இருக்கா. இவாளுக்கு ஓய்ச்சல் ஒழிவே கிடையாதா? அதெப்படி முடியும்? அதுவே எனக்கு ஆச்சர்யமாயிருக்கு.

இது ஒரு நெசவாளர் கிராமம். நெசவுடன் விவசாயம், இரண்டுக்கும் இடையில் கொஞ்ச நஞ்சப் போதுக்கு கோர்ட்டுக்கு அலைய வீட்டுக்கு வீடு ஒரு கேஸ் கட்டு. கேஸ் இருந்தால்தான் அந்தஸ்து.

தெருவில் பாவு தோயப்போறது. ஏற்பாடெல்லாம் நடந்திண்டிருக்கு. பூமியில் கடப்பாறை அடிச்சு இறக்கும் சத்தம் கேட்கிறது.

பெரிய கற்கண்டுக் கட்டியாட்டம் வெள்ளி, நான் போகும் வழியில் என்னை முன்னிட்டுண்டு ஆகாசத்தில் தொங்கறது. வெள்ளின்னு நக்ஷத்ரம் உண்டுன்னு இங்கு வந்துதான் தெரியும். சூரியனின் புறப்பாடு வர்ணங்கள் தோய ஆரம்பிச்சதுமே, இது மங்கி இதன் பெருமை மங்கி இதுவும் அந்தப் பெரிய வெளிச்சத்தில் மறைஞ்சுடும் என் கிறதைப் போகும் வழிக்குப் பொழுது போக்கா நெனச்சுண்டு போனாலே அதுவே ஒரு ருசியான துக்கமாயிருக்கு.

தினம் அலைக்கழிக்கிற இடையன், இன்னிக்கு எனக்கு முன்னாலேயே வந்து நிக்கறான். இல்லே உக்காந்துண்டிருக் கான். கன்னுக்குட்டியை, மாட்டின் முன்னங்காலில் அணை கயிறால் பிணைச்சிட்டு மாட்டின் வயத்தில் தலையை முட்டிண்டு, கறக்கத்தயாரா—குவளையைக்கூட அவனிடம் கொடுக்கப்போயிட்டா, கரெக்டா நான் போய்ச் சேர்ந்தேன். ஓடிப்போய்ப் பிடுங்கிக் கவிழ்த்தா—கொட்டறது ஒரு ஆழாக்குத் தண்ணி.

'ஈ தேம் பாடே!' தெலுங்கில் என்னவோ கத்தறா.

'ஆதி, கிழவி, பிசாசு!' நானும் கத்தறேன். எப்படாப்பா யார் ஏமாறுவான்னு காத்திண்டிருக்கா பாவி!

ஆனால் எனக்கு உள்ளூர அவள் திருட்டைக் கண்டு பிடிச்சுட்ட பெருமை பொங்கறது. இவள் இன்னும் ஏதேனும் ராக்ஷஸ மாயம் பண்ணுவா. ராமலக்ஷ்மணா யாகம் காத்த மாதிரி (தாத்தா கதை சொல்லியிருக்கா) மாட்டைச் சுத்திச் சுத்தி வரேன். அவள் தன் பாஷையில் கத்திண்டேயிருக்கா, கத்தட்டும்.

''க்றிங்! கிளிங்! க்றீங்ங்!'' ஆரம்பத்தில் இனிய சத்தத் துடன் குவளையில் இறங்கிய பீறல்கள் குவளையில் பால் உயர உயர, மெத்து மெத்து என்பதை நின்று சுவாரஸ்ய

மாகக் கவனித்துக் கொண்டிருக்கையில், என் கண் திடீரென சரத்தில் வெதவெதக்கிறது. கண்களைக் கசக்கிக்கொள் கிறேன். மொட்டை சிரிக்கிறான். மொட்டைக்குத் தலை நிறைய மயிர்; ஆனால் மொட்டைன்னு பேர் ஏன் தெரியல்லே.

இம்மாதிரி மாறி மாறி, இரு கண்களிலும் மாட்டின் மடியிலிருந்து நேரே எத்தனை பால் பீச்சல் வாங்கி அதனாலேயே விஷயங்களை அனுதாபத்துடன் பார்க்க ஆசிர்வாதம், கண்கள் பெற்றிருக்குமோ?

அசட்டு எண்ணம், ஆனால் எவ்வளவு பிடித்தமான எண்ணம்! ஒருவேளை, எண்ணத்தில் அசடு இல்லையோ?

* * *

காலை ஆட்டிண்டு குறடுத் திண்ணையில் உட்கார்ந் திருக்கேன். சூரியன் உச்சி மண்டைக்கு நிக்கறான். ஆனால் அந்த வயசில் எனக்கு உச்சி வெய்யிலும் உச்சி நிலாவும் ஒண்ணுதான்.

முருகன் காலடியில் ஒரு கல்லைத் தெத்திண்டே வரான்.

''ஏன் வெய்யில்லே குந்திட்டிருக்கே, மூஞ்சி குரங் காட்டம்!''

''ஷட் அப் கரிக்கட்டை. உன்னால் ஒரு நாளும் என் மாதிரி சிவப்பு ஆக முடியாது. பொறாமை!''

''மெய்தான். நான் அதுக்கு என்ன செய்ய முடியும்? கடவுள் எப்பிடிப் படைச்சானோ அப்பிடி. எனக்குச் செழுப் பாகி என்ன ஆவணும்? எனக்கு உன்மேல் பொறாமை யில்லே. எள்ளும் பச்சரிசியும் கலந்த மாதிரி நாம எப்பவும் சிநேகமாயிருந்தா சரி.''

என் கோவம் பறந்தோடிப் போச்சு. என்னால் வெகு நேரம் என் சிநேகிதனோடு கோவமாயிருக்க முடியாது.

ஆனால் முருகன் கரிதான். அட்டக்கரி. கட்டுக்குடுமி. கழுத்தில் ஒட்டக்கட்டின சிவப்புநூலில் நெஞ்சங்குழியில் தங்கும் ருத்ராக்ஷக் கொட்டை. இடுப்புத்துண்டு எப்பவும் அவன் கழுத்தைச் சுற்றித்தான் இருக்கும். கோவணத்தில் சுற்றுவான் என் வீட்டை ஒட்டிய இந்த அஞ்சு வீட்டில் பெரியவர்களே அப்படித்தான். கழுத்தைச் சுற்றி அல்லது தலையில் முண்டாசாய்ச் சுற்றியிருக்கும். இவர்கள் குயவர் கள். மண் மிதித்து, மண்பாண்டம் செய்து, பாண்டத்தைத் தட்டி, மண்ணிலேயே உழன்று, தவிர எப்பவுமே உழவு

''ராமு''

''——?''

''ஏ ராமு!''

''சொல்லேன்.''

''இப்டி போவோமா?''

''எங்கே?''

''இப்டீ—''

'சரி, சொல்லிட்டு வந்துடறேன்' எழறேன் கையமர்த்து கிறான்.

''சொன்னால் போகவிடமாட்டாங்க. அவங்க தேடற முன்னாடி வந்துடுவோம்.''

''ச—ரி—'' இழுக்கறேன். சரியாயில்லை. சரியாவு மிருக்கு.

''நம்மை நம்ம இஷ்டத்துக்கு விடமாட்டாங்க. அதனால் தான் அவங்க பெரியவங்க.''

உள்ளே போய்ப் பார்க்கறேன். எல்லாரும் தூங்கறா. அண்ணாதான் எப்பவோ பள்ளிக்கூடம் போயாச்சு. அண்ணா ஹெட்மாஸ்டர்.

முனை திரும்பியதுமே, கால்கள் தாமே வேகமெடுத்து விட்டன. ஆனால் முருகன் ஸ்பீடு என்னால் முடியாது. அதென்ன சுருள் பிரிஞ்ச மின்னல் மாதிரி ஒரே சீறல்.

""பரவாயில்லே, பட்டணத்துப் பையன் பாப்பாரப் புள்ளேக்கு நல்லாத்தான் ஓடறே!''

வாய்க்கால் தாண்டினதும் எந்த அடைப்புமில்லாமல் ஒரே வெட்டவெளி. அது எங்களை விழுங்கி, நானே எனக் கில்லாமல், இத்தோடு இழைஞ்சு போயிட்டமாதிரி—ஒரு விதத்தில் இது பயமாயிருக்கு. நல்லாவுமிருக்கு.

தரையின் மேடு தாழ்வு, வளைவு நெளிவுகள் கிரஹண சமுத்ரம் மாதிரி (குளிச்சிருக்கேனே!) அலைபாயறது. எட்டட் ரொ ம் ம் ம் ப எட்டட் பச்சை விளிம்பு. அந்த விளிம்புக்குக் கரை கட்டி ஒரு மேடு வளைஞ்சு வளைஞ்சு போக, அதன்மேலே பனைமரங்கள் சோல்ஜர் பாரேட் மாதிரி காவல் நிக்றதுகள். வெய்யில் நக நக—

எங்கள் ஓட்டம், எங்கள் வேகம், எங்கள் மூச்சு ஏதோ ஒரு ஒழுங்கில் விழுந்துபோச்சு. இறைப்பு இல்லை. ஒரே ஸ்டெடி.

''ராமு, அதோ பாத்தியா பச்சையம்மன் கோயில்!''

ஆமா, என் பார்வையின் மிதப்பாட்டத்தில் அதோ ரெண்டு பெரிய சிலைகள் பூமியின் அலைகளிலிருந்து எழறது. நெருங்க அதுகள் ஒரு மதில்மேல் உட்கார்ந்திருக்கு. அது களுக்கெதிரில் ஒரு கோயில். அந்த சைஸுக்கு ஒப்பிட் டால், கோவில் நிறுத்திவெச்ச நெருப்புப் பெட்டி.

நெருங்க நெருங்க, ஒன்று ஆண் மற்றது பெண். ஆளுக்கு நெட்டுக்குத்தலா கையில்ஒரு கத்தியை ஏந்திண்டு ஒரு காலைத் தொங்கவிட்டு, ஒரு காலை மடிச்சிண்டு உட்கார்ந் திருக்கு.

''கோவிலுக்குள்ளே ஆத்தாள் இருக்கா'' ஓடிக் கொண்டே ஒரு கையால் தாடைகளில் மாறி மாறிப் போட்டுக்கொள்கிறான். நானும் அவன் செய்ததைப் பார்த்து அவன் போலவே.

''இவங்க ரெண்டுபேரும் ஆத்தாளுக்குக் காத்தான்கள்''

சிலைகளை அண்ணாந்தபடி எதிரே நிக்கறோம். வானம் ஒரே பூரித்த நீலம். வெய்யில் பிளக்கிறது. காற்றுக்கூட அசையல்லே. 'கப்சிப்கமா' பயமாயிருக்கு.

தோளோடு தோள் இடிக்கறான், திரும்பறேன்.

''ராமு—'' கிசு கிசு கண்கள் கூத்தாடுகின்றன.

''எம்மாம் பெரிசு பாத்தியா?'' கையை வேறு அகல விரிச்சுக் காட்டறான். 'ஓண்ணொண்ணும் ஒரு குடம் கொள்ளும். இம்மா பால் நம்ம உண்ணால், என்னாத்துக் குடா ஆவறது?''

அவனிடமிருந்து புறப்பட்ட சிரிப்புச் சரம் வெட்டவெளி யில் தனித் தனியாய்த் தெறிக்கிறது. என்னையும் தொத் திண்ட சிரிப்பைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கிறேன்.

''வாவா கெட்ட வார்த்தையா பேசறே? ஆத்துலே சொல்றேன். அப்புறம் உன்னோட சேரவே விடமாட்டா.''

''என்னடா கெட்ட வார்த்தை கண்டுட்டே?'' பாசாங்கில் கையை ஓங்கிக்கொண்டு நெருங்கறான். அவங்க அவங்க ஆத்தாகிட்ட அவங்க அவங்க உண்ணலியோ? நீ உன் அம்மாகிட்டே உண்ணாமதான் இம்மா ஆளாயிட்டியா? என் அம்மாகிட்ட நான் எட்டு வயசு வரைக்கும் உண்டேன், தெரியுமா?''

''ஊங்—?'' ஆச்சரியமாயிருந்தது.

"ஆமா, விளையாடிக்கிட்டே யிருப்பேன். நெனப் பெடுத்துக்கும், அம்மாகிட்டே ஓடியாருவேன். அம்மா வேலையாயிருப்பா. எனக்கு அக்கறையில்லே. சரி விடு—" சட்டென்று மாறினான். "ஆமா, இந்த வேளையிலே நாம இங்கே வந்திருக்கக்கூடாது." ஒரு மாதிரியா சுற்று முற்றும், பிறகு என்னையும் பார்த்தான்.

"ஏன்?" நானும் சுற்றுமுற்றும் பார்த்தேன்.

"இப்போ இவங்களுக்குச் சாப்பாட்டு வேளை."

"எவங்களுக்கு?"

சிலைகளைச் சுட்டிக் காண்பித்தான்.

புரியல்லே. விழித்தேன்.

"காத்தான்கள் துன்ன வேணாமா? இவங்களுக்குப் பசியாதா? ஒரு மாதத்துக்கு முன்னாலே ஒரு நாள் மாலை, கோயிலுக்கு விளக்கு வெக்க பூசாரி வந்தால் வாசல்லே, காலையும்கையும் பரப்பிட்டு, ரத்தத்தைக் கக்கிட்டு ஒரு ஆள் செத்துக்கிடக்கான். இதுங்க அடிச்சுப் போட்டிருக்குதுங்க."

"ஐயையோ எனக்குப் பயமாயிருக்குது, நான் மாட்டேம்பா—"

பிச்சுண்டுட்டான். திகிலில் உளறியபடி அவன் பின்னால் ஓடினேன். ஆனால் அவனைப் பிடிக்க முடியுமா? கால் தடுக்கி விழுந்தேன். சத்தம் கேட்டு நின்று, திரும்பி வந்தான், சிரித்த படி தூக்கி விட்டான்.

"என்ன பொட்டையாட்டம் அளுவறியே, சும்மா டமாஸ் பண்ணினா!"

"என்னை ஆத்தில் கொண்டுபோய் விட்டுடு. இனிமே—ஏ—ஏ—உன்னோடு வரவே—ஏ—ஏமாட்டேன் ஊ—ஊ—"

"உஷ் ராமு, கோவம் பண்ணாதே—" கன்னங்களைத் துடைத்தான். "அழுவாதே—சந்தோஷமாயிருக்கத்தானே வந்திருக்கோம். இப்போ உனக்கு ஒண்ணு காமிக்கப் போறேன், ஒரு அதிசயம்—"

வயல்களின் நடுவே ஒரு திட்டில் நாங்கள் இப்போ நின்னுண்டிருந்தோம். புல் திட்டில் ஒரு மரம். மரத்தில் ஒரு பொந்து.

"இதோபார் அதிசயம்—சூ மந்தரக்காளி!" பொந்துள் குனிந்து ஒரு மாதிரியா கொக்கரித்தான்.

என்ன ஆச்சரியம்! பொந்திலிருந்து ஏதோ ஒண்ணு வெளிப்பட்டு அவன்மேல் தாவி ஓடி, விரித்த அவன் கைமேல் இறங்கித் தங்கினது. அணில். அவன் அதன் முதுகைத்தடவத் தடவ, அந்த அன்பில், செல்லத்தில் சுகத்தில் அது பெரிதாவதுபோல் எனக்குத் தோணறது.

"இப்போ என்ன சொல்றே?" என்றான் பெருமையா.

"டேய், டேய் நான் தொடறேண்டா!"

"உன்னைத் தொடவிடாது. அத்தோடு முன்னாலே நன்னா பழகியிருக்கணும். இது எப்படிக் கிடைச்சுது தெரியுமா? இதைப் பாம்பு வவுத்திலேருந்து கிழிச்சு எடுத்தேன். இதை முழுங்கறப்போ நான் பார்த்துட்டேன். உள்ளே உயிரோடு இருந்தது."

இவன் எப்போ நிஜம் சொல்றான், எப்போ பொய் சொல்றான் தெரியாது. ஆனால் இவன் சொல்றதை நான் இப்போ நம்பியாகணும். ஏன்னா, இது இவன் இடம், இவன் வேளை.

"டேய் டேய் ஒரே ஒருதடவை! ஆசையாயிருக்குடா, முருகா முருகா!" குதித்தேன்.

"சரி ஒழி. வாங்காதே. என் கையிலேயே இருக்கட்டும் உஜாராயிரு—"

முதுகைத் தொட்டேன். பட்டாப் பட்டா—வால், ப்ரஷ்மாதிரி—

அவ்வளவுதான். நெருப்பு வெச்ச மாதிரி 'சுறீல்' விரல் நுனியில் ஒரு சின்ன சிவப்புப் பொட்டு. உடனே பூவா பூக்க ஆரம்பிச்சிடுத்து.

"சொன்னாக் கேட்டியா? வாயிலே வெச்சு சப்பு! சப்பு!"

சப்பினேன் உப்புக் கரிக்கறது.

"இதோ பார் என்னைப்பார், இதன் வாயிலேயே விரலை வெக்கறேன் பார்!"

உடனேயே கூச்சல் போட்டு குதித்தான். வாயுள் விரலை வைத்துக்கொண்டான்.

அது அவன் கையிலிருந்து இறங்கி பொந்துக்குள் புகுந்து கொண்டது.

ஐயோ சிரிப்பே! திணறி, புரைக்கேறி—

நன்னா வேணும் என்னை என்ன பாடு படுத்தினான்!

* * *

அண்ணா பள்ளிக்கூடத்திலிருந்து—

வரக்கூட நேரமாயிடுத்து. அவாள்ளாம் விளையாடப் போயிட்டா. ஆனால் அம்மா என்னை மட்டும் இழுத்துப் பிடிச்சி வெச்சிண்டிருக்கா. மயிரைச் சிக்கெடுக்கறா; பிராணன் போறது.

"இது என்னடா, குதிரைக் காசாரியாட்டம் நாளைக்கே ஐயாக்கண்ணை வரச்சொல்லி கரைச்சுக் கொட்டச் சொல்

கிறேன். வைதீஸ்வரா, தையநாயகித்தாயே, மன்னிச்சுக் கோங்கோ. இப்படியே விட்டால் பையன் வீட்டுள்ளே பேனைக் கொண்டுவந்து விட்டுடுவான்போல இருக்கு."

எனக்குத் திடீர்னு ஞாபகம் வந்தது. திரும்ப முயன் றேன், முடியல்லே.

'ஏம்மா எனக்கு அம்பிப் பாப்பா பிறக்கப்போறா னாமே, நிஜமா?'

ஒரு மௌனம். என் பின்னாலிருந்து அம்மா குரல்;

''யார் சொன்னது?''

'முருகன் அம்மா சொன்னாள். என் பம்ரத்தைப் பிளந்துட்டான்னு சிவாவை அடுச்சேன். முருகன் அம்மா, "பெரியவனாயிட்டே, தம்பியை எல்லாம் அடிக்கக்கூடாது. உனக்கு இன்னொரு தம்பிவேறே பொறக்கப் போறான். நீ அடிக்கலாமா'' ன்னாள். நிஜமாவாம்மா?''

''உனக்கு அம்பிப் பாப்பா வேணுமா, அங்கச்சி வேணுமா?''

இதென்ன புதுக் கேள்வி கேட்டு அம்மா மடக்கிட்டா? யோசனை பண்றேன். இப்போ ரெண்டு தம்பி, ஒரு தங்கச்சி. இருக்கா. இன்னும் ஒரு தங்கச்சி—அப்போ கணக்கு சரியாடுமோன்னோ?

''தங்கச்சி பாப்பா.''

''ராமா ராமா ஒண்ணு இருக்கறது போதாதா, நாமிருக் கிற நிலைக்கு உன்னைப் போய்க் கேட்டேனே, அஸ்று ப்ராம்மணா!''

திடீர்னு எனக்கு இன்னொரு சந்தேகம் வந்துடுத்து.

'இது அண்ணாவுக்குத் தெரியுமா?''—என்னம்மா சிரிக்கறே?''

"'கேட்டாலும் கேட்டியே ஒரு கேள்வி!'" மறுபடியும் சிரிக்கிறாள். "'சரி விளையாடப்போ!'"

முதுகில் என்னைச் செல்லமாத்தட்டி செல்லமாத்தள்ளி விடறாள். நின்னு திரும்பிப் பார்த்தால், அம்மா திடீர்னு அப்படி ஒரு அழகாயிருக்கா, எப்டின்னு சொல்லத் தெரியல்லே. மூஞ்சி ஒரே ரோஸ்—சிரிச்சு வேறே யிருக்கா.

'என்ன பாப்பான்னு சொல்லல்லியே!'

"'அதைப்பத்தி இப்போ என்ன? அது அவள் இஷ்டம். இல்லை அவளுக்குக்கூடத் தெரியாது.'"

"'யார் அந்த அவள்?'"

அம்மா பதில் சொல்லல்லே. உள்ளே போயிட்டா.

வாசல் திண்ணையில் வெறிச்சோன்னு நிக்கறேன். கோவமா வரது "'பதில் சொல்றியா இல்லையா?'"

நிறுத்தி வெச்சு நம்மை ஆயிரம் கேள்வி கேப்பா அடிப்பா. ஆனால் நாம் ஒரு கேள்வி கேட்டால், ஹூம் பெரியவாளே இப்படித்தான்

ராச்சாப்பாடு முடிஞ்சு எல்லாரும் வாசல் திண்ணையில் உக்காந்திருக்கோம். இன்னிக்குள்ளேயே, ஏன் என்னிக்குமே எனக்குப் பிடிச்ச நேரம் இதுதான். வேலையெல்லாம் முடிஞ்சு எல்லாரும் ஒண்ணு சேர்ந்து பேசிண்டிருக்கிற நேரம் இதுதான். அண்ணாகிட்டே ஒண்டிக்கிறேன். என் பக்கத்திலே அம்மா. சின்னவள் அவள் மடியிலே தலை வெச்சு எப்பவோ தூங்கியாச்சு. பெரியவன் உக்காந்துண்டு சாமியாடறான். அவனையிழுத்து அம்மா மடியில் தலையை வெச்சுக்கறா. தங்கச்சி தனியா துண்டு விரிச்சு சத்தே எட்டே படுத்திருக்கா. தூங்கிட்டாளா இல்லியா தெரியாது.

இப்போது நான் அப்பா, அம்மா மட்டும்தான். கோவில்லே ஸோமாஸ்கந்தர் மாதிரி. தாத்தா காண்பிச்சிருக்கா. எனக்கு எதுவும் மறக்காது. நான் தூக்கமும் வரமாட்டேன். இந்த நேரத்தை விடுவேனா?

வீட்டுக்கெதிரே ஒரு மரம். அதுலே, மானத்துலேருந்து நக்ஷத்ரங்கள் உதிர்ந்தமாதிரி மின்மினிப் பூச்சிகள் அடை அடையா அப்பிண்டிருக்கும். மானத்துலே அப்படி வாரியிறைச்சுக்கிடக்கு. இதெல்லாம் பட்டணத்தில் கிடைக்குமா? தலையை நிமிர்ந்து வானத்தைப் பார்க்கவே இங்கே வந்து தானே தெரிஞ்சுண்டோம்!

நாளைக்கு அமாசை, ஏன்னா அம்மா இன்னிக்கு இட்டிலிக்கு அரைச்சா.

"ஏண்ணா, நமக்கு ஒரு வருஷம் தேவாளுக்கு ஒரு நாளாமே!"

"தாத்தா சொன்னா, இல்லியா?"

"ஆமாம். அப்போ நாம் இப்போ இங்கே உக்காந்துண்டிருக்கற இந்த நேரம் அவாளுக்கு ஒரு கணக்குக்குக் கூட ஆகாதில்லியா?"

"அதனாலே?"

"அவாமாதிரி நமக்கே இந்த நேரம் இவ்வளவு சுருக்கக் கழிஞ்சுடுமேன்னு வருத்தமாயிருக்கு எனக்கு."

அண்ணா சிரித்தார். "அட நீ சொல்ல வந்ததை இப்படி ஒரு உதாரணத்தோடுதான் சொல்ல வரதாக்கும்!"

"அம்மா! அவன் யாராத்துப் பிள்ளை? தமிழ்ப் பண்டிதர் பேரன் இல்லியா?"

"இல்லேண்ணா, இந்த நக்ஷத்ரங்கள் என்னை இப்பிடி பேச வெக்கறது."

'இருக்கலாம் எப்பவோ...எங்கேயோ...ஒரு ஜப்பானியப் பெண் சொல்லித்தாம் இந்த நக்ஷத்ரங்களைப்பத்தி அவளுக்குத் தோணினதை. ""நக்ஷத்ரங்கள் வானத்தின் சல்லடைக் கண்கள், சுவர்க்கத்தின் ஒளி அவைகளின் வழி வீசறதுன்னு.''

நாக்கில் ஜலம் ஊறின மாதிரி நான் உஸ்னு உள்ளுக்கு இழுத்துண்டேன்.

""அவள் சொன்னது அழகாயிருக்கில்லே?''

""ஆம், அழகை இந்த வயசிலேயே ரஸிக்கத் தெரியறது ஒரு அதிர்ஷ்டம்தான்'' என் தோள்மேல் அண்ணா கை போட்டுக்கொண்டார். அண்ணாகிட்ட எனக்கு ஒண்ணு ரொம்பப் புடிச்ச விஷயம் என்ன தெரியுமா? சின்னப் பையனா நடத்தமாட்டார். சரி சமமாவே பேசுவார்.

இருவரும் நக்ஷத்ரங்களைப் பார்த்தபடி, சற்றுநேரம் மெளனம்,

""ஆனால் ஒண்ணு ராம்! இத்தனை நக்ஷத்ரங்கள் எண்ண முடியாமல் இரைஞ்சு கிடக்கு. ஆனால் இதில் இருபத்தேழுக்குத்தான் பேர் உண்டு. இந்த இருபத்திஏழின் ஆட்சிக்குள்ளேதான் உலகத்தின் அத்தனை மனுஷாளும் பிறக்கறா, வாழறா, சாகறாளாம்.''

அதெப்படி? அப்படியிருக்க முடியுமா அண்ணா?''
""என்னத்தைக் கண்டோம்? பெரியவா, ரிஷிகள் காலத்திலிருந்து சொல்றா, கேட்டுக்கறோம்.''

மறுபடியும் மெளனம். எனக்கு மனசு என்னவோ அலையறது சமாதானமாகல்லே.

""எனக்கு ஒண்ணு தோணறது''ன்னேன்.

""எஸ்?''

"இந்த உலகத்தின் ஒவ்வொரு உயிருக்கும், இந்த நக்ஷத்ரங்கள் ஒண்ணொண்ணு மேனிக்குத்தான். பேர் இருந்தால் என்ன, இல்லாட்டா என்ன?"

"பலே! பலே!" அண்ணா என் முதுகைத் தட்டினார். "இப்படியெல்லாம் சிலபேருக்குத்தான் வரும்போல் இருக்கு—பட் ஒன் திங்."

காத்திருக்கிறேன்.

அவர் குரல் முன்னிலும் தாழ்ந்து ஆனால் ஏதோ அழுத்தமா, "ஒரு நாள் எல்லாருக்குமே தெரிய, இந்தப் பேரில்லாக் கூட்டத்திலிருந்து ஒரு நக்ஷத்ரம் பிரிஞ்சு "ராம்" ங்கிற பேரிலே, பேர் கொண்ட நக்ஷத்ரங்களுடன் சேர்ந்து..."

அப்படிச் சொன்னதுமே என் மாருள் ஒரு பொறி ஏத்திண்டமாதிரி உடம்பு பரபரத்தது. நாளுக்கு நாள் இந்தப் பொறி பெரிசாகி நக்ஷத்ரமாக என்கிட்டேருந்து பறந்து மேலே போய்—ஏன் துருவன் கதையைத் தாத்தா சொல்லலியா? என் உடலிலிருந்து இப்பவே நான் தாவிடுவேன் போல...ஒரே தவிப்பு. என் கைகளை முஷ்டியாக்கிக் கொண்டு என்னை என்னோடு இறுகப் பிடிச்சுண்டேன்.

அம்மா அதுக்குள், "இதென்ன குழந்தை மனசுக்குள் வயசுக்கு மீறி என்னென்னவோ புகுத்திண்டு? எங்கேனும் மனுஷாளோடு மனுஷனா தானும் வாழ்ந்து குடித்தனம் நடத்திண்டு சௌக்யமா ஆயுசோடு இருந்தால் அதுவே போதும். ஆகாசத்திலிருந்து நக்ஷத்ரங்களைக் கயிறு திரிக்க வேண்டாம்—"

"அட ஆகாட்டாப் போறது, ஆசைகூடப் படக் கூடாதா? மந்தையோடு மந்தையாக இருக்கக்கூடாது. அம்மாப் பெண்ணே. பேரை இங்கே வந்ததுக்கு அடையாளம்

பொறிச்சுட்டுப் போகணும். நான்தான் இந்த வயசிலேயே நோயாளியா எதுக்கும் உதவாமல் ஆயிட்டேன். நான் செய்ய முடியாததை என் பிள்ளை செய்யணும்—இது என் ஆசை. அவன் ஆசை எப்படியோ, போகப் போக எப்படி அமையுமோ, அவன் நக்ஷத்ரம் அவனுக்கு எப்படி வழி காட்றதோ, யார் கண்டது? இப்போ என் ஆசையைத்தான் வெளிப்படுத்திக்கிறேன்!"

"பனி விழுந்துட்டாப்போல இருக்கே!" அம்மா சிலிர்த்துக் கொண்டாள். "உங்களுக்கு இனிமேல் வெளியில் இருந்தால் ஆகாது. நேரமும் ஆச்சு."

"என் நிலைமையை எனக்கு ஞாபகப்படுத்துகிறாய்." அண்ணா பெருமூச்செறிந்து எழுந்திருக்கிறார்.

"உங்கள் நன்மைக்குத்தான்—"

"வாஸ்தவம். நான் இருப்பதே உன் பலத்தில்தானே. நீ இல்லாவிட்டால் நான் எப்பவோ—"

அம்மா சட்டென இடைமறித்தாள். 'சரி, எனக்காகவும் சேர்த்துத்தான் சொல்றேன், வெச்சுக்கோங்களேன்!"

பேச்சு புது பாஷையா மாறி எங்கேயோ போயிடுத்து இல்லே எங்கிருந்தோ வரதா?

நக்ஷத்ரங்களிலிருந்தா?

இதான் இவாகிட்ட ட்ரபிள்.

* * *

இங்கே, ராத்திரியை அதற்குத் தனி தேவதையே இருப்பதாகப் பேசலாம்.

வீடு என்னவோ படாசயிருக்கே ஒழிய, அதில் பாதிக்கு மேலே ஆகாசத்தைப் பார்த்த நடுமுற்றம்; சுற்றித் தாழ்வாரம். அதில் ஒரு தாழ்வாரத்தில, குட்டைச் சுவர் எழுப்பி அதுதான் சமையல் மறைவு. உருப்படியா ஒரு ரூம் தான். அதில்தான் இப்ப அடையறோம். அடைஞ்சால் என்ன? இந்தக் குமையற சுகமே தனி. கண்ணில் இந்தக் கும்மிருட்டில் ஏன்னதான் நடக்கறது பார்க்கணும்னு கண்ணைத் திறந்து வெச்சுக்கப் பார்க்கறேன் முடியல்லே. ராத்தேவன் விரல்கள் மெத்தென என் இமைகளைப் பொத்தறது. அவனுடைய கம்பளிக்குள்தான் நாங்கள் எல்லாருமே அடங்கியிருக்கோம்.

கம கம—

கத கத—

சுக சுக—

# 14. எனக்காக

பாபு, நான் மறக்கவில்லை. நேரம்தான் கூட. ஆனால் குற்றம் சொல்லிப் பயனில்லை. ஆறாக ஓடினாலும், அள்ளும் போது, அள்ளும்வரைதான் அள்ள முடியும். அண்டாவில் மொண்டு வைத்துக்கொள்ள முடியாது. இங்கு கைதான் பாத்திரம். நீ கேட்டது அப்படி விஷயம்.

உனக்காகவே நீ கேட்டாலும், முன்னால் என்னில் ஊறாமல், உனக்கு எப்படிப் பங்காகும்? ஆகவே அது எனக்கும்தான் என்பது இன்றியமையாதது.

வெய்யில் உச்சிக்கு ஏறிவிட்டது. ஆனால் உள்ளங் காலில் சூடு ஏறவில்லை திரும்பி இரண்டு மாதங்களாகியும், வால்பாறைக் குளிர் என்னை முற்றிலும் விட்டபாடில்லை. எப்படியோ ஒரு கழைக்கோடி பனி உள் இறங்கி உள் ஊற்றம் கண்டுவிட்டது!

சாய்வு நாற்காலியை இழுத்து வந்து வெளியே போட்டு உட்கார்ந்து, மேடைமீது காலையும் நீட்டிவிட்டேன்.

வீட்டைச் சுற்றி முள்வேலி. உள், புழங்கத் தாராளமான இடம். சிமிட்டி மேடை வேறு (நடுவில் பாளம் வெடித்து). கிராதி gate இன் இருமருங்கிலும் கட்டிய தூண்களைத் தம்

இஷ்டத்துக்கு முறித்துக்கொண்டு, இன்னும் வளர்ந்து கொண்டிருக்கும் பூவரசு; மறுபக்கம் ஒதிய மரம். இலைகள் உதிர்ந்து, பூமியில் ஜமக்காளத்தைப் பரப்பியிருக்கின்றன. பெருக்கி மாளவில்லை. இலைகளில் சில சமயம் சலசலப்பு, எது வேணுமானாலும் இருக்காலம்.

ஜயமுள்ளவரை பயமில்லை.

மேஸ்திரி இந்தத் தடவை சொல்லிவிட்டான். ""மரங் களை அடியோடு வெட்டாட்டி, வீட்டு அஸ்திவாரம் 'தக்க டாப் புக்கடா'த்தான். அடியிலே வேர், அப்பிடி முறுக்கிட்டு ஓடுது.""

மனதைத் திடப்படுத்திக் கொண்டேயிருக்கிறேன்.

இலைகள் உதிர்ந்து கொண்டேயிருக்கின்றன.

உள்ளே கூடத்தில் உறங்குகிறார்கள் சுகவாசிகள்.

""நீங்கள் ஊருக்குத் திரும்பினதும் எனக்கு எழுத வேண்டும். என்ன எழுதுவீங்களோ, ஆனால் அது எனக்கு. எனக்கே, எனக்காகவே இருக்க வேண்டும்.""

ஆம், நீ என்னிடம் என்ன எதிர்பார்க்கிறாய்? ஒரு எழுத்தாளனிடமிருந்து கடிதம். பொத்தி வைத்துக்கொள்ள? அல்லது நாலுபேரிடம் பெருமையாய்க் காண்பிக்க? அல்லது ஒரு முதியோனின் புத்திமதி, உபதேசம், மந்த்ரம்?

ஆனால் நீ கேட்டபோது, உன் புருவங்களின் நெரிசலில், நான் கண்ட வலி, கண்களில் ஏக்கம் அப்படியெல்லாம் நீ எதிர்பார்க்கவில்லை, எதிர்பார்க்கமாட்டாய்.

உள்ளங்காலில், படிப்படியாக சூடு பிடிக்கிறது. அடுத்து உடல் பூரா, வெய்யிலின் இதமான வெதவெதப்பு. இமைகளைச் சுகம் அழுத்துகிறது. தூக்கம் அன்று.

""எனக்கே—""

சிந்திக்கச் சிந்திக்க, சீண்டல் கூடக்கூட, மூடு சூளையில் சுவாரஸ்யமான சாத்தியங்கள் விரிய விரிய......

மடக்கு விசிறியை விசுக்கெனத் திறந்து வெளிப்படும் வர்ண ஜாலங்கள்.

இந்த வெய்யிலில் உரம் இல்லை. அதன் ஒத்தடத்தில் பொல பொல புலுபுலு நலுநலு இமைத் திரையில் மஞ்சள் கலந்த செந்திட்டு

சே! ஒரு இழை நரம்பு பிசகினாலும் உடலுக்கு இத்தனை பாடா? எதுவும் கோணாமலிருந்தால், அதுவே ஒரு சுகம். வெட்கப்! வெட்கம்! கூடவே ஒரு பெருமிதம். மகிழ்வு. என்ன? ஏன்??

மேலே வெள்ளையானைகள் மேய்கின்றன.

ஓ _ங்கள் தவழ்கின்றன.

பாறைகள் சரிகின்றன

வெகு நாட்களுக்கு முன்னர்—நீ பிறக்கவில்லை. மியூசியம் தியேட்டரில் ஒரு symphony கேட்டேன். லண்டனி லிருந்து Orchestra

ஸ்ருதி கூட்டியாகிறது. இருபது வயலின்; ஜாலர்கள் triangle (டிங்! டிங்! டிங்! ட்ரிங்க்! ட்ரிங்! ட்ரிலிங்!!!) Cellos drums, flutes, viola, trambounes, piano, இன்னும் ஏதேதோ பேர் தெரியாது. நூறு? எண்ணியா பார்த்தேன்?

நான் அங்கிருந்தவரை' உனக்கும், இன்னும் என்னைப் பார்க்க வந்தவர்களுக்கும் வேணது என்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறேன். பேருக்குத்தான் சம்பாஷணை. ஆனால் One way traffic. நான் படமெடுத்து ஆடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். தப்பில்லை. எனக்கும் என் புள்ளி களைக் காட்டச் சந்தோஷம்தான். ஆனால் அதற்குமேலும் என்னைப்பற்றித் தெரிந்துகொள்ள என்ன இருக்க முடியும்?

But...

இந்த ஆனால் இருக்கிறதே, அது படுத்தும் பாடுதான் எல்லாமே. உந்துகோலே அதுதான்.

என்னவோ நிகழப்போகிறது. என்ன அது? என் உடல் நரம்புகளில் உணர்கிறேன். நிகழப்போவதில் என் பங்கிற்கு என்னைத் தயாரில் ஸ்ருதி கூட்டியாகிறது. உணர்கிறேன். உடலின் லேசான பரபரப்பு.

Conductor தன் மேடைமீது நிற்கிறார். பேட்டனைத் தட்டினதும் கப்சிப். ஊசி இடறினால் கேட்கும். கைகளை உயரத் தூக்கி வீசுகிறார். அந்த விரல் நுனிகளிலிருந்து கண்ணுக்கு அகப்படா மின்னல்கள் புறப்பட்டு வாத்யங்களைத் தாக்கினதும், அவை முழங்குகின்றன. Symphony இன் பின்னல்கள் தனித்தனி அததற்குரிய வாத்யத்தின் மீது படர்கின்றன.

முதி இரவில், கட்டுமரத்தில், நடுக்கடலில் மீனவன், பிரம்மாண்டமான வலையைத் தவழும் அலைமீது, தோகையாக விசிறி எறிகிறான்.

புள்ளிக் கோலம் ஒன்றை அப்படியே பூமியிலிருந்து பெயர்த்து ஆகாசத்தில் எறிந்தாற்போல், மேகங்களில் ஒரு பட்சிக் கூட்டம்.

பூமிமேல் விரித்த ஜமக்காளமாக உதிர்ந்த இலைகள் சலசல கிலுகிலு.

அடுப்பங்கரையில் ஏதோ ஏனம் உருள்கிறது.

எங்கோ துவைக்கும் கல்மேல் துணி அறையும் சத்தம்.

'கீச்! கீச்!! கீச்!!! மீனாட்சி.

பாபு, நாம் எல்லோரும் விதிக்கப்பட்டவர்கள். விதிக்கும் கடவுளுக்கும் சம்பந்தம் உண்டோ? அறியேன்.

என் ஜன்னலுக்கெதிரே பாரியாக வளர்ந்துவிட்ட செடியில் எட்டாத உயரத்தில் செம்பருத்திப் பூக்கள் சிரிக்கின்றன. இதழ்கள் விரிந்து, குங்குமம் பிழம்பில் தோய்ந்து, அபயத்தில் அவள் ஹஸ்தம். இன்று வெள்ளிக் கிழமை. இன்றைக்கு அவளுக்குப் பதினாறு கைகள். இல்லை பதினாயிரம். எண்ண முடியுமா என்ன?

நீலமே பிரம்மாண்டமான புடவை. காய்வதற்காக இழுத்துக் கட்டி, காற்றில் சப்தமில்லாமல் பட பட......

நீ கேட்டாய், நானும் ஒப்புக்கொண்டுவிட்டேன். ஆனால் என்ன எழுதப்போகிறேன் அப்போத் தெரியாது. ஆனால் நான் கவலைப்படவில்லை. எழுதிவிடுவேன் அது மட்டும் தெரியும். உன் வேண்டுகோள் ஒரு சாக்காக வெளிப் படக் காத்திருக்கும் இவ்விஷயமும் ஏற்கனவே விதிக்கப் பட்டது. இதே தர்க்கரீதியில் உன் வேண்டுகோளும் விதிக்கப் பட்டதே. இல்லையேல் நீ கேட்டிருக்க வழியில்லை.

அதோ மேட்டுவளைவில் ரயில் விரைகிறது. ராக்ஷஸ மர வட்டை. கண்ணைத் திறவாமலே கண்ணுள் பார்க்கிறேன்.

மொட்டை மாடியில் ஆன்டனா.

ஆரம்பித்துவிட்டேனே, முடிப்பேனா என்று நான் கவலைப்பட்டதேயில்லை. ஒரு தடவை, ஒரு கதை கருவூன்றி, அதன் முழுமையில் என்னின்று புறப்பாடுக்கு எட்டு வருடங்கள் பிடித்தன. இங்கு அதைச் சொல்வது பொருந்தும்.

மதியத்துக்கு கலையப் பள்ளி மணி கணகணகண...

"அம்மா!" பசு. நெஞ்சைப் பிழிகிறது.

"வீணா மதுர மதுர முரளி" நினைவு அலையின் பழைய ஒலி. வேளையா, பொழுதா?

அது அது அதனதன் வேளையில் வெளிப்பட்டே ஆக வேண்டும்.

ஆனால் கள்ளத்தனம் இல்லாததேயில்லை.

கடவுள்தான் கள்ளனுக்கும் கள்ளன்.

எனவே காத்திரு. முது இரவில், நடுக்கடலில் நட்சத்திரங்களின் மினுமினு ஒளியில் நீ விரித்த வலையில் அவன் மாட்டிக்கொள்ள.

ஆமா, அவன் என்று ஒன்று தனியாகயிருக்கிறானா என்ன? அப்படியிருந்தபடி, அத்தனை தேஹிக்கும் வினியோகம் ஒண்டியாக முடியுமா? ஆனால் அவன் அன்றி ஓரணுவும் அசையாது. தூணிலும் இருப்பான் துரும்பிலுமிருப்பான். எல்லாம் தெரிந்தவன் எங்கும் நிறைந்தவன். எல்லாம் முடிந்தவன். ஆனால் அவரவர் விதிப்படி பூர்வ ஜன்மா, பிராரப்தம், சஞ்சிதம்...கர்மா theory...

அவன் கிடக்கிறான். என்னைப் புரிந்துகொள்ளத்தான் எனக்கு என் பிறவி. ஒரு நுனியைப் பிடித்து இழுத்தால் அத்தனை முடிச்சுக்களும் அவிழ்ந்து கொள்வதுபோல், என்னை நான் புரிந்துகொண்டால், அவனும் புரிபடுவான்.

புரியாவிட்டால் போகட்டும்.

"ட்வீக்! ட்வீக்! ட்வீக்!" இரண்டு அணில்கள் மரத்தில் ஒன்றையொன்று துரத்துகின்றன. ஒன்று, ஒரு கிளையிலிருந்து மேல் கிளைக்கு ஒரு பெரிய தாவல்—அப்பா! tremendous. அதன் ஸாஹஸத்தில், அத்துடன் என் நெஞ்சும் தாவி அதன் குழியில் விழுகிறது. ஒரு இழை தப்பினால் அதன் கதி என்ன?

(என் கதி என்ன)

"கிணி கிணி கிணி கிணி!"—சைக்கிள் மணி அலறல்.

எண்ணத்தின் உச்சரிப்பு மொழி. உன்னோடு என் உள்ள எழுச்சிகளைப் பங்கிட்டுக்கொள்ள மொழி.

மண்டை உச்சியில், அசையாத சிறகு விரிப்பில், பருந்து குடை நீந்துகிறது.

கிளைகளில் மலர்களும் இலைகளும் கிசு கிசு. கிணற்றடியில் தென்னையில் குலைகுலையாக முலைகள்.

தொலை தூரத்தில், நாயின் தனித் தனிமையின் குரைப்பு.

தெருவில் புழுதி எழுப்பிக்கொண்டு ஒரு கார் பறக்கிறது.

இத்தனையும் சேர்த்து வாங்கின ஒரு பெருமூச்சு. அதன் விசனத்திலும் அசதியிலும் மிரண்டுபோகிறேன். எங்கிருந்து வந்தது? மரங்களிலிருந்தா? காற்றா? பூமியா?

அல்ல நானேதானா? நான் என்கையில் இது வெறும் என் தனி உயிர் அல்ல.

"நான்" என்னும் இந்த ப்ரக்ஞையின் பெருமூச்சு. ஆகாசம் வரை வியாபித்த கணத்தின் அசதி.

நேரம், தூரம் தாண்டி, எங்கிருந்தாலும் உன்னைத் தொட, மொழியின் உருவாம் எழுத்து.

இந்த பூமி, ஆகாசம், காற்று இவைக்குமேலும் இன்னும் ஏதேதோவையையும், உன்னையும், என்னையும் எல்லாவற்றையும் அதற்குமேலும், நினைக்க முடிந்தது. முடியாததையும் கவ்விக்கொண்டு எங்கும் நிறைந்ததாய் — மோனம்.

Absolute. கேள்வியுமில்லை, பதிலுமில்லை, அர்த்தமுமில்லை. ஒலிகள், ஓசைகள், அசைவுகள், கனங்கள், நயங்கள் தன்னுள் வாங்கிக்கொண்ட Absolute கர்ப்பம்.

மோனா கானா—

விளிம்பு நிலை.

இது ஒரு தருணம்.

தருணங்கள் ஸதா நம்மைச் சுற்றி நீந்திக் கொண்டிருக்கின்றன. அதை வேண்டிப் போனால் பிடிபடாது. ஆனால், தானாகவே, பின்னால் வந்து, தோளைத் தொட்டு அது தாங்கி வந்த சேதி மோதி, பூரித்து, பட்டவனையும் பூரித்து விடும் தருணம்.

அதன் சேதிதான் என்ன? அது சொல்லில் அடங்காத சேதி. அது விக்ரமாதித்தன் கதை.

தந்தப் பெட்டிக்குள்
வெள்ளிப் பேழைக்குள்
தங்கச் சம்புடத்துள்
ரத்னச் சிமிழுக்குள்
ஸ்படிகக் குமிழியுள்
துளி
விஷம்.

இது பாம்பின் மண்டையுள் மாணிக்கம் கட்டின கெட்டிப்பட்ட விஷத்திலும் கொடிது. பாற்கடலில் தோன்றி சிவன் விழுங்கிய விஷத்திலிருந்து ஒரு பனியிலும் பாதியிலும் பாதி அதன் நுண்ணியம் காண்பதற்கு இல்லை. ஆனால் காற்றுப் பட்டாலே, அமரத்வம், நித்யத்வத்தின் தனிமை, இத்தனையும் தந்து இவைகளால் பயன் என்னும் உணர்வையும் தந்து சிவமாக்கிவிடும். அமுதினும் கொடிய சேதி. சிவமான பின் அழுவதா? சிரிப்பதா? கொட்டிக் கொட்டிக் குளவியாகி...குளவி கொம்பேரி மூக்கனாகி...

விடமுண்டு எஞ்சினவனுக்கு அமிர்தத்தால் ஆக வேண்டியது என்ன?

சரி விடு விடு, அத்தனையும் யூகம்.

ஆனால் இன்றைய யூகம் நாளைய தரிசனம், நிதர்சனம்.

'அத்தனையும் பித்து.' இந்தத் தருணம்தான் என்ன?

தருணம் ஒரு தரிசனம். ஒவ்வொரு தரிசனமும் ஒரு பூரிப்பு; சாவு; புது ஜன்மா, சட்டையுரிப்பு.

இதெல்லாம் என்ன பிதற்றல்? புரிந்தால் புரிந்துகொள். புரியாட்டி—போ.

இந்தத் தொடல் அவசியம்தானா? இல்லாமல் இருக்க முடியாதா? Involvement இன்னும் எதற்கு? போதுமடா போதும் தொடலின் விளைவுகள்.

உறவே தொடல்தானே! பூமியில் விழுந்ததுமே, குழவியின் முதல் கூவல் உறவின் கூவல்தானே! அங்கிருந்தே தொடலின் ஆதிக்கம் தொடங்கியாச்சு. தொட்டால்தான் தொடலா?

எனக்கு என்னாலே உறவுதான்.

உறவு தப்ப முடியாதது.

அன்றொரு நாள், தெருவில் போய்க்கொண்டிருக்கையில், காற்றில் அலைந்து வந்து ஒரு காயிதம் காலைச் சுற்றிக்கொண்டது. குனிந்து எடுத்துப் பார்த்தால்—பாலாஜி.

ஆமாம், புது வருடம் புதுக் காலண்டர்கள் வர ஆரம்பித்துவிட்டன. சினிமா ஸ்டார்களுக்கெதிரே பெருமாள் எங்கே எடுபடுவார்? வெய்யிலில் காய்ந்து, மழையில் நனைந்து, சோகை பிடித்திருந்தார்.

கீழே போட்டுவிட்டுப் பத்தடி நடந்தேன். ஊஹூம் நடை தடுத்துவிட்டது. கண்ணாடி போட முடியாது, அவர்கள் கேட்கும் விலைக்கு, இருந்தாலும்—

திரும்பிச் சென்று எடுத்துக் கையால் இரண்டு தட்டுத் தட்டிவிட்டு பிடித்துப் பையில் சொருகிக்கொண்டேன். முகத்தையே அடைக்கும் நாமம்.

வழியில் கண்பட்ட இந்தப் படத்தை உதற முடியவில்லை 'உறவைத் துற' என்று போதிக்க வாய் எங்கே இருக்கிறது?

உறவைத் தப்பமுடியாதென்கையில் அத்துடன் இன்றியமையாத விளைவு துரோகங்களையும் சேர்த்துத்தான்.

உறவை மறந்தாலும் துரோகத்தை மறக்கமுடியாது.

துரோகம் உறவினும் பெரிய உறவு.

பயம், பக்தி, மூட நம்பிக்கை, நம்பிக்கை, பகுத்தறிவு, Images, Imageries, Beauty, Worship, Philosophy, Science, நீ, நான், நீ, நான், எனக்கு... எண்ணமெனும் வித்தில் பிறந்து வளர்ந்து பாரம்பர்ய விருக்ஷம், அதன் கிளைகளும், விழுதுகளும், வேரும், நிழலும் ஓடாத இடத்தை எனக்குக் காண்பி.

அடி, முடி, காணமுடியாதது என்பது இதுதானோ?

முள் வேலிக்கு அப்பால், முட்களின் அடர்த்தியின் இடுக்குகள் வழி, யாரோ தெருவில் நடந்து செல்வது தெரிகிறது. சந்துக்களின் வழி ஒளிச் சிதர்களில் அந்த வடு பன்முகப்படுவது போல் ஒரு பிரமை. வேலி தாண்டி கிராதி கேட்டை அடைந்ததும் அங்கு பாய்ந்த ஒளி வெள்ளத்தில் அப் பன்முகங்கள் ஒன்றுகூடி ஒருமுகமான அது—யார்? கண்ணைக் கசக்கிக்கொண்டு சாய்வு நாற்காலியின் குழுவி லிருந்து என்னைத் திரட்டிக்கொண்டு எழுவதற்குள், திருப்பத்தில் மறைந்துவிட்டது.

சிவப்புப் புடவை பளபள. அழுந்த வாரி இழுத்துப் போட்ட கொண்டை.

இந்தத் தருணத்தின் தேவதை?

தருணி.

அவள் இல்லாத இடமே இல்லை. ஆனால் அவள் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் விதமும் வேளையும் அவளுடையது.

எங்கும் நிறைந்த பேருயிரில் உறையும் அவள், குளிர நினைக்கும் அந்த அருள் சமயத்தில், தருணத்தில்,

ஆழ்ந்த சிந்தனையிலோ,

நீண்ட பெருமூச்சிலோ,

நெஞ்சின் தழுதழுப்பிலோ

நீ படித்துக்கொண்டிருக்கையில்

வரிகளின் நடுவே, தொக்கி உன்னைத் தடுத்து நிறுத்தும் மௌனத்திலோ,

கன்னத்தில் துளித்த கண் முத்திலோ

கனம் தழைந்த புன்னகையிலோ

அவள்தான் அப்படித் தோன்றித் தெரிந்து உடனே மறைகிறாள்.

ஆயுசைத் தூக்கி உடைப்பில் போடு.

தருணங்களுக்கு வாழ்.

யந்திரம் போன்ற வயதைக் காட்டிலும் தருணங்களின் சட்டையுரிப்பு. விட்டில் பூச்சியாக ஒரு சமயம்.

தருணத்தின் எரிப்பில் அத்துடன் ஐக்கியமாவது எப்படி?

அவள் கண் உன்மேல் விழக் காத்திருப்பதேதான் பிறவியின் கனவே.

நேற்று இரவு யாரோ தட்டி எழுப்பினாற்போல். வெடுக்கென விழித்துக்கொண்டேன். யாரது? யாருமில்லை. ஜன்னலுக்கு வெளியே வெள்ளி முளைத்திருந்தது. ஆனால் விடிவு என்னுள் அதுதான் எழுப்பியிருக்கிறது.

It is the spirit alone matters

ஸ்பிரிட் என்கையில் ஆவி அன்று

என்னிலும் உயர்ந்த தடமே நோக்காய், குறியாய், அதை நோக்கி என்னை உந்தும் உள்சக்தி, ஊக்கம்,

The instinct for noble aspirations.

"எழு, எழு, உன் சிறகுகளை விரி
பற, பற மேனோக்கி
பறந்து கொண்டேயிரு"

spirit வேறு ஆத்மா வேறு.

The Spirit is the individual. The Spirit is innocent, naked and restless in the purity of its innocence

அது பின்னோக்கே அறியாது. "மேலே மேலே! முன்னேறு, முன்னேறிக்கொண்டேயிரு. எது எப்படியிருந் தாலும் சரி, நீயே எப்படியிருந்தாலும் சரி—முன்னேறு."

மனிதனில் மற்ற அம்சங்கள் எல்லாம் சமுதாயம் எனும் மந்தையைச் சேர்ந்தவை. மந்தை நிலைக்க அதன் சூது, வாது, கபடு, பயங்கள், பத்ரங்கள், கறைகளுடன்.

The Spirit is the Dreamer.

"உன் கனவை நோக்கி முன்னேறு!"

பாபு, உன் கனவை நான் காண முடியாது

அவரவர் கனவு அவரவருடையது.

The Spirit is the Passion

நீ 'எனக்கே' என்றது சரியே. உன்னை அறியாமலே, அது உன் 'கனவுக்காக'

கனவு? ஆம் வானம் உனக்கு விடு தூது.

மொழி, சொல், தருணம், Passion, கனவு, தரிசனம்,

—இன்னும் அவரவர் பூத்ததுக்குத் தக்கபடி

—அத்தனையும் தருணிக்கு அர்ச்சனை

எத்தனை உன்னைத் தந்தாலும் அவள் வாங்கிக்கொள் வாள். அப்பவும் நீ மிஞ்சுகிறாய்—அவளுக்கு ஆச்சர்யமா யில்லை?

தருண நிலையில் இன்று, நேற்று, நாளை, எல்லாம் ஒன்றாகிப் பிழம்பாகி...

The River of Life Flows on

கடிவேகத்தில் ஒரு வெள்ளையும் கறுப்பும் கலந்த பந்து என்மேல் மோதுகிறது.

"சனியன்! இதுக்கே தினம் ஆழாக்குப் பால் வேண்டி யிருக்கு, என்னைக் கேட்காமலே இதுக்கு ஊத்திட்டு எல்லாரும் மோர் தண்ணியாயிருக்குன்னு கத்தினால் நான் எங்கே போவேன்! விஷமம் தாங்கல்லே! காலை நக்கி நக்கி வேண்டியே இல்லை. எல்லாம் உங்கப்பா கொடுக்கற செல்லம்! ஒரு நாள் அவர் சாப்பிடறப்போ இலையில் வாய் வெக்கறப்போன்னா தெரியப்போறது. இது இல்லேன்னு யார் அழுதா? எங்கானும் கொண்டுபோய் விட்டுடுங்கடா! தெவசம் வேறே வரப்போறது!"

அது இன்னும் என்னை நக்கி ஓய்ந்தபாடில்லை. அதெப்படி அதன் வால், தூக்கத்தில்கூட ஓயாமல் ஆடிக் கொண்டிருக்கிறது!

இதை நான் வேண்டி அழைக்கவில்லை. இருபது நாட்களுக்கு முன் விடிகாலையில் இதே மேடைக்கு அடியில் குளிரில் வெடவெடத்துக்கொண்டு 'வ்ராட்! வ்ராட்' என்று கத்தல் தாங்கமுடியல்லே. தவப்பிஞ்சு. அதன் தாயே விட்டு விட்டுப் போயிருக்கிறது. உன்னோடு பெத்த நாலோடு நீ அதிகப்படி. என்னால் சமாளிக்க முடியல்லே. சாவாயோ, பிழைப்பாயோ உன்பாடு.

அதுதான் Jungle Law

ஸ்ரீகாந்த் பாலைக் கொட்டாங்கச்சியில் ஊற்றி அதன் எதிரில் வைத்ததுமே அது குடித்த அவசரமே எங்கள் அனைவருக்கும் ஒரு காக்ஷி. அப்படி ஆரம்பித்ததுதான் இந்த

உறவு. இவ்வளவு சுருக்கில் எவ்வளவு குண்டாகிவிட்டது! மதமதப்பில், ஓடி உருண்டு விழுந்து எழுந்து ஓயாத சுறுசுறுப்பில் அது வளைய வந்தது. ஒளிக்கதிரின் விளையாட்டுப் போல்...பின்பாகத்தைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு ஒரு பக்கமாகச் சாய்த்து அது ஓடுகையில் சிரிப்பு வருகிறது. என் நெஞ்சில் ஒரு அமைதி இறங்குகிறது. இந்த வீட்டில் குழந்தை விளையாடி வருடங்கள் பல பல ஆகிவிட்டன. எங்கள் பிரியத்தை நாங்கள் அதன்மேல் கொட்டவில்லை. ஆனால் அதன் பிரியத்தைக் காட்டுவதில் அது சிக்கனமாயில்லை.

இதோ, என் காலை நக்கிவிட்டு, முன்னங்கால்களை என்மேல் வைத்து என் முகத்தை எட்டப் பார்க்கிறது. வேட்டி அழுக்காகிறது. இதற்கு ஓரளவு கால் முளைத்தவுடன் எங்கேயாவது தள்ளிவிட வேண்டியதுதான். பின்னால் இதனால் சிக்கல்கள் காத்திருக்கின்றன. No involvement for me.

தாய்கூட அவ்வப்போது வந்து போகிறது. அதன் வயிற்றுக் காம்புகளில் ஒன்றை இது கடித்துத் தொங்கியபடி குட்டியை இழுத்துக்கொண்டு தாய் கொஞ்சதூரம் ஓடி வெடுக்கென்று தன்னை விடுவித்துக்கொண்டு ஓடிவிடும். இது மறுபடியும் தன் விளையாட்டில் இறங்கிவிடும்.

அதை வயிற்றில் தூக்கிப் பிடிக்கிறேன். எங்கள் கண்கள் சந்திக்கின்றன. வெள்ளை உடலில், கழுத்திலிருந்து ஓடி முகம் முழுக்க வியாபித்த கறுப்பிலும் கறுப்பாய்ப் பதித்த பெரிய ஜபமணிகள் போன்ற விழிகளில் பொழியும் கனிவு—அந்த விழிகளில் ஏதேதோ பார்க்கிறேன். கடல்—நதிமூலம்—ஜீவநதியின் மூலம்— வசனகவிதை ஏன் இத்தனை சின்னப் பிராணியுள் இத்தனை பெரிய அன்பைத் திணித்து அதை

தாங்கமுடியாமல் தவிப்பதில் என்ன களிப்பு உனக்கு? நாயின் கண்களைக் காட்டிலும் அழகிய கண்கள், நான் அறிந்தவரை இனிமேல்தான் காணவேண்டும்.

"நான் ஏன் பிறந்தேன்?

பிறந்தால் என்ன. வாழத்தான் பிறப்பு

நான் உனக்காக

எனக்காக நீ

இதற்குமேல் நமக்கு என்ன வேண்டும்? என்கிறதா!

"உனக்கும் எனக்கும் உறவு இன்றா நேற்றா? இன்று. நேற்று. நாளையேது? உனக்குத் தெரியவில்லை என்றால் என் கண்ணைப் பார்!"

கீழே அதை விடுகிறேன். ஏதோ புது விளையாட்டு அதற்குத் தோன்றி அதன் பின்னால் ஓடுகிறது.

என்னை அறியாமல் பெருமூச்செறிகிறேன்.

இந்த வயதில் நான் என் அம்மா இல்லையே என்று ஆசைப்பட்டாலும், அஸிகைப்பட்டாலும், விசனப்பட்டாலும் அது நியாயமா?

மூன்று நாட்களாக அதைக் காணோம் புரியவில்லை.

"என்னடா ஸ்ரீகாந்த்? உன் ஸ்வீகாரம் எங்கே?"

"யார் கண்டது? அதுக்கே கால் முளைச்சுப்போச்சு. தாயோடு எங்கானும் போயிருக்கும். யாரானும் பிடிச்சுண்டு போயிருப்பான்!"

"அவன் என்னடா பண்ணுவான்?"

"என்ன பண்ணுவான்? வளர்ப்பான்."

என் கேள்வியின் அசடு எனக்குத் தெரியவில்லை. நெஞ்சில் கசண்டு. சரி யார் என்ன பண்ணமுடியும்? அதற்குக் கால் முளைத்துவிட்டால் அதுவும் நியாயம்தானே. எங்கேயாகிலும் சௌக்யமாயிருந்தால் சரி.

ஆனால் ஒளிக்கதிர்போல் உலாவி வந்தது.

பெருமூச்சு

நேற்றிரவு T.V. ஓய்ந்தபின், கூடத்திலிருந்து ரகஸ்யத்தில் குரல்கள், எட்டுகின்றன.

"நானே கண்ணாலே பார்த்தேன். யார் என்ன பண்ண முடியும்?"

"ம்! எவ்வளவு ஆசையாக வளர்த்தோம்!" அவள் அங்கலாய்த்தாள்.

"நடு வயத்துலே!—பாவி!"

"ஐயையோ!"

"உஷ் அப்பாகிட்டே மூச்சுவிடாதே. ஓடிப்போயிடுத்துன்னே நினைச்சுண்டிருக்கட்டும். உண்மை தெரிஞ்சா, இடிஞ்சு போயிடுவா."

ஓஹோ, துரோகங்கள் இப்படியும் நடக்க முடியும். "அசுவத்தாமாஹத" (குஞ்சர: இல்லை)

"எனக்காக"

ஓயாத Symphony

Thank you, Babu

என்றும் உனது

நான்

—தினமணி கதிர்

# 15. ஜனனியிலிருந்து சிந்தா நதி வரை

தாய்மார்களே, பெரியோர்களே, நமஸ்காரம். சகோதர சகோதரிகளே ஆசிர்வாதம். நெடுநாட்களுக்குப் பின், இந்தப் பக்கங்களில் உங்களைச் சந்திக்கிறேன். நான் பிறந்தகம் வந்திருக்கிறேன்.

எழுத்தாளனுக்கு இருந்தாலும் இருக்கலாம், எழுத்துக்குப் பிறந்தகம் கிடையாது. அது ஒரு எடுப்பார் கைப் பிள்ளை. ப்ளாட்பாரத்திலிருந்து, ஐந்தடுக்கு மாடிவரை, அங்கிருந்து பரணசாலை வரை—அது திரியும் ரோந்து அப்படி.

விருதைப் பெற நான் டில்லிக்குச் சென்றிருந்தபோது, டில்லி வானொலியில் என்னைப் பேட்டி கண்டார்கள். பேட்டி கண்டவர், பேட்டி வாக்கில், 'ஜனனியிலிருந்து சிந்தா நதி வரை' என்ற சொற்றொடரை உபயோகித்தபோது, என்னில் நேர்ந்த கிளர்ச்சியை அவர் அறியமாட்டார். ஏனெனில் 1948இல் கலைமகளில் ஜனனி வெளிவந்தபோது. அதன்மூலம்தான், நான் என் எழுத்துக்களில் சாதாரணமாகக் கையாளும் விஷயம், நான் கதை சொல்லும் போக்கு, என் உரைநடை இத்யாதி அம்சங்கள் வாசகர் கவனத்தைப் பற்றி இழுத்தன.

அந்தக் கதையை எழுதினபோது எனக்கு வயது 32. அதை எழுதியதன் அடிப்படை நோக்கம் எழுத்து மூலமேனும் அவளைப் பழிவாங்க வேண்டும். அவளை மனித ஜன்மம் எடுக்கச் செய்து அதில் அவளை உழலவைத்து, அவள் என்னைப் படுத்துவதுபோல், அவளும் படவேண்டும் என் வாழ்க்கையில் அப்போது, பலவிதங்களிலும் மிக்கச் சோதனையான கட்டம். வேதனை பொறுக்க முடியாமல், ஓரிரவு உயிரை மாய்த்துக்கொள்வதென்று சமுத்திரத்துக்குப் போய்விட்டேன் என்றால் பாருங்களேன்.

கரையோரம் ஒரு ஓடத்தின்மேல் சாய்ந்து நின்றபடி, அலைகளுள் புக ஏற்ற சமயத்துக்குக் காத்துக்கொண் டிருக்கையில்.

யுகாந்தரமாய்ச் சிகரங்களில் வெண்ணுரையைக் கக்கிக் கொண்டு திரண்டுவந்து வியர்த்தமான கோபத்தில், கரையை அறைந்துவிட்டு ஓயாத மறுமுயற்சியில் மீளும் அலைகளில்,

நுண் உணர்வின் உட்செவியில் ஒரு சேதி கேட்டது.

"இதோ நீ பார்த்துக் கொண்டிருக்கிறாயே, உனக்கு முன்னாலிருந்து, உன் மூதாதையர் முன் அவர்கள் மூதாதை யர்க்குமுன், காலம் கடந்த காலத்திலிருந்து ஓயாத இந்தக் கடலியக்கம், இதுவே சிருஷ்டியின் ஒரு சாயல்தான். இதில் நீ உத்தேசித்திருக்கும் உன் சாவு எம்மாத்திரம், ஒரு திவலை காணுமா? இந்த அலைகளுக்கு இன்னும் அலுக்கவில்லை. ஆனால் அதற்குள் உன் வாழ்க்கை உனக்கு அலுத்து விட்டதா? காத்திருப்பதைத் தவிர என்ன வேலை? பிறவியின் நோக்கமே காத்திருப்பதுதானே! ஆகையால் காத்திரு."

எண்ணத்திலிருந்து மீட்சி எண்ணத்தினால்தான்.

சமுத்திரத்திலிருந்து மீண்டேன் ஆனால் சோதனைகள் குறையவில்லை.

அன்று நான் சீற்றம் கொண்ட வாலிபனாக இருந்தேன். I was an angry young man இன்று—இத்தனை நீண்ட பிரயாணமும் வந்துவிட்டேன். புருவங்கள்கூட நரைத்து விட்டன. இன்னமும் காத்துக்கொண்டிருக்கிறேன். எதற்கு?

என் எண்ணங்களை, எரிந்துபோன கனவுகளை அசை போடுகிறேன்.

இப்படி மீண்டும். எண்ணங்களை, எரிந்துபோன கனவுகளை நினைவில் வரவழைப்பதில் காகிதக் கப்பல் பிரயாணத்தில் ஒரு புதுப் பரபரப்பை உணர்கிறேன்.

ஜன்னலுக்கு வெளியே, கைக்கு எட்டாத உயரத்தில் ஆடும் செம்பருத்திப் பூவின் சிரிப்பில்,

இருளில், படுக்கையில் என் முகத்தை எரிக்கும் யாருடையதோ பெருமூச்சில், அழுத கண்ணீர் காயுமுன், வானவில் போல், குழந்தை முகத்தில் வெடிக்கும் சிரிப்பில்,

இன்றோ, என்றோ, இனி எப்போ வேணுமானாலும் என் மரத்திலேயே பழுத்துக் கனத்துத் தக்கவன் பறிக்கக் காத்திருக்கும் கனியில், நள்ளிரவில் திடீரென, ஆணோ பெண்ணோ இருளை வெட்டும் வீறலில், தென்னையில் அவளுடைய கொண்டைபோல் முண்டிய இளநீர் முடிச்சில், அஸ்தமித்தபின் கூட்டுக்கு வழி தப்பி, பறக்கும் உயரத்தில் பறவை தெரியாது, பேடுக்குக் கொடுக்கும் குரலின் கூவலில்,

நள்ளிரவில் மொட்டை மாடியில் யாரோ ஓடுவது போன்ற திடும் திடு'மில் (திருடனா?)

ஒரு ராகத்திலிருந்து ராகத்துக்கு இடையே அதை மாற்றத் துளிர்த்து நிற்கும் அனுஸ்வரத்தின் துடிப்பில்...

கர்ப்பக்ருஹத்தின் இருளில் கர்ப்பூர ஹாரத்தி முகத்தை ஏற்றுகையில் திடீரென அவள் விழி மலர்ச்சியில், கன்னங்களை குழித்த புன்னகையின் மர்மத்தில், மரத்திலிருந்து கழன்று உதிரும் இலையில் வெளிப்படும் ஸஹிக்கொணா துக்கத்தில், வாசலில் கொட்டிய ஆரத்தியின் வாரியிரைத்த ரத்தச் சிவப்பில், அவள் மூக்குத்தியின் ஜ்வலிப்பை நினைவு மூட்டும் கோடை மின்னலின் கொடியில், அவள்தான் அப்படித் தோன்றி கண்ணாமூச்சி காட்டித் திரிகின்றாள்.

'என்னைப் பார்! என் அழகைப் பார்! காத்திருக்கச் சொன்ன மர்மமும் பொருளும் இதுதானோ என்றுகூடத் தோன்றுகிறது.

என் நெஞ்சத்தின்மேல் அவள் 'திமி திமி'யில், அவள் உள்ளங்கால்களில் பற்றிக்கொண்ட என் நெஞ்சத்தின் ரத்தக் கசிவுதான் அவள் இட்டிருக்கும் மருதாணி.

விருது விழாவில் நான் நிகழ்த்திய உரையில் சிந்தா நதி பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறேன்.

சிந்தாநதி:

நினைவுப்ரவாஹம்
மக்கள், சம்பவங்கள், புழுக்கங்கள், ஏக்கங்கள்,
உருவங்கள்
உருவகங்கள், ஸ்தூலங்கள், அருபங்கள்,
நினைவுக்குப் பிடிவழுக்கி, அதீத அனுமானங்கள்,
சொல்லப்படும் சம்பவங்கள், மேம்பாடுக்குக்
சொல்பமாய்,
நலுங்கலாய், ஏன் கட்டடங்கள் கூட இலாது
படினும் அவைகளின்
மர்மக் கோடி காட்டலில்
அடித்வனிகளில்

எட்டத்தில் ஏதோ தரிசன சாத்யத்தின் சாயை
காட்டிக்கொண்டு
சமயங்களில் மந்த்ரோச்சடனங்கள் போன்ற சப்த
நயங்களுடன்
ஸாஹஸம் புரிந்துகொண்டு
வாசகனுள் உறங்கிக்கிடக்கும் சுயப்ரக்ஞையை
(அதாவது உயிரின்
ஒருமையை, தேடலில் ஆத்மாவின் தனிமையை)த்
தட்டி எழுப்பி,
கட்டங்களில் சொல்வேகம் கவிதாநயத்தையும்
உபநிஷத்தைத்
தன்மையையும் அடைந்து—
—இத்தனையும் சேர்ந்துதான் சிந்தா நதி.

நிகழ்ச்சி நினைவில் ஊறி ஊறிச் சரித்திரமாகி, சரித்திரம் நினைவாகி, நினைவு கதையாகி, கதையைச் சொல்லிச் சொல்லி, சொல், பிசிர்விட்டு, சொல்லின் உருவேற்றத்தில் விஷயம் மெருகேறி, ரத்தத்திலேயே தோய்ந்து, நம் மனத்தையும் மாண்பையும் ஊட்டி வளர்க்கும் கவிதையாகி விடுகிறது.

நிகழ்ச்சியின் கிளர்ச்சி அடங்கி ஒய்ந்து பின்னோக்கில், வாழ்க்கையைக் காவியமாய்ப் பார்க்கக் கொடுத்து வைக்கும் போது, அமைதியின் சிறகுகள் ஆசியின் மெத்தில், மேல் இறங்கும்போது, காத்திருக்கச் சொன்னதன் காரணத்தை அனுபவமாகச் சில சமயங்களில் உணர்கிறோம்.

என் வாழ்க்கையின் அந்திம வேளையில், என் நக்ஷத்ரத்தின் வெளிச்சத்தில் சிந்தா நதிக் கரையோரம், தன்னந் தனிமையில் உட்கார்ந்து எண்ணங்களை அசைபோடுகிறேன்.

**1984** கடைசி ஒரு நாள் தினமணிக் கதிர் காரியாலயத்துக்குச் சென்றிருந்தபோது, ஆசிரியர், ''வாரம் இரண்டு பக்கங்கள் உங்களுக்காக ஒதுக்குகிறேன், எழுதுங்களேன்'' என்றார்.

நான்: ''எதைப்பற்றி?''

ஆசிரியர்: ''பூமிமேல் எதுபற்றி வேணுமானாலும் உங்களுக்குத் தோன்றியபடி.''

நான்: ''சரிதான். இப்பத்தான் உங்கள் சிப்பந்தி, கதிருக்கு வந்த கடிதம் ஒன்றைக் காண்பித்தார். 'லாசரா என்னத்தை எழுதுகிறார்? ஒன்றுமே புரியவில்லை. மண்டையைப் பிய்த்து கொள்ளலாம்போல் இருக்கிறது'. அப்படியுமா என்னை எழுதச் சொல்கிறீர்கள்?''

ஆசிரியர்: ''பிய்த்துக் கொள்ளட்டுமே! இரண்டு பக்கங்கள்தானே?''

ஒரு சிறுகதை எழுதவே சாதாரணமாக மூன்று மாதங்கள் எடுத்துக்கொள்ளும் எனக்குக் கதிரின் அச்சுயந்திரங்களுக்கு வாரா வாரம் என் பங்குத் தீனியைத் தவறாமல் போட இயலுமா? நான் ஓயாமல் எழுதுபவன்; ஆனால் வேகமாக எழுதப் பழக்கப்பட்டவன் அல்லன்; இனிமேலும் வராது, எனக்குத் தெரியும்.

தவிர, வாரா வாரம் என்னத்தை எழுதுவது?

பிடி கொடுக்காமல் ஏதோ முனகிவிட்டு நழுவிவிட்டேனாலும் வெட்டென விட்டொழிக்க முடியவில்லை. 'விண் விண்' பொறுக்காமல், ஒருநாள் எழுந்து உட்கார்ந்து எழுத ஆரம்பித்ததன் விளைவாய்...

* திரு கஸ்தூரி ரங்கன் நெஞ்சில் நட்ட எண்ணத்தின் முகூர்த்தவேளை கிண்டி மூக்கிலிருந்து சொட்டிய நீர், நதியாகப் பெருக்கெடுத்துவிட்டது.

---

* கதிர் ஆசிரியர்

எழுத—எழுத, எழுதுவதற்கு விஷயம் விடாது வளர்ந்து கொண்டிருந்தது. எனக்கே பெரும் வியப்பு. இந்தத் தொடர் 1986இல் புத்தக அந்தஸ்து பெற்று வெளிவந்தது.

சிந்தா நதியில் யார் இல்லை? நான் இருக்கிறேன். நீங்கள் இருக்கிறீர்கள். நம் குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் மூலம் நாளைப் பெருகப் போகும் மானுடத்தின் சந்ததிகள் இருக்கின்றன. ஜீவனின் பரம்பரையே இருக்கிறது.

ஓடும் தண்ணீரில், நேற்றையத் தண்ணீர், இன்றையத் தண்ணீர், நாளையத் தண்ணீர் என்று கராமும், பாகுபாடும் பிரிக்க முடியாது; என்றுமே இன்றுதான். நதியின் ஓட்டமே தான் அதன் உயிர், உயிர்ஸ்தானம்.

சிந்தாநதி ஜீவநதி.

ஆண்டவன் தன் உருவையே அதில்தான் உணர்ந்தான். தன் இடம் தெரியாமல் அதில் மூழ்கிக் கிடக்கிறான்.

தாய்மார்களே, பெரியோர்களே, என் நமஸ்காரங்கள். சகோதர சகோதரிகளே, என் ஆசிகள்.

சிந்தா நதி தீரே
சிந்தா விஹாரே...

—கலைமகள்

# 16. எழுத்தாளன் பாடும் கீதம்

*[20-2-1990, சாகித்ய அகாதெமி விருது விழாவில் நிகழ்த்திய உரையின் தமிழாக்கம்]*

எழுத்தாளர்களும், இலக்கிய விற்பன்னர்களும் கூடியிருக்கும் இந்த மகத்தான சன்னிதானத்தின் முன் நிற்க எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு அகாதெமிக்கு என் நன்றி. இவர்கள் நம் நாட்டுப் பண்பாட்டின் பல்வேறு முகங்கள், அதேசமயம் பாரதத்தின் பாரம்பர்ய ஒருமைப்பாடின் நிதரிசனமாக தரிசனம் தருகிறார்கள்.

இந்த விருதை வழங்கியதற்கு அகாதெமிக்கு என் வந்தனம். ஆனால், நான் வந்திருக்கும் தேசத்தின் பகுதியில் ஒருமனதான அபிப்பிராயம், விருது என்னை மிகத் தாமதமாக அடைந்திருக்கிறது என்பது. குறைந்தபட்சம் இருபது வருடத் தாமதம்.

ஆனால், வராமலேயே போவதற்கு, இந்தமட்டுக்கும் வந்ததே, அதுமேல் அல்லவா? இப்படி சந்தர்ப்பங்களில் வழக்கமாகச் சொல்லிச் சொல்லிச் 'சப்'பிட்டுப் போன பாஷை என்றாலும் எவ்வளவு உண்மை! ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்டுச் சிருஷ்டி எழுத்து ஈடுபாடின் நிறைவாய இந்தத் தருணத்தை ருசிக்க, ஆண்டவன் அவனுடைய பரம கருணையில் என்னை விட்டு வைத்திருப்பதற்கு இன்புறுகிறேன். குற்றம் சொல்ல எண்ணமில்லை. ஆனால் இந்த சமயம் வேறுவிதமாகவும் அமைந்திருக்கக்கூடும். அப்படி நேர்ந்திருப்பின் என் வயதில் அது ஆச்சரியமுமில்லை.

ஆனால் உண்மையில். இந்த சமயம் என் பெற்றோர்களைச் சேர்ந்தது என்று பணிவுடன் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். எப்பவுமே அது அவர்களுடையதுதான். ஏனெனில் பெற்றவர்களின் ஆயிரம் ஆசைகளின் ஆவாஹனமாகக் குழந்தை விளங்குகிறது. அந்த முறையில் மனிதனின் லக்ஷியமாக நிறைவேறாத அவன் லக்ஷியங்களின் தொடர்பாக மகன் விளங்குகிறான்.

யாவற்றிற்கும் மேலாக விருதுக்கு சிந்தா நதியைத் தேர்ந்தெடுத்தமைக்கு அகாதெமிக்கு என் பாராட்டுக்கள்.

மக்களிடையே விருது வாங்கியவர் உள்பட பரவலாக ஒரு அபிப்பிராயம் நிலவி வருகிறது. மிகையான தாமதத்தின் காரணமாக எழுத்தாளன் தன் சிருஷ்டி சக்தி அதன் சிகரத்தை எட்டி இறங்கிவிட்ட பின்னர் எழுதிய புத்தகத்துக்கே விருது வழங்கப்படுகிறது என்று. ஆனால் 'சிந்தா நதி' விஷயத்தில் அப்படி நேரவில்லை. இந்த நூல் என் எழுத்து அடைந்திருக்கும் மெருகில் உள்ளடக்கம், உத்தி. நடை அம்சங்களில் என முதிர்ச்சிப் பக்குவத்தின் சிறப்பில் என்னைக் காட்டுகிறது. நான் மட்டும் இப்படிச் சொல்லவில்லை. என் விசுவாசிகளின் கருத்தையும் பிரதிபலிக்கிறேன். காத்திருந்தது வீணாகவில்லை.

விருதின் சேதி வெளியானபோது சிந்தாநதி, சுய வரலாற்றுக் கட்டுரைத் தொகுதி என்று விவரிக்கப்பட்டது. ஆனால் அப்படி அன்று.

**சிந்தா நதி:** நினைவுப்ரவாகம். மக்கள், சம்பவங்கள், புழுக்கங்கள், ஏக்கங்கள், உருவங்கள், உருவகங்கள், ஸ்தூலங்கள், அருபங்கள் நினைப்புக்கு வழுக்கிய அதீத அனுமானங்கள், சொல்லப்படும் சம்பவங்கள், மேம்பாட்டுக்குச் சொல்பமாய், நலுங்கலாய்—ஏன் கட்டடங்கூட இலாது படினும் அவைகளின் அதிசூக்ஷ்மமான

கோடி காட்டலில்,

அடித்வனிகளில்,

ஏதோ தரிசன சாத்ய சாயை காட்டி,

சமயங்களில் மந்த்ரோச்சாடனம் போன்ற சப்த நயங்களில் ஸாஹஸம் புரிந்துகொண்டு,

வாசகனுள் உறங்கிக் கிடக்கும் சுயப்ரக்ஞையைத் தட்டி எழுப்பி (உயிரின் ஒருமையை, தேடலில் ஆத்மாவின் தனிமையை உணரச் செய்து) கட்டடங்களில் சொல் வேகம் கவிதை நயத்தை, உபநிஷத் கதைத் தன்மையை அடைந்து —இதுதான் சிந்தாநதி.

சிந்தாநதியெனும் சிருஷ்டி சொல்லும் பாணியிலும், பாஷையிலும் செய்த சாதகம் மாத்திரம் இல்லை. அதையும் மீறியது. ஏனெனில் பாதிக்கப்பட்டவர்கள் மெனக்கெட்டு என்னைத் தேடி வந்திருக்கிறார்கள். புத்தகத்தில் ஏதோ ஒரு பக்கத்தில், இங்கே ஒரு வரி, அங்கே ஒரு சொல் அவர்கள் பட்டுக்கொண்டிருக்கும் சோதனைக்கு, துயரத்துக்கு ஆறுதலாய் புண்ணுக்கு ஒளஷதமாய் அமைந்திருந்ததைச் சொல்லிக்கொள்ள, கண்களிலிருந்து செதிள்கள் உதிர்ந்து இதுகாறும் அவர்கள் வாழ்க்கையைப் பற்றிக்கொண்டிருந்த நோக்குக்குப் புதுப் பரிணாமம் தந்ததை என்னோடு பங்கிட்டுக்கொள்ள அதில் அவர்களுக்கு ஓர் ஆறுதல். இப்படி என்னிடம் அவர்கள் மனம் திறக்கையில் அதற்குச் சாக்ஷி நிற்பது பயம் தருகிறது. ஆனால் அவர்கள் சுமை இளக என் சொல் உதவிற்று என்பதை நினைக்கையில், நான் எழுதியது வீணில்லை என்ற நிறைவு பெறுகிறேன்.

சதிகொண்டு மனிதனுக்கு மனிதன் பகை மூட்டும் அரசியலுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை.

என்னுடைய பொருட்டு. மனிதனின் நம்பிக்கை, கடவுளிடம் நம்பிக்கை, காலக்ரமத்தில் தன்மேல் நம்பிக்கையில் தெளிவடைகிறது.

மனித ஆவேசம், உத்வேகம் (THE SPIRIT OF MAN) இத்துடன்தான் எனக்குச் சம்பந்தம். அடங்காது, அஞ்சாது, முன்னேறிக்கொண்டு மேலும் மேலும்—மனிதச்சுவடு படாத ஸ்தலத்தில் இன்னமும் கணிக்காத சிந்தனைக் கடல்களில்...

வாழ்க்கையின் ரஹஸ்யத்தைப் புரிந்துகொள்ள அதன் வ்யவஸ்தையைச் சோதித்து, கிளறி அதற்கு நாம் கற்பிக்கும் அர்த்தம் தவிர வேறு இல்லை என்று அறிந்த பின்னரும் தன் கம்பீரத்தில், துணிச்சலில் கற்பிக்கும் சக்தியில், உயிரின் யாத்திரைக்கு நோக்கம் உண்டாக்கி, தலைவிதியை மனிதனின் மஹாஸங்கல்பமாக மாற்றி அமைக்கும் ஆவேசம் (THE SPIRIT OF MAN) இதுதான் என்னுடைய பொருட்டு.

என்பாடு மனித குடும்பத்துடன்—அவன், அவனுடைய ஸ்திரீ, மகவு என வாழ்க்கையின் தர்மமே ஆகிய குடும்ப மெனும் மும்மூர்த்தம்.

குடும்பப் பாசம், அதன் படிப்படியான விரிவில் மனித வர்க்கத்தின் மேலேயே அன்பாக முதிர்ந்து, பிறகு அதுவும் முறையாக, எல்லையற்ற விதவிதங்களில் சௌந்தர்யம் கொண்ட ஜீவராசிமேல் பரிவாக மாறும் மானிடத்துடன் தான் என் பாடு.

சுருங்கச் சொல்லின் (THE SONG OF THE SPIRIT OF MAN) மானிடத்தின் கீதத்தில் தான் எனக்கு இழைவு.

உங்களுக்கு நான் சொல்கிறேன்: எழுத்தாளன் மானிடத்தின் கீதத்தின் பித்துப் பிடித்தவன். ராமகிருஷ்ண பரமஹம்ஸரைக் கடவுளின் பித்துப் பிடித்தவர் என்று ரொமெயின் ரோலந்த் விவரிக்கிறார். அதுபோல் கீதம் அவனுக்குச் சொந்தமாயிருந்த நிலை மாறி அவனே அதற்குச் சொந்தமாகிவிடும்போது எழுத்தாளனால் பாடாமல் முடியாது. காலத்தினால், மனிதனால், எதனாலும், யாராலும், என்ன இடையூறானாலும் அதை மீறி எழுத்தாளனையும் மீறி, கீதம் ஒலித்துக்கொண்டிருக்கும். அதுவே அவன் சோதனை (சிலுவை: CROSS) அவனுடைய சோதனையில்தான் அவனுடைய மஹத்தான பெருமையே.

★

MK. Color Process, Madras-14.
Phone : 841478